மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
# உதயன்
விலை - 20
பக்கங்கள் - 28+4
சுடர் 32 | கதிர் 34 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி15, வெள்ளிக்கிழமை 30.12.2016

# 2017இல் அரசை கவிழ்க்க மகிந்த திட்டம்



## வெளிநாட்டு ஊடகர்களை அழைத்து அவரே தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 30

அடுத்த ஆண்டில் மைத்திரி - ரணில் அரசைக் கவிழ்ப்பதுதான் தனது நோக்கம் என்று >> 25

## எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்கு; தயாராகிறது கபே

யாழ்ப்பாணம், டிசெ. 30

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எல்லை நிர்ணயக் குழு மற்றும் மாகாண சபைகள் அமைச்சு என்பவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக கபே அமைப்பின் நிறை >> 25

## சுரேஸின் கோரிக்கையை ஆராய்வராம் சம்பந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 30

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழி நடத்தல் குழுவிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியேற வேண்டும் என்று, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரன் முன்வைத்த கோரிக்கையை பரிசீலிப்போம் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார். கூட்டாட்சி (சமஷ்டி) >> 25

## சட்டவரைவு தோற்க ஐ.தே.க. காரணமா?

### ராஜாங்க அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 30

அபிவிருத்திகள் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவு குறித்து நாட்டின் ஒன்பது மாகாண சபைகளின் முதலமைச்சர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துரையாடவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன குற்றஞ்சாட்டினார்.

"இந்தச் சட்டவரைவு மீளத் தயாரிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு முன்னர் மாகாண சபைகளில் முன் >> 25

## வட கடலில் மீன்பிடி
## இலங்கை – இந்தியத் தரப்புக்கள் திங்களன்று கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 30

மீன்பிடி விவகாரம் தொடர்பில் இலங்கை - இந்தியத் தரப்புகளுக்கு இடையிலான பேச்சு திட்டமிட்டபடி எதிர்வரும் 2ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்று, கொழும்பு மீன்பிடி அமைச்சின் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில், இலங்கை - இந்திய அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு நேற்று நடைபெற்றது. கொழும்புப் பேச்சுக்கு முன்னோடியான >> 25

## அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம்
## மைத்திரியிடம் வருத்தம் வெளியிட்டார் சீனத் தூதுவர்

யாழ்ப்பாணம், டிசெ. 30

கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் யாங்லியாங் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் புதன்கிழமை அவசரமாகச் சந்தித்து, அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு குறித்து எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக கவலை >> 25

## இறுதிப் போருக்கு இந்தியா உதவியது
### மகிந்த மீண்டும் ஒப்புதல்

யாழ். டிசெ. 30

இலங்கையில் நடைபெற்ற போருக்கு இந்தியா பங்களிப்புச் செய்ததுதான். இது தொடர்பில் அவர்கள் (இந்தியா) கூறுவது உண்மை. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். வெளிநாட்டு ஊடகங்களின் பிரதிநிதிகளுடன் >> 25




## புதிய அரசமைப்பு உருவாக்கப்படுமா?
### மகிந்த எழுப்பும் சந்தேகம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

புதிய அரசமைப்பு வருமா? என்பது குறித்து எனக்குச் சந்தேகம் நிலவுகின்றது.

இப்படிச் சொல்லியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

கொழும்பில் வெளிநாட்டு ஊடகங்களின் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோருடன் நீங்கள் சந்திப்பு நடத்தியிருந்தீர்களே! என்ன பேசப்பட்டது என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அரசமைப்பு >> 25

## அரசமைப்பு உருவாக்கத்தில்
## மகாநாயக்கர்களின் புத்திமதிப்படி நடந்துகொள்ள ஐ.தே.க. திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

அரசமைப்பு மற்றும் அரசியல் தீர்வை மகாநாயக்க தேரர்களின் யோசனைப்படியே தயாரிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மகா நாயக்க தேரர்கள் இருவரையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்த பின்பே மேற்படி முடிவை அந்தக் கட்சி எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சனிக்கிழமை மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீட மகா நாயக்கர்களை சந்தித்துப் பேசினார். புதிய அரசமைப்பு ஊடான அரசியல் தீர்வு தொடர்பில் பேசுவதற்காக அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்றே இந்தச் சந்திப்பை பிரதமர் மேற்கொண்டிருந்தார்.

மகாநாயக்க தேரர்கள் அரசமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்ற அவர்களின் >> 25

## உத்தரவாதம் தந்த பின்னர்தான் அரசுக்கான ஆதரவை ஆராயலாம்
### புளொட் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

அரசிடம் உத்தரவாதம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே, ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஒரு வருட கால அவகாசம் வழங்குவது தொடர்பில் பரிசீலிக்க முடியும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் >> 25

## அபிவிருத்திச் சட்டவரைவு 8 சபைகளிலும் தோற்கடிப்பு
### கிழக்கின் முடிவு ஜனவரியில்

யாழ்ப்பாணம், டிசெ. 30

கிழக்கு மாகாண சபை தவிர்ந்த நாட்டில் உள்ள ஏனைய எட்டு மாகாண சபைகளிலும், அபிவிருத்தி சிறப்பு ஏற்பாடுகள் சட்ட வரைவு தோற்கடிக்கப்பட்டது.

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த மேல் மாகாண சபையிலும் நேற்றைய தினம் இந்தச் சட்ட வரைவு தோற்கடிக்கப்பட்டது. கிழக்கு >> 25

## சிறுவர் மருத்துவமனை அமைக்க யாழ்ப்பாண நகரில் காணி தேவை
### நன்கொடையாகக் கோருகிறார் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலை அமைப்பதற்குரிய 1.5 ஏக்கர் காணியை, வைத்தி >> 25

## நாட்டின் சட்டத்தைத் தெரியாதவரே சட்டவரைவைத் தயாரித்துள்ளார்
### சிறப்பு அபிவிருத்தி ஏற்பாடு குறித்து அமைச்சர் ராஜித கருத்து



யாழ்ப்பாணம், டிசெ. 30

இந்த நாட்டின் சட்டம் தொடர்பில் தெரியாத முட்டாள் ஒருவரே சிறப்பு அபிவிருத்திச் சட்டவரைவை உருவாக்கியிருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். கொழும்புத் தொலைக்காட்சிக்கு >> 25




எமது நடைமுறைக் கணக்கு மூலம் நீங்களும் வளர்ச்சி பெறுங்கள்

- நடைமுறைக் கணக்கு
- தனிநபர் கடன்
- சேமிப்புக் கணக்கு
- வீட்டுக் கடன்
- வாகனக் கடன்
- கல்விக் கடன்
- லீசிங்
- வர்த்தகக் கடன்

உங்கள் வளர்ச்சிக்கு உதவி புரியும் சேவைகள் பற்றி மேலும் விபரங்களை அறிந்து கொள்ள எம்மிடம் வாருங்கள்.
24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000 | www.dfcc.lk

DFCC வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களின் வாகன பெர்மிட் 2.5 கோடி ரூபாவுக்கு விற்பனை

## ஜே.வி.பி. எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதி சுமார் 2.5 கோடி ரூபா வரைக்கும் விற்கப்படுகின்றன. எனவே அவர்களின் வாகனங்களை 5 வருடங்களால் அரசு மீளப்பெறவேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தவின் ஊழல் ஆட்சி கவிழ்க்கப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆட்சிபீடமேறிய மைத்திரி–ரணில் அரசும் மகிந்த அரசுபோல்தான் உள்ளது. 2017ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு.

நாட்டில் பொருளாதாரம் மேலும் மேலும் வீழ்ச்சியை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றது. நாட்டின் கடன்சுமை அதிகரித்துள்ளது. கடன் அடைப்பதற்கு ஏற்ப நாட்டில் வருமானம் போதாது. வரி என்ற பெயரில் மக்களின் பணத்தைக் கொள்ளையடித்தே நாட்டின் பொருளாதாரத்தை சரி செய்வதற்கும் வெளிநாட்டுக்கடன்களை அடைப்பதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கின்றது. இப்படியானதொரு இக்கட்டான நிலையில் நாடு இருக்கையில், அமைச்சர்களுக்கான சலுகைகள் மாத்திரம் ஒன்றன்பின் ஒன்றாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது எந்தவகையில் நியாயம்? மக்களுக்கு சேவை செய்வதற்காக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்கப்படுவது நியாயம். ஆனால், ஐந்து வருடங்கள் கழித்து அவற்றை மீண்டும் அரசு பெற்றுக் கொள்ளும் வகையில், நாடாளுமன்ற விவகார அமைச்சின் ஊடாக பெற்றுக் கொடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும். இந்த யோசனையை நாம் முன்வைத்தபோதும் அரசு அதை ஏற்கவில்லை. மாறாக, ஒரு வாகனத்துக்கு மாதாந்தம் 7 லட்சம் ரூபா மாத வாடகை என்ற அடிப்படையில் 58 வாகனங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஐந்து வருடங்கள் முடிவில் அந்த வாகனங்கள் அரசுக்குக்கூட சொந்தமாகாது. இந்த அநியாயத்தை எப்படி ஏற்றுக்கொள்வது? இது தவிர நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தைக்கூட நாடாளுமன்ற உறுப்பினர்கள் விற்பனை செய்கின்றனர். நான் அறிந்து சுமார் 2.5 கோடி ரூபாவுக்கு விற்கப்படுகின்றன. தனக்கு கிடைத்த 6 அனுமதிப்பத்திரங்களை 1.25 கோடி ரூபா வீதம் விற்பனை செய்ததாக மகிந்தானந்த அழுத்தகமே கூறியுள்ளார்.

ஏற்கனவே அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாவித்த வாகனங்களை ஏன் இந்த 58 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்க முடியாது? நாடு பொருளாதார ரீதியில் தள்ளாடும்போது இப்படியொரு திட்டம் தேவைதானா? - என்கிறார். (வ-4)

### அபிவிருத்திச் சட்ட வரைவைத் தோற்கடித்து

# அரசைக் கவிழ்க்க நினைப்பது பகல் கனவு என்கிறது ஐ.தே.க.

யாழ்ப்பாணம், டிசெ. 30

அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவை மாகாண சபைகளில் தோற்கடிப்பதன் ஊடாக இந்த அரசைக் கவிழ்க்கலாம் என்பது வெறும் கனவு மாத்திரமே. மாகாண சபை உறுப்பினர்கள், பகலில் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும், இரவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கும் வேலை செய்பவர்களே.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவு நாட்டின் அபிவிருத்தியை இலக்காக கொண்டே கொண்டுவரப்படவுள்ளது. மாறாக அதிகார பேராசைக்காக அல்ல. இந்தச் சட்டவரைவை எதிர்ப்பதால் அரசைக் கவிழ்த்து விடலாம் என்பது வெறும் கனவு மாத்திரமே. அதனை இந்தச் சட்டவரைவை எதிர்ப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நலன்புரி அரசுக்குப் பெயர்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சுய நோக்கத்துக்காக இந்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு சேறு பூசுவதற்காக அபிவிருத்திச் சட்டவரைவை எதிர்க்கின்றனர். இதனால் எமக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. நாட்டின் துரித அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே இந்தச் சட்டவரைவு கொண்டுவரப்படவுள்ளது.

மகாவலி அபிவிருத்தித் திட்டம், கல்லோயா அபிவிருத்தித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது இவ்வாறான சிறப்புச் சட்டவரைவுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. சாதாரண மக்களுக்கும் அபிவிருத்தி சென்றடைவதற்கு மாகாணங்களினது ஒத்துழைப்பு அவசியமாகும்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பசில் ராஜபக்ச உள்ளிட்ட சிலர் தங்களது அமைச்சு பொறுப்பைவிட ஏனைய அமைச்சுக்களில் தலையீடு செய்திருந்தனர். அப்போதெல்லாம் சத்தமில்லாமல் இருந்தவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு எடுக்கப்படும் முக்கிய வேலைத்திட்டங்களை எதிர்க்கின்றனர்.

இந்தச் சட்டவரைவினால் மாகாண சபைகளின் அதிகாரம் ஒருபோதும் குறைக்கப்படாது. மாகாண சபைகளில் சட்டவரைவு தோற்கடிக்கப்பட்டாலும் கொழும்பு அரசால் சட்டவரைவை நடைமுறைப்படுத்த முடியும். மாகாண சபையில் உள்ளவர்கள் பகலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இரவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் வேலை செய்பவர்கள் போல் தங்களைக் காட்டிக் கொள்கின்றனர் - என்றார். (வ-5)

# இராணுவத்தின் சிகை அலங்கரிப்பு நிலையங்களை மூட வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 30

இராணுவத்தினரால் நடத்தப்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்கள் வடக்கின் சில மாவட்டங்களில் இன்னமும் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. அவை விரைவில் மூடப்பட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவர் க.நாகராசா தெரிவித்தார்.

வடக்கில் இராணுவ முகாம்களை அமைத்துள்ள இராணுவத்தினர் பல இடங்களில் சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் திறந்துள்ளனர். அவர்களின் இந்தச் செயற்பாடு காரணமாக, சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடத்தி அதன் வாழ்வாதாரத்தில் தங்கியிருந்த பலருக்குப் பாதிப்பு ஏற்பட்டது. இந்த விடயத்தை வடக்கு மாகாண ஆளுநருக்குச் சுட்டிக்காட்டியிருந்தோம். இதன் பின்னர் யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரால் நடத்தப்பட்டு வந்த சிகை அலங்கரிப்பு நிலையங்கள் சில மூடப்பட்டன.

தற்போது வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் சில தொடர்ந்தும் இயங்குவதாக அறிகின்றோம். அவையும் வெகுவிரைவில் அகற்றப்படும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ந-5-7)

# மத்திய கிழக்கு வானூர்திகள் வருகையில் தாமதம்

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்கு நேற்று வரவிருந்த மத்திய கிழக்கு வானூர்திகள் பல தாமதமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலநிலையில் ஏற்பட்டுள்ள அசாதாரண மாற்றமே அதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி டுபாய், குவைத், கட்டார் மற்றும் ஓமான் ஆகிய மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இலங்கை வரும் வானூர்திகள் தாமதமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டது. டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 5 மணிக்கு வருகை தரவிருந்த யு.எல். 208 ஆம் இலக்க வானூர்தி நேற்றுப் பிற்பகல் ஆகியும் வருகை தரவில்லை என்று வானூர்தி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-4)

# நிதியை வீணாக்குபவர் எவரும் அரசில் இல்லை

## அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 30

அரச நிதியை வீண் விரயமாக்குகின்ற ஜனாதிபதியொருவரும் பிரதமரும் எம்மிடம் இல்லை. அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற அரசும் எம்மிடம் இல்லை. எம்முடைய அரசு வீண்விரயங்களைப் பெருமளவில் குறைத்துள்ள அரசாகும்.

இவ்வாறு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள நத்தார் மரத்தை ஐந்தாவது நாளாகத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நத்தார் மரத்தை நிர்மாணிக்கும் பொழுது பல்வேறுபட்ட சவால்களிற்கு முகம்கொடுக்க நேரிட்டது. அனைத்துச் செயற்பாடுகளும் கடந்த காலத்தைப் போன்று அரச நிதியைப் பயன்படுத்தியே முன்னெடுக்கப்படுகின்றதாக ஒரு சிலர் கூறினார்கள். தற்போதைய அரசு அப்படிப்பட்ட ஒன்றல்ல.

அரச நிதியை உபயோகிக்காது தனியார் நன்கொடைகளை உபயோகப்படுத்தி நத்தார் மரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் நாடென்ற ரீதியில் முன்னோக்கிச் செல்லலாம் எனும் செய்தியை இந்தச் செயற்பாடு உணர்த்தியுள்ளது.

நாம் நல்லாட்சிக்கு அர்ப்பணிக்கப்பட்ட அரசாகும். எம்மிடம் அரசியல் வேறுபாடுகள் இல்லை. இந்த நாட்டின் வரலாற்றில் மனிதப் படுகொலைகள் நிகழ்ந்தன. சண்டைச்சரவுகளில் ஈடுபட்டார்கள். இன்று இரு கட்சிகளும் ஒன்றிணைந்து முதன் முறையாக அரசை அமைத்துள்ளது. நாட்டில் உள்ள அனைத்து இலங்கையர்களும் சிறப்பான முறையில் வாழ்வதற்கான வழிமுறையை அமைத்துக் கொடுப்பதே எங்களுடைய ஒரே எதிர்பார்ப்பாகும்.

எம்மிடம் மத பேதங்கள், சாதி பேதங்கள் இன்றி வாழ்வதற்கான சுதந்திரத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஜனாதிபதியும், பிரதமரும் மேற்கொள்கின்ற முயற்சிகள் இவ்வாறான செயற்பாடுகள் மூலமாகவே வெற்றியடைகின்றன. நாட்டில் ஆட்சி செய்த ஜனாதிபதிகள் பௌத்த விவகார, இஸ்லாம் விவகார, இந்து விவகார மற்றும் கத்தோலிக்க விவகார அமைச்சுக்களை நிறுவியதற்கான காரணம் அனைத்து மதங்களுக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதனாலாகும். அனைத்து மதங்களும் சமாதானத்துடன் வாழ்கின்ற எங்கள் நாட்டில் இவ்வாறான செயற்பாடொன்றை முன்னெடுப்பதையிட்டு நாம் பாராட்ட வேண்டும் - என்றார். (வ-5)

# கடற்படை காணி விடுத்தும் விவசாயம் செய்யத் தடை

## வன ஜீவராசிகள் திணைக்களம் மீது முள்ளிக்குளம் கிராம மக்கள் குற்றச்சாட்டு

மன்னார், டிசெ.30

மன்னார், முசலி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையால் விடுக்கப்பட்ட 300 ஏக்கர் நிலத்தை வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ளனர் என்று கிராம மக்கள் குற்றஞ்சாட்டினார்.

கடற்படையினர் 2007ஆம் ஆண்டு முகாம் அமைப்பதற்காக எமது வாழ்வாதார வயல் நிலங்களை அபகரித்தனர். அவற்றை விடுவிக்குமாறு பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்தோம். இந்த விடயம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊடாக பாதுகாப்பு அமைச்சு வரையில் கொண்டு செல்லப்பட்டது.

நீண்ட பேச்சுகளின் பின்னர் அந்தப் பிரதேசத்தை விடுவிக்க இணக்கம் காணப்பட்டது. இந்த ஆண்டு கடற்படையினர் விலகி அங்கிருந்து சென்றனர். கடற்படையினர் அகன்றதும் அங்கு விவசாயம் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொண்டபோது வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் அந்தப் பிரதேசம் தமது ஆளுகைக்குட்பட்டது என்று தெரிவித்து விவசாயம் செய்யத் தடை விதிக்கின்றனர்.

கடற்படையிடம் இந்தக் காணிகள் இருந்தபோது எந்த வித நடவடிக்கையினையும் மேற்கொள்ளாத திணைக்களம் நாம் பெருமுயற்சி செய்து நிலத்தை விடுவித்த பின்னர் உரிமை கோருகின்றனர்.

இந்தப் பிரதேசமானது வன ஜீவராசிகளின் நீர் அருந்தல் பிரதேசத்துக்காக ஒதுக்கப்பட்டது என்று கூறுகின்றனர். நாமும் கட்டடம் அமைத்து வாழ்வதற்கு நிலத்தைக் கோரவில்லை. வயல் செய்து வாழ்வாதாரத்தைத் தேடிக்கொள்வதற்காகவே கோருகின்றோம். எமது முயற்சினால் விடுவிக்கப்பட்ட எமது வாழ்வாதார நிலங்களை எம்மிடம் ஒப்படைக்க ஆவன செய்ய வேண்டும்- என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முள்ளிக்குளம் கிராம மக்கள் தமது வாழ்வாதார நிலமான 300 ஏக்கரை கடற்படையிடமிருந்து விடுவித்து தருமாறு நீண்டகாலமாகக் கோரியிருந்தனர். நீண்ட முயற்சியின் பின்னர் அது விடுவிக்கப்பட்டது. தற்போது அந்தப் பகுதியை வன ஜீவராசிகள் திணைக்களம் உரிமை கோருகின்றது. முசலி மோதரை ஆற்றில் இருந்து 1.6 கிலோ மீற்றர் பகுதி வன ஜீவராசித் திணைக்களத்துக்குரியது என வர்த்தமானி பிரசுரித்திருப்பதன் மூலம் அது அவர்களின் ஆளுகைக்குட்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கட்டடம் எவையும் கட்டப்படாது வயல் செய்கைக்கு அனுமதிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை தொடர்பில் உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் - என்று முசலிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ந-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பாதுகாவலர்களின் ஊக்குவிப்புப் படிகள் நிறுத்தம்

கொழும்பு, டிசெ. 30

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கும் 206 பேரின் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மகிந்தவின் பாதுகாப்புக்கு 206 பொலிஸ் உத்தியோகத்தர்களைக்கொண்ட செயலணி நியமிக்கப்பட்டுள்ளது. பிரமுகர்களின் பாதுகாப்புக்கு நியமிக்கப்படுபவர்களுக்கு அவர்களது அடிப்படைச் சம்பளத்தின் 33 வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படுவது வழக்கம். எனினும், மகிந்தவின் பாதுகாப்பு அணிக்கு கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது.

சாதாரண பொலிஸ்சேவையிலுள்ளவர்கள் மீண்டும் பரீட்சிக்கப்பட்டு அவர்களது உடல் ஆரோக்கியம் மற்றும் சிறப்புத் திறமைகளின் அடிப்படையிலேயே பிரமுகர்கள் பாதுகாப்பு அணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு அவர்களது அடிப்படைச் சம்பளத்துக்கு மேல் ஒருசில ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் சிறப்புப் படிகளும் வழங்கப்படுவது வழக்கம். ஆனால் மகிந்தவின் பாதுகாப்பு அணியினருக்கு இந்தக் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பாதுகாவலர்களுக்கு இந்த ஊக்குவிப்பு மற்றும் சிறப்புக் கொடுப்பனவுகள் அனைத்தும் வழங்கப்பட்டு வந்தபோதிலும் மகிந்தவின் பாதுகாவலர்களுக்கு ஓரவஞ்சனை செய்யப்படுவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்தவின் பாதுகாப்புக் குறைக்கப்படவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டபோது, அதற்கு மகிந்த உட்பட அவரது ஆதரவு அணியினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். போரை நிறைவுக்குக் கொண்டுவந்தவரது பாதுகாப்பைக் குறைப்பதா என்றும் அவருக்கு புலிகளால் ஆபத்து உள்ளது என்றும் பலவாறாகக் கருத்துக்களை அவர்கள் முன்வைத்து வந்தனர். இந்த நிலையில் அவரது பாதுகாப்புக் குழுவிலுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு 8 மாதங்களாக வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# இழுபறி நிலையில் எல்லை நிர்ணயம்

## தலைவர் – செயலரிடையே கருத்து முரண்பாடு உச்சம்

கொழும்பு, டிசெ. 30

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பான எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கும் இந்த வேளையில், அந்த அறிக்கை தொடர்பில் எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் அஸோக்க பீரிஸுக்கும், அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறிக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

எல்லை நிர்ணயம் பற்றிய தமது அறிக்கை நிறைவடைந்துவிட்டதாக அஸோக்க பீரிஸ் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். எனினும் அது இன்னும் நிறைவு செய்யப்படவில்லை என்று கமல் பத்மசிறி தெரிவித்ததோடு, அவ்வாறான அரை வேக்காட்டு அறிக்கையொன்றை அமைச்சர் ஏற்றுக்கொள்ளமாட்டார் எனவும் குறிப்பிட்டார்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரிக்கப்படவேண்டிய எல்லை நிர்ணய அறிக்கை தற்பொழுது சிங்களமொழியில் மாத்திரமே இருக்கின்றது. அதை ஏனைய இரு மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்வதற்கு மேலும் தாமதம் ஏற்படும் என்றும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அஸோக்க பீரிஸ் தலைமையிலான எல்லை நிர்ணயக் குழு கடந்த மாதம் முதலாம் திகதி தனது பணியை ஆரம்பித்தது. அதன் அறிக்கை 2016 நவம்பர் 8 ஆம் திகதி கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதும், பின்னர் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கும் அதன்பின்னர் டிசெம்பர் 27 ஆம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டது. எனினும், அறிக்கை இதுவரை கையளிக்கப்படவேயில்லை.

அறிக்கை தற்போது தயாராகிவிட்டதாக அஸோக்க பீரிஸ் தெரிவித்தபோதிலும், அதை அமைச்சரிடம் கையளிக்கமுடியாத நிலையில் அவருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் ஏற்பட்டிருக்கும் கருத்து முரண்பாடு அரசியல் அவதானிகள் மத்தியில் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

**வேலைவாய்ப்பு**

பகுதிநேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ இரவில் கடமைபுரிய விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

◆ எழுதுவினைஞர் ◆ மேற்பார்வையாளர்.

இடம் :- 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் :- 30.12.2016, 31.12.2016 (வெள்ளி, சனி)
முற்பகல் 10.00 am - 3.00 pm வரை

வெளிமாவட்டக்காரர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

# சு.கவின் ஆதரவில்லாமல் ஐ.தே.க. நகரவே முடியாது

## இப்படிச் சொல்கிறார் டிலான் பெரேரா



தேசிய அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாது ஐக்கிய தேசியக் கட்சியால் எந்த நகர்வுகளையும் மேற்கொள்ள முடியாது. ஜனநாயக ரீதியில் எந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும் அல்லது புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டுமாயினும் எமது ஆதரவுக்காக காத்திருக்க வேண்டி வரும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

அதியுச்ச அதிகாரங்களை நீக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி முயற்சித்துவரும் நிலையில், சிறப்பு அமைச்சு முறைமையை உருவாக்கி அதிகாரங்களை கைப்பற்ற ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களான டிலான் பெரேரா, எஸ்.பி.திசாநாயக போன்றவர்கள் தேசிய அரசை விட்டுவெளியேற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி விமர்சித்துவரும் நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (வ-5)

# தமிழீழத்தை அடைவதே நல்லாட்சி அரசின் இலக்கு

*குணதாச அமரசேகர குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெ. 30

தமிழீழத்துக்கான இலக்கை புதிய அரசமைப்பின் ஊடாக அடையவே இந்த அரசு முயற்சிக்கிறது. அதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் உதவியாக உள்ளதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர குற்றஞ் சாட்டினார்.



'பிரபாகரனின் ஆயுத போராட்டத்தினால் அடைய முடியாத இலக்கையே, இந்த அரசு அடைய முற்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உலகிலேயே தலைசிறந்த வீரர் என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன் தெரிவித்துள்ளார். பிரபாகரனை நியாயப்படுத்தி பொது இடத்தில் பேச இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு தைரியம் உள்ளதை எண்ணி ஆச்சரியப் படுகிறேன்" என்று அவர் தெரிவித்தார். (வ-4)







A leading **Print Media** Company, is seeking to recruit a dynamic results-oriented Financial Controller to join its management team.

**Requirements:**

The Successful candidate will be responsible for providing leadership and coordination of company financial planning, debt financing, and budget management functions in addition to managing the operation of the finance department and its associated functions and supporting the Managing Director and assisting in business processes to ensure the smooth operation of the financial operations.

**Candidates should possess:**

✓ A professional accounting qualification.
OR
✓ A relevant advanced degree (Bachelor's or Masters) in accounting or finance.
Five (05) to ten (10) years of experience at a senior-level in finance or accounting position

**The successful candidate should have:**

✓ Knowledge of finance, accounting, budgeting and cost control principles.
✓ Knowledge of automated financial and accounting reporting systems.
✓ Knowledge of the financial regulations, including income tax and social security.
✓ The ability to analyze financial data and prepare financial reports, statements and projections.
✓ Demonstrable knowledge of short and long term budgeting and forecasting, rolling budgets, and product-line profitability analysis.

The candidates who are fitting with the above said requirements may send their bio-data along with the details of expected remuneration and names & contact details of two non-related referees to the following e-mail on or before **05.01.2017.**

**E-mail: printmedia51@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் போராட்டம் ஜனவரியில் வெடிக்கும்

## மகிந்த எதிரணி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 30

ஜனநாயகத்தின் கடமைகளை இழிவுபடுத்தியே நல்லாட்சி செயற்படுகின்றது. எனவே ஜனவரியிலிருந்து மக்கள் போராட்டங்கள் தலைநகர் கொழும்பில் வெடிக் கும். இவ்வாறு மகிந்த ஆதரவு பொது எதிரணி எச்சரித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியில் செயற்படும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் சம்மேளனத்துக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புக் குறித்துத் தெளிவுப்படுத்தல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது சம்மேளனத்தின் தலைவர் உதேனி அத்துக்கோரல இவ்வாறு தெரிவித்தார்.

"தேர்தலை நடத்தாமல் நாட்டையும் மக்களையும் ஏமாற்றும் போக்கில் இருந்து அரசு விடுபடவில்லை. மக்கள் போராட்டங்களை ஒடுக்கி ஆட்சி செய்துவிட முடியும் என்று அரசு கனவு கண்டுகொண்டிருக்கிறது. 2017ஆம் ஆண்டில் அந்தக் கனவு பேரதிர்ச்சியுடன் கலையப்போகிறது. நாட்டில் அனைத்துப் பகுதிகளில் இருந்து மக்கள் தலைநகரில் கூடி தொடர் போராட்டங்களை முன்னெடுப்பர்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-4)

# தொழில்நுட்பப் பரீட்சைக்கு இம்முறை 30 ஆயிரம் மாணவர்கள் தோற்றினர்

## பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் இம்முறை தொழில்நுட்ப பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்தார்.

"ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஜனவரி மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும். 2015ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு ஜனவரி மாதத்திலேயே வெளியிடப்பட்டது. இம்முறை உயர்தரப் பரீட்சை கடந்த ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி நடைபெற்றது. பரீட்சையில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 605 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு முன்னைய வருடங்களுக்கு அமைவாக தாமதமடைந்திருப்பதாகச் சில தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். எனினும் இவ்வாறான தாமதம் இடம்பெறவில்லை. தொழில்நுட்பப் பயிற்சி செய்முறைப் பரீட்சைக்கான புள்ளிகள் கணனியில் சேர்க்கப்படவேண்டும். இதற்கு சில நாள்கள் செல்லும்" என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு.என்.ஜே.புஷ்பகுமார கூறினார்.

(வ-4)

# கோணேஸ்வரம் தலைவருக்கு எதிரான சட்ட நடவடிக்கை முயற்சிக்குக் கண்டனம்

## சிவசேனை அமைப்பு விடுத்தது

யாழ்ப்பாணம், டிசெ. 30

திருக்கோணேஸ்வரம் அன்னதான மடம் கட்டுமானப் பணியில் அறங்காவலர் சபைத் தலைவர் அருள் சுப்பிரமணியம் மீது சட்ட நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிப்பது கடும் கண்டனத்துக்குரியது என்று சிவசேனை அமைப்பு தெரிவித்தது.

இதுதொடர்பில் அந்த அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பௌத்த விவகார அமைச்சின் விதிகளுக்கு அமைய ஆதி இந்துக் கோவில்களில் திருப்பணி செய்வதற்கு அனுமதி எவரிடமும் எப்பொழுதும் பெற வேண்டியதில்லை. திருகோணமலையின் மூத்த குடிமகன், எழுத்தாளர், கவிஞர்,படைப்பாளிஅருள்.சுப்பிரமணியம். திருகோணமலை மாவட்ட இந்துக்களின்தலைவரும்அவரே. அவர்மேல் சட்ட நடவடிக்கை என்பது இலங்கையில் வாழும் இந்து மக்கள் மீதான சட்ட நடவடிக்கைக்கு ஒப்பானதாகும்.

திருகோணமலையின் நாடாளுமன்ற உறுப்பினர், இரா. சம்பந்தன் திருக்கோணேச்சரம் ஆலய அறங்காவலராக இருந்தவர். சிறந்த இந்துவான அவரும் அருள். சுப்பிரமணியம் மீதான சட்ட நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இந்துக்கள் இலங்கையில் சமாதானமாகவும் அமைதியாகவும் வாழ்வதற்குரியசூழ்நிலை இல்லை என்பதை உலகெங்கும் வாழ் இந்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

அருள். சுப்பிரமணியம் மீதான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முயல்வதைச் சிவசேனை கடுமையாகக் கண்டிப்பதை மீண்டும் உறுதி செய்கிறது-என்றுள்ளது.

(வ-5)

# அரசமைப்பைத் திருத்த முன் சட்டவரைவுக்கு ஆதரவில்லை

## விக்ரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

அரசமைப்பு திருத்தத்தை அரசு செய்யும் வரை அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவுக்கு ஆதரவளிக்க முடியாது என்றுநவசமசமாஜக்கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். நவ சமசமாஜக் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டில் இடம்பெற்ற போரில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்வதற்கு அரசமைப்பு ஊடாகத் தீர்வு பெற்றுக்கொடுப்பதாக அரசு தெரிவித்திருந்தது. ஆனால் அது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில், அரசியல் பிரச்சினையை அரசு தீர்த்ததன் பின்னர்தான், அபிவிருத்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும். பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் அரசமைப்பில் அது தொடர்பான உறுதியான தீர்மானங்கள் இருக்கவேண்டும்" என்று விக்ரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவித்தார்.

(வ-4)

# 7 லட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பணம்

கொழும்பு, டிசெ. 30

அரசு இதுவரை 661 கோடி ரூபாவை உரமானியமாக விவசாயிகளுக்கு வழங்கியுள்ளதாக விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் விஜித ஜயதிலக தெரிவித்தார்.

ஏழு இலட்சத்து 471விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் இந்த நிதி வைப்பிலிடப்பட்டுள்ளது. வினைத்திறனான முறையில் உர மானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கமநல சேவைகள் அலுவலகங்கள், வலய அமைப்புக்கு உட்படுத்தப்படவிருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நீர்ப் பற்றாக்குறையினால், ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ஹெக்டயர் பரப்பளவு வயல் காணிகள் அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருப்பதாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் எஸ்.எஸ்.சி. வீரசிங்க தெரிவித்தார்.

(வ)



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 700 | 700 | 800 | 800 | – |
| நண்டு | 250 | 300 | 300 | 400 | 400 | 300 | 500 |
| கணவாய் | 600 | 500 | 700 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 600 | 650 | 600 | – | 400 |
| சுறா | 500 | 400 | 600 | 800 | 700 | – | 600 |
| சீலா | 300 | 300 | 400 | 800 | 500 | – | 400 |
| விளை | 650 | 400 | 400 | 800 | 500 | 500 | 450 |
| முரல் | 300 | 350 | 400 | 400 | 400 | – | – |
| கும்பிளா | 400 | 300 | – | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 500 | – | – | 450 | – | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 250 | 200 | 300 |
| நகரை | 250 | 200 | 150 | 300 | 300 | – | 400 |
| சூடை | 150 | 100 | 120 | 200 | 200 | – | – |
| ஒட்டி | 300 | 200 | 100 | 400 | 200 | 100 | 250 |
| திருக்கை | 150 | 250 | 250 | 350 | 300 | – | – |
| மதனம் | 150 | 200 | 200 | – | 300 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 400 | 150 | 250 | 400 | 300 | 400 | – |
| வாழை | 100 | 100 | – | – | 400 | [illegible] | 300 |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 60 | 60 | 40 | – | 60 |
| கத்தரி | 20 | 30 | 40 | 50 | 20–30 | 40 | – | 40 |
| கரட் | 100 | 90 | 80–140 | 100 | 80–100 | 120 | – | 160 |
| மரவள்ளி | 50 | 70 | 50 | 60 | 60 | 60 | – | 50 |
| பயிற்றை | 120 | 130 | 200 | 140 | 140 | 170 | – | 80 |
| பாகல் | 300 | 240 | 280 | 120 | 280 | 280 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 50 | 60 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 80 | 120 | – | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 80 | 100 | 70 | 100 | – | 160 |
| பூசணி | 50 | 50 | 50 | 50 | 40 | 50 | – | 80 |
| தக்காளி | 160 | 130 | 100 | 100 | 120 | 160 | – | 200 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 60 | 40–50 | 80 | – | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 40 | 20 | 50 | – | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 180 | 220 | 140 | 140 | 200 | – | 500 |
| புடோல் | 70 | 60 | 80 | 60 | 60–70 | 80 | – | 100 |
| கோவா | 30 | 30 | 30 | 40 | 20 | 20 | – | 140 |
| வெண்டி | 80 | 60 | 100 | 120 | 60 | 80 | – | 80 |
| போஞ்சி | 140 | 110 | 140 | 140 | 120 | 160 | – | 120 |
| லீக்ஸ் | 70 | 100 | 100 | 100 | 80–100 | 120 | – | 150 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100–140 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 350 | 200 | 450 | – | 280 |
| வல்லாரை | 25 | 15 | 20 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 140 | 160 | 200 | 240 | 180 | 180 | – | 200 |
| இராசவள்ளி | 300 | 250 | 300 | 200–260 | 300 | 300 | – | 120 |
| முருங்கைக்காய் | – | 400 | 80–1000 | – | 400 | – | – | 350 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி. வர்த்தகர் சங்கக் கூட்டம்

கிளிநொச்சி, டிச.30
கிளிநொச்சி மாவட்ட வர்த்தக சங்கப் பொதுக் கூட்டம் நாளை 31ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதன் காரியாலயத்தில் (பழைய வைத்திய சாலைக்கு அருகாமை) நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது. வர்த்தகர்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் கலந்துரை யாடப்படுவதோடு, புதிய நிர்வாகத் தெரி வும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (ற-ய)

## பட்டப்போட்டித் திருவிழா தைப்பொங்கலன்று

யாழ்ப்பாணம், டிசெ.30
வல்வையின் பட்டப் போட்டித் திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி தைப் பொங்கல் தினத்தன்று வல் வெட்டித்துறை மடத்தடி உதயசூரியன் கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளது.
வல்வெட்டித்துறை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையம் பட்டப் போட்டித் திருவிழாவை ஏற்பாடு செய்துள்ளது.
தனிமனிதனின் கற்பனைத் திறனையும், கைவண்ணத்தையும் ஒன்று சேர்த்த கற்பனையில் இல்லாத சித்திரப் பட்டங்கள் மட்டுமே பட்டப் போட்டித் திருவிழாவில் பங்குபற்ற முடியும். போட்டியில் பங்குபற்றவிரும்புவோர் எதிர்வரும் 12ஆம் திக திக்கு முன்னர் வல்வெட்டித்துறை மடத்தடியில் உள்ள விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையத்தில் தினமும் மாலை 4 மணிமுதல் 6 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக் கப் பட்டுள்ளது. .(ற-173)


கலைவளம் பெருக்கி நிலை இன்பம் பெறுவோம்
காரைநகர்
**கிழவன்காடு கலாமன்றம்**
காரைநகர் யாழ்.கிளை
**கலை வகுப்புக்களுக்கான அனுமதி - 2017**
மேற்படி கலாமன்றத்தின் கலை வகுப்புக்களுக்கான அனுமதி வழங்கப்படுகின்றது.
**விண்ணப்ப முடிவு திகதி - 10.01.2017**
நடைபெறும் கலை வகுப்புக்கள்
- அறநெறி
- பண்ணிசை
- சங்கீதம்
- நடனம்
- மிருதங்கம்
- வயலின்
- சித்திரம்
- நாடகமும் அரங்கியலும்
- யோகாசனம்
- மாலை கட்டுதல்
- கோலம் போடுதல்
- தோரணம் செய்தல்



குறிப்பு: விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
காரைநகர்.
யாழ்.கிளை: இல.11, கஸ்தூரியார் வீதி, முதலாவது ஒழுங்கை, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனை அருகில்)

**O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான**
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
**Professional IT Courses**
- Dip.in Information Technology
- Dip.in Office Automation
- Dip.in PC Application
- Dip.in Microsoft Office
- Dip.in Web Designing
- Hardware , Mulitmedia



**Diploma in English**
ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்
பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
SPOKEN ENGLISH
ஆங்கிலக் கல்வி
DMI COMPUTER EDUCATION
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
பிரிவு 2 - 02-01-2017 , 9:30a.m. or 3: 30p.m.
பிரிவு 3 - 04-01-2017 , 9:30p.m. or 3: 30 p.m.
வகுப்பு நேரங்களை காலை அல்லது மாலை தெரிவு செய்யலாம்.
IT & English Diploma
☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.
அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
**DMI COMPUTER EDUCATION**

| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, குறூந்துறும் கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

**English Trainer Training Diploma (Teacher Training)**
சர்வதேச தரத்திலான ஆங்கிலத்தை முழுமையாகவும் அடிப்படையிலிருந்து கற்க விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தை முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கும்
- " English Medium " மாணவர்களுக்கும்
- Speaking, Writing. Listening and Reading திறனை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்குமானது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் English Medium மாணவர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்கள் தெரிவு செய்கின்ற ஒரேயொரு கற்கைநெறி.
New Batches Start on 02.01.2017 9.00 a.m / 1.30 p.m Weekdays 07.01.2017 9.00 a.m / 1.00 p.m Weekend
ELAS Sirpon Ramanathan Road, Thirunelveli, Jaffna. (பல்கலை எதிரில்)
T.P: 021 221 2410, 076 697 3040

**இஷாரா**
நியூ டிரெஸ் மார்ட் (பி.லிமிட்)
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இஷாரா வழங்கும் விசேட சலுகைகள்
ரூ.5000/= இற்கு மேற்பட்ட தொகைக்கு கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விசேட பரிசுக் கூப்பன்களும், பரிசுப் பொதிகளும் வழங்கப்படவிருக்கின்றன.





இவை தவிர ரூ. 5000/= இற்கு மேற்பட்ட தொகைக்கு கொள்வனவு செய்பவர்களுக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக மவுண்டன் துவிச்சக்கர வண்டியும் மற்றும் ஐந்து பேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.



**அதிர்ஷ்டம் பார்க்கப்படும் திகதி:- 22.01.2017**
**நேரம் :- மாலை 6.00 மணி**
தெரிவுசெய்யப்பட்ட ஆடைகளுக்கு, விசேடவிலைக்கழிவுகளுக்கு நாடுங்கள்
**இஷாரா நியூ டிரெஸ் மார்ட் பி.லிமிட்**
இல.199A,199B, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9925

ஒளி அழகனின்
A British College Of Beauty Studies
BCBS Beauty Studies
இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி
✔ அழகுக்கலை ✔ தையற்கலை ✔ சமையற்கலை ✔ Computer
✔ கேக்ஐசிங் ✔ ஆங்கிலம் ✔ Ladies Skills Development
- குறுகிய கால பயிற்சி வகுப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- 3, 6 மாத கால முழுநேர மற்றும் பகுதிநேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
- எங்களிடம் எந்த பாடநெறியினைப் பூர்த்தி செய்தாலும் எப்பகுதியிலும் சுயமாக உரிய தொழிலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

20ற்கும் மேற்பட்ட பெண்களுக்கு பொருத்தமான டிப்ளோமா பாடநெறிகள்
முதலாம் திகதி பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு கட்டணக் கழிவு உண்டு
01/01/2017 அன்றைய தினம் வருடத்துக்கான முதல் வகுப்புக்கள், அனைத்துப் பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. பதிவுகளுக்கு முந்துங்கள்.
வெகுவிரைவில் வேலணைப் பகுதியிலும் பயிற்சிகளைப் பெற முடியும்
Kathooriyar Road Jaffna 076 - 7011645 Palaly Road Thirunelvely Jaffna

சிவமயம்
**பாராட்டி வாழ்த்துகின்றேன்**
**திரு.சிவசரவணபவன் சுந்தரேஸ்வரன்**
ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.மெற்றோ கிளையில் முகாமையாளராகக் கடமையாற்றி இன்றுமுதல் வடபிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல உயர்வுகளைப் பெற இறை ஆசி வேண்டுகின்றேன்.
Congratulations
கனகசபை தர்மலிங்கம்- 'மருதர்சோலை', காரைநகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## நினைவு தினம்

யாழ்ப்பாணம், டிசெ. 30
சி.வை.தாமோதரம்பிள்ளையின் 117ஆவது ஆண்டு நினைவு தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கன்னகை அம்பாள் ஆலய வட கரை வீதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தத்தினத்தில்திண்ணைப்பள்ளி ஒன்றின் குறியீடாகிய கன்னகை முன்பள்ளிக்கென நிரந்தரக் குடில் ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளது.

சி.வை.தா.ஞாபகார்த்த சபையின் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 30
யாழ்.சின்மயாமிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இசை நிகழ்வு நடைபெறும் என்று சின்மயாமிஷன் ஆச்சிரமம் அறிவித்தது.

அவுஸ்திரேலியா, மெல்போர்ன் நல்லை ஸ்வரலயா இசைக் கல்லூரி மாணவி நிர்மிதா சங்கர் குமாரசூரியரின் கர்நாடக இசை நிகழ்வு பக்க வாத்தியம் சகிதம் நடைபெறவுள்ளது. இசை ஆர்வலர்கள் அனைவரும் பங்குகொள்ளுமாறு ஆச்சிரமம் கேட்டுள்ளது. (வ-10)

## திருவாசகம் முற்றோதல்

சுழிபுரம், டிசெ.30
திருவாசகம் முற்றோதல் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

அதிகாலை வழிபாடுகளைத் தொடர்ந்து திருவாசகம் முற்றோதல் ஆரம்பமாகி நடைபெறும். ஆலய பரிபாலன சபையினரின் வழிநடத்தலுடன் வருடா வருடம் நடத்தப்பட்டு வருகின்றது. பங்குகொள்ளும் அடியவர்களுக்கு நண்பகல் அன்னதானம் வழங்கப்படும். இந்த நிகழ்வு ஆலய முன் மண்டபத்தில் நடைபெறும்.

பங்கு கொள்பவர்கள் திருவாசக நூல் கொண்டு வரவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர். (வ-28)

## தையல் பயிற்சிக்கு நேர்முகத் தேர்வு

தென்மராட்சி, டிசெ.30
தென்மராட்சி பிரதேச மகளிர் அபிவிருத்திப் பிரிவினால் 2017ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள தையல் பயிற்சிடிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் இரண்டாம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு கொடிகாமம் நகரில் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த அனைவரையும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு பிரதேச செயலர் தெரிவித்தார். (வ - 9)

# காணாமற்போனோருக்கு நீதிகேட்டு இன்று அடையாள உணவு தவிர்ப்பு

## உறவுகளால் வவுனியாவில் முன்னெடுப்பு

வவுனியா, டிசெ. 30
வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் நினைவுத் தூபிக்கு முன்பாக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் அடையாள உணவு ஒறுத்தல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்தனர்.

வவுனியா மாவட்ட கைது செய்யப்பட்டு கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி திருமதி. காசிப்பிள்ளை ஜெயவனிதா இது தொடர்பில் தெரிவித்ததாவது:

கடந்த 10ஆம் திகதி பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஒன்றுகூடலில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய முதற் கட்டமாக அடையாள உணவு ஒறுத்தல் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படுகிறது. அதற்கு சாதகமான பதில் அரசிமிருந்து கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் தொடர் உணவு ஒறுத்தல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தீர்மானித்துள்ளோம்.

வடக்கு கிழக்குப்பகுதிகளில் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் வலியுறுத்தி தொடர் உணவு ஒறுத்தல் போராட்டத்தினை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எம்மால் மேற்கொள்ளப்பட்ட பல போராட்டங்களுக்கு நியாயமான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை. மாறாக அரசியல் வாதிகளால் நாங்கள் ஏமாற்றப்பட்டு வருகிறோம். சிறையிலுள்ள எமது பிள்ளைகள் உணவு ஒறுத்தல் போராட்டம் இருந்தும் அவர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டதைக்கூட அரசும் அரசியல் கட்சிகளும் மறந்துவிட்டு செயற்படுகின்றன. போர் முடிவுற்று 7 ஆண்டுகள் கடந்த நிலையிலும் நல்லாட்சி அரசு நியாயமான சாதகமான பதில் தரவில்லை, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியும் காணாமற்போனோரின் உறவுகளை ஏமாற்றி வருகிறார். தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் காணாமற்போனோரின் உறவுகள் தினம்தினம் போராட்டத்துடன் வாழ்ந்து வருகின்றனர். காணாமற்போனோரின் உறவுகளுக்கு நிரந்தரத்தீர்வு கிடைக்கும்வரை எமது போராட்டங்கள் தொடரும் - என்றார். (வ-4)

## நிர்வாகம் தெரிவு

சாவகச்சேரி, டிசெ. 30
சாவகச்சேரி சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் நா.சுதந்திரன், உப தலைவர் செ.பத்மநாதன், செயலாளர் செ.சுப்பிரமணியம், உதவிச் செயலாளர் சி. பாஸ்கரசிங்கம், பொருளாளர் ஆ.தனபாலசிங்கம், நிர்வாக உறுப்பினர்களாக செல்வி கு.பிரசாந்தினி திருமதி ஜெ. விஜயநிர்மலா திருமதி சி.பரமேஸ்வரி கு.பிரணவராசா ஜெ.ஜெயப்பிரபு சோ.சுகாந்தன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் என்று செயலாளர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார். (வ- 9)

# பொய்கூறி மாட்டிக் கொண்டார் கடமை நிறைவேற்று அதிபர்

யாழ்ப்பாணம், டிசெ. 30
பொய்கூறிய கடமை நிறைவேற்று அதிபர் ஒருவர் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் நேற்று வசமாக சிக்கிக் கொண்டார்.

இந்தச் சம்பவம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

கடமை நிறைவேற்று அதிபர்கள் தமக்கு தொடர்ந்தும் அதிபர் நிலை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்தனர்.

அதன்போது இலங்கை அதிபர் சேவை தரம் 3 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியும் சித்தியடையாதவர்களுக்குத் தொடர்ந்தும் அதிபர் பணி வழங்க முடியாது என்று செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

கடமை நிறைவேற்று அதிபராகப் பணியாற்றி போட்டிப் பரீட்சைக்கு தோற்றாதவர்களுக்கு அதே பணியைத் தொடர்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்குமாறுகோரி, கடமை நிறைவேற்று அதிபர்களின் பெயர்ப் பட்டியல் செயலரிடம் வழங்கப்பட்டது. அந்தப் பெயர்ப் பட்டியலில் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடையாத அதிபர் ஒருவரின் பெயரும் இணைக்கப்பட்டுள்ளதை செயலாளர் கண்டுகொண்டார். அதனால் அந்தப் பெயர் தொடர்பில் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

குறித்த அதிபர், அதிபர் பணியோடு பிறபணியிலும் ஈடுபடும் ஒருவர் எனவும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டது.

மாணவர்களுக்கு முன்மாதிரியாக திகழவேண்டிய அதிபர்களே இவ்வாறு மோசடியான விவரங்களை சமர்ப்பித்து போலி நியமனங்களைப் பெற முண்டியடித்தால் இவர்களினால் எவ்வாறு வடக்கு மாகாணத்தில் கல்வியை முன்னெடுக்கவோ அல்லது கல்வி தொடர்பில் விமர்சனம் செய்யவோ முடியும்? என்றும் கேள்வி எழுப்பப்படுகின்றது. (வ-101)

# கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு வடக்கு கல்வி அமைச்சுச் சலுகை

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் தேர்ச்சி அடையாத - கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு சலுகைகளை வழங்க வடக்கு மாகாண கல்வி அமைச்சு முன்வந்துள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணகடமை நிறைவேற்று அதிபர்கள் தமக்கு தொடர்ந்தும் அதிபராகச் சேவையாற்ற அனுமதி வழங்கக்கோரி நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வடக்குகல்விச் செயலாளர்தனது அலுவலகத்தில் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கு மாகாணத்தில் தற்போது கடமை நிறைவேற்று அதிபர்களாக உள்ளோரில் 50 வயதைக் கடந்தவர்கள், அதிபர் சேவைக்கான பரீட்சைக்குத் தோற்றாதோர் அனைவரும் தொடர்ந்தும் அதிபராக சேவையாற்ற வழி ஏற்படுத்தக்படும். அதேவேளை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் தோற்றி சித்தியடையத் தவறியவர்கள் அதிபர்களாக பணியாற்ற முடியாது. இருப்பினும் அவர்களிற்கான சேவையை கருத்திற்கொண்டு அவர்களுக்கும் மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் ஆசிரிய ஆலோசகர்கள், திட்ட உத்தியோகத்தர்கள், வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் பணி போன்றவற்றினை விரும்பினால் அந்த பணிக்கு அமர்த்தப்படுவார்கள். இதேபோன்று அதிபர் தரம் 3இற்குள் உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கு நியமனத்தின் பின்பு ஏற்படும் வெற்றிடப் பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்படும்" என்று வடக்கு கல்விச் செயலாளர் தெரிவித்தார். (வ-4,101)



# 2 வருடங்களுக்குள் 150 மெற்றிக் தொன் நன்னீர் மீன் உற்பத்தி

## கடற்தொழில் அமைச்சுத் திட்டம்

கொழும்பு, டிசெ. 30
எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் நன்னீர் மீன் உற்பத்தியை 150 ஆயிரம் மெற்றிக் தொன்களாக அதிகரிக்கச் செய்வதற்கான திட்டத்தை கடற்றொழில், நீரியில் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இதுதொடர்பில் அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமைச்சர் மகிந்த அமரவீரவின் எண்ணக்கருவுக்கமைய 'வளமுடன் பயணம்' எனும் தலைப்பின் கீழ் கடற்றொழில் நீரியல் வளங்களை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் 116 களப்புகளும் 10 ஆயிரம் நீர்நிலைகளுமுள்ள மீன் மற்றும் நீர்வாழ் உயிரின அபிவிருத்திக்கு அரசு 2500 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. நீரியல் வளங்களின் அபிவிருத்திக்காக பெருந்தொகை நிதி இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நன்னீர் மீன் உற்பத்தி 75 ஆயிரம் மெற்றிக் தொன்னாகும். நாட்டைச் சுற்றி கடல் வளம் இருந்த போதிலும் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டரின் மீன் மற்றும் மீன்களின் தொகை 12 ஆயிரம் மெற்றிக் தொன்னாகும்-என்றுள்ளது. (வ)

# அறிஞர் நம்மாழ்வாரின் மூன்றாம் ஆண்டு நினைவுப்பகிர்வு

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் வவுனியா மாவட்ட சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு இயற்கை வாழ்வியல் அறிஞர் நம்மாழ்வாரின் மூன்றாம் ஆண்டு நினைவுப்பகிர்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தண்ணீர் அனைத்து உயிர்களின் அடிப்படை உரிமை. அது விற்பனைப் பண்டமில்லை என்ற தொனிப்பொருளில் தொடக்க உரையினை சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் எம். ஜி. ரட்ணகாந்தன், தண்ணீர் அனைத்து உயிர்களின் அடிப்படை உரிமை சிறப்பு உரையினை இலங்கையின் இயற்கை வேளாண்மையும் நிர்வேளாண்மையும் இயற்கை வேளாண்மை விஞ்ஞானி ந. தேவ கிருஸ்ணன், கலாநிதி லயனல் வீரக்கோன், வவுனியாவில் நிலத்தடி நீர் பாதிப்புக்கள் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் சி. சதீஸ்குமார், நவகாலனித்துவத்தின் இலங்கை தண்ணீக்கொள்கை தேசிய அமைப்பாளர் மக்கள் திட்ட ஒன்றியம் உபாலி லிவேரா, யாழ். குடா நாட்டின் குடி நீர் அரசியல் முதன்மை ஆசிரியர் தமிழ் வன் தொலைக்காட்சி அ.ஜெயசந்திரன், ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பெண்களின் வாழ்வாதாரம், இளையோரின் வேலைவாய்ப்பு, மாணவரின் கல்வி

# மூன்று விடயங்களில் இன்று தமிழருக்குப் பெரும் சவால்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30

பெண்களின் வாழ்வாதாரம், இளைஞர்களின் வேலைவாய்ப்பு, மாணவர்களின் கல்வி ஆகிய மூன்று விடயங்களும் இன்று எமது இனத்துக்கு விடப்படும் சவாலாக அமைந்துள்ளன. இந்தச் சவாலை முறியடிக்க புலம்பெயர் தமிழர்கள், வர்த்தகர்கள், அரசியல்வாதிகள் முன்வர வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மறைக்கல்வி நிலையத்தில் மக்கள் நல்வாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி தலைமையில் பகிர்வு விழா நேற்று இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

போர் பாதிப்புக் காரணமாக எமது மக்கள் உரிமைகள், சொத்துக்களை இழந்து வாழ்க்கைக்காகத் தவிக்கும்போது எமது மக்களினதும், மாணவர்களினதும் எதிர்காலம் கருதிச் செயல்படும் சங்கங்களுக்கு நன்றி கூறவேண்டும். இங்கு இடம்பெற்ற கொடிய போருக்குப் பின்பும் எமது இனம் நிமிர்ந்து நிற்பதற்கு மாணவர்களின் கல்வியே முக்கியம். எனவே இந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்தவேண்டியது எமது கடமை. ஆனால் வடக்கு கிழக்கில் உள்ள எமது மாணவர்கள் இன்றும் போர் வடுவிலிருந்து மீளமுடியாது தவிக்கின்றனர்.

பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் எமது மாகாணத்தில் அதிகம் காணப்படுகின்றனர். அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அதிகம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களே காணப்படுகின்றனர். இவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி இன்னுமோர் இனத்திடம் கையேந்தவிடாது சம உரிமையுடன் உயர்த்தவேண்டிய முக்கியமான ஒரு பணி எம்முன் உள்ளது.

அரச வேலை வாய்ப்புக்கள் என்பது கடந்த காலத்தில் பெரும்பாலும் அரசியல் சார்ந்தாகவே காணப்பட்டன. அதே நிலவரம் தற்போதும் தொடர்கின்றது. எமது இளையோர் அரச வேலை வாய்ப்பினை நம்பி நம்பியே ஏமாந்து அரைவாசி ஆயுள் காலத்தினை இழந்து விடுகிறார்கள். ஆனால் எமது பிரதேசமோ வேலைவாய்ப்பின்றியே காணப்படுகின்றது.

இன்றைய சூழலில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி வாழ்வாதாரங்களை உயர்த்துவதோடு மாணவர்களின் கல்வியை வளம் பெறச் செய்வதன் மூலமே இந்த இனத்தை உடனடியாக காத்துக்கொள்ள முடியும். அதற்குரிய வசதிகளை ஏற்படுத்தும் வல்லமையும் எமது இனத்திடம் உண்டு. தொழிற்சாலைகள் அமைத்து வேலை வாய்ப்புக்களை வழங்கும் வல்லமை எமது புலம்பெயர் மக்களிடம் உண்டு. அவர்களும் இதற்கு முன்வரவேண்டும்.

ஆயுதரீதியில் அடக்கப்பட்ட எமது இனத்தினை இன்று பொருளாதார ரீதியிலும் அடக்கும் - நசுக்கும் நோக்கில் எமது மக்களை கையேந்துபவர்களாக வைத்திருக்கவே முயல்கின்றனர். இவ்வாறு கல்வி, வாழ்வாதாரம், பொருளாதாரம் என்பனவற்றில் எமது இனம் திட்டமிட்டே அழிக்கப்படுகின்றது. இந்த மூன்று விடயங்களிலும் விடப்படும் சவாலை உள்ளூர் மற்றும் புலம் பெயர் அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், புலம்பெயர் தேசத்தவர்கள் ஆகிய 3 பகுதியினரும் முயற்சித்தால் எமது இனத்துக்கு விடப்பட்டுள்ள இந்தப் பெரும் சவாலை முறியடிக்க முடியும்-என்றார். (வ-4,101,ரி)

## பாடசாலை நேர மாற்றத்தால்

# பஸ் சேவை நேரம் ஜனவரியில் மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடக்கு மாகாணத்தில் ஜனவரி மாதம் முதல் காலை 7.30 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கேற்றதாக இலங்கைப் போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலை பேருந்து சேவைகளின் நேரம் மாற்றப்படவுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் (வடக்கு) பருத்தித்துறை சாலை முகாமையாளர் க.கந்தசாமி அறிவித்தார்.

பருத்தித்துறை தொடக்கம் சாவகச்சேரி (765) பாதையால் காலை 6:45 இற்குப் புறப்படும் பேருந்து 6:15 மணிக்கும்,

பருத்தித்துறை தொடக்கம் கேவில் (762) பாதையால் காலை 6:30 மணிக்குப் புறப்படும் பேருந்து 5:45 மணிக்கும்,

பருத்தித்துறை தொடக்கம் பொற்பதி (762/2) பாதையால் காலை 7:15 மணிக்குப் புறப்படும் பேருந்து 6 மணிக்கும்,

பருத்தித்துறை தொடக்கம் வட்டுக்கோட்டை (766) பாதையால் காலை 6:20 மணிக்குப் புறப்படும் பேருந்து 6:00 மணிக்கும்,

பருத்தித்துறை தொடக்கம் நவாலி (767) பாதையால் காலை 7 மணிக்குப் புறப்படும் பேருந்து 6:45 மணிக்கும்,

பருத்தித்துறை தொடக்கம் மணற்காடு (762/2) பாதையால் காலை 7:15 மணிக்குப் புறப்படும் பேருந்து 6:45 மணிக்கும் பயணிக்கும்.

கல்லுவம், யாக்கரு, குடவத்தை, தொண்டமானாறு போன்ற பிரதேசங்களில் இருந்து பருத்தித்துறையை நேக்கி வரும் (757/1, 754/1, 759/1,752/1) பாடசாலை சேவைப் பேருந்துகள் குறித்த பிரதேசங்களில் இருந்து காலை 6:30 மணிக்கு தனது சேவையினை ஆரம்பிக்கும். ஜனவரி முதலாம் திகதி முதல் குறித்த நேரமாற்றத்தின் படி இ. போ. சவின் பேருந்து சேவைகள் இடம்பெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4,ரி)

# மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ். இந்துக் கல்லூரி மற்றும் யாழ். ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவன் ரு.சாரங்கனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# அலைபேசிக் கடையை உடைத்து திருடியவர் பொருள்களுடன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 30

வல்வெட்டித்துறையில் அலைபேசிக் கடையை உடைத்து பெறுமதிமிக்க அலைபேசிகள் மற்றும் பணத்தையும் திருடிய குற்றச்சாட்டில், திருடப்பட்ட அலைபேசிகளுடன் ஒருவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரைச் சேர்ந்த சப்ராஸ் என்பவரேகைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

"சில வாரங்களுக்கு முன்னர் திருட்டு இடம்பெற்றது. அதன்போது 15 அலைபேசிகள், 15 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டன. இந்த விபத்துத் தொடர்பில் விசாரணைமேற்கொண்டு வந்த நிலையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

அவர் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார். அதன்பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,26)

# பெற்றோருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்ப்பாணம், வேம்படி மகளிர் கல்லூரியில் 6ஆம் தரத்துக்கு அனுமதி பெறும் மாணவர்களின் பெற்றோருக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

"2016ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளுக்கு மேல் பெற்று கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கான கலந்துரையாடல் இது. யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் தம்பையா மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் ஆரம்பமாகும். சம்பந்தப்பட்ட பெற்றோர்கள் தவறாது சமுகமளிக்கவேண்டும்" என்று கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் கேட்டுள்ளார். (வ-4)

# இணையத்தளங்களில் அவதூறு; வவுனியா நபரிடம் விசாரணை


வவுனியா, டிசெ. 30

வவுனியாவில் கடந்த சில தினங்களாக முகநூல் மற்றும் இணையத்தளங்களுக்குத் தவறான தகவல்களை வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் ஒருவரை நேற்று விசாரணைக்குட்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

"அரசியல் கட்சி ஒன்றினை மையப்படுத்தியும் மற்றும் பலரைப் பற்றியும் அவதூறாகத் தகவல்கள் பரப்பியதாக வவுனியாவைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அவதூறு தொடர்பில் ஏற்கனவே பொலிஸில் முறையிடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் குறித்த சந்தேகநபர் நேற்று விசாரணைக்குட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டார். அவர் மீதான விசாரணைகள் தொடரவுள்ளன" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

# நல்லிணக்கபுரத்தில் குடிதண்ணீர்த் தாங்கி

## 60,000 லீற்றர் கொள்ளளவில் அமைக்கப்படுகிறது



யாழ்ப்பாணம், டிசெ. 30

கீரிமலை நல்லிணக்கபுரத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்கும் முகமாக 60 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர்த் தாங்கி அமைக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் விடுவிக்கப்பட்ட நல்லிணக்கபுரம் கிராமத்தில் சுமார் 130 குடும்பங்கள் வாழ்கின்றன. இதனால் இங்கு வாழும் மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இதுவரை காலமும் இவர்களுக்கு வலி.வடக்கு பிரதேச சபையால் பவுசர் மூலமே குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக யாழ். மாவட்ட செயலகத்தினால் 60 ஆயிரம் லீற்றர் கொள்ளவுடையதண்ணீர்த்தாங்கி அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான கட்டுமானப் பொறுப்பை கடற்படையினர் பொறுப்பெடுத்து மேற்கொண்டு வருகின்றனர். தண்ணீர்த் தாங்கி மூலம் குடிதண்ணீர் குழாய் வழியாக ஒவ்வொரு வீட்டுக்கும் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

குடிதண்ணீர்ப் பிரச்சினையால் பல இன்னல்களுக்கு முகம்கொடுக்கும் மக்கள் இனிவரப்போகும் தண்ணீர்தாங்கியினால் அவர்களுடைய குடிதண்ணீர் பிரச்சினை பெரிய அளவில் தீர்க்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்று கிராமத் தலைவர் இன்பராசா தெரிவித்தார். (வ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## பதவி வெற்றிடம்

**01. உப விடுதிக் காப்பாளர் (ஆண், பெண்)**

தகைமை:-

- க.பொ.த.சாதாரண தரத்துக்குக் குறையாத கல்வித் தகைமை.
- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம், உணவும், தங்குமிட வசதியும் இலவசம்.
- விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப்பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழி காட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை :- 25-50
- ஊதியத் திட்டம் :- ரூபா 9240 - 6x 250 - 15x280 - 14,940/=

**02. கணினி ஆசிரியர்**

தகைமை:-

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பட்டம் / பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்.
- Micro Soft Office, Corel Draw, Photoshop, GIT (உயர்தர மாணவர்களுக்கு) கற்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை:- 25 - 50. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**03. தையற் போதனாசிரியர்**

- எமது இல்லப் பிள்ளைகளுக்குத் தையல் கற்பிப்பதற்குத் தகுதி வாய்ந்த ஆண், பெண் ஆகிய இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- தகைமை :-
  அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து தையற்பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ். பூவேலை, பின்னல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- வயதெல்லை :- 25 - 50. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**04. பாதுகாப்பு அலுவலர் (பகல் - பெண்)**

- க.பொ.த.சாதாரண தரத்துக்குக் குறையாத கல்வித் தகைமை.
- வயதெல்லை :- 25 - 50
- ஊதியத் திட்டம் :- ரூபா.8,720 - 6 x250 - 15x280 - 14,420/=

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் **14.01.2017** இற்கு முன்னர் சைவ வித்தியா விருத்திச்சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/27511) (11,16)

தி.செல்வமனோகரன்,
செயலாளர்.

### வேலையாள்கள் தேவை

கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய Bill clerk தேவை. உணவு, தங்குமிடம் இலவசம்

**077 325 8492**

### மணமகன் தேவை

யாழ் இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 ஆம் ஆண்டு பூச நட்சத்திரம் லக்கினத்தில் சூரியன் செவ்வாய் உடைய 81 கிரகபாவம் கொண்ட அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகளிற்கு, அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன் தேவை. (சீதனம் வழங்கப்படும்)

**021 227 0633**

யாழ்.இளங்கலைஞர் மன்றம் நடத்தும்
### மாதாந்தக் கலையரங்கு

**காலம்**
31.12.2016 சனிக்கிழமை, பிற்பகல் 4.30 மணி

**இடம்**
இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம்
சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர்.

**சிறப்பு விருந்தினர்**
கலாபூஷணம் எஸ்.வரதராஜசர்மா
மிருதங்க வித்துவான்
(ஓய்வுபெற்ற இசை ஆசிரியர்)

**நிகழ்ச்சிகள்**
மாலை 4.30 - மங்கல விளக்கேற்றல்
5.00 - பாட்டு - திரு.ஜே.மதுஷிகன்
திரு.சி.நிதர்ஷன்
வயலின் - திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் - திரு.ஞா.வசந்
6.00 - பாட்டு - திரு.ப.சிவமைந்தன்
வயலின் - திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் - திரு.ஞா.வசந்
முகர்சிங் - திரு.என்.சதீஸ்குமார்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்
-மன்ற நிர்வாகத்தினர்.

## நருவில் மயானம் பற்றைகள் அழித்துச் சீரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.30

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள நருவில் மயானம் சுமார் 75 ஆயிரம் ரூபா செலவில் துப்புரவு செய்யப்பட்டது.

கிளாலியில் வசிக்கும் மக்களின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட இந்த மயானம் பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்ததால் மரங்கள் வளர்ந்து பற்றைக்காடாக மாறியிருந்தது. தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அங்கு செல்லும் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகினர். மயானத்தின் நிலை குறித்துப் பொது மக்கள் பல தடைவைகள் பிரதேச சபையின் கவனத்திற்குத் தெரியப்படுத்திய போதிலும் நிதியின்மை காரணமாக அது அபிவிருத்தி செய்யப்படாமலிருந்தது.

மயானத்தில் உள்ள குறைபாடுகள் குறித்தும் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் அந்தப் பகுதி மக்கள் மாகாணசபை உறுப்பினர் சயந்தனின் உதவியை நாடியதை அடுத்து அவர் மாகாண சபை நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கினார்.

தற்போது முதற் கட்டமாக மயானத்திலுள்ள பற்றைகள், மரங்கள் அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. (ற-115)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதி கைது

யாழ்ப்பாணம், டிசெ.30

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திரம் இன்றி வெள்ளை மணல் ஏற்றிச் சென்ற வாகனம் கைப்பற்றப்பட்டதுடன், அதன் சாரதி கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார தெரிவித்ததாவது:

நேற்று முன்தினம் இரவு ஏ-9 வீதியில் இரவ நேர சுற்றுக் காவலில் ஈடுபட்ட பொலிஸார் வாகனம் ஒன்றை வேம்பொடுகேணிப் பகுதியில் மறித்தனர். வாகனம் நிற்காது சென்றது. அதைத் துரத்திச் சென்ற பொலிஸார் எழுதுமட்டுவாழில் மடக்கிப் பிடித்தனர். வாகனத்தைச் சோதனையிட்டபோது அனுமதிப்பத்திரம் இன்றி வெள்ளை மணல்ஏற்றிச்சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது. சாரதி கைது செய்யப்பட்டார்.

அவரைச் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-6)

### WANTED TEACHERS

01.MONTESSORI AND PRIMARY TEACHERS.

02.ACCOUNTS & ADMIN. ASSISTANT

CONTACT.NO: 077 244 4172, 021 222 6242
E.mail: sat37aero@g.mail.com

## British College of Higher Studies
## வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

BCHS

**Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான**

### A1 IELTS *Life Skills*

இப்பாடநெறியானது எளிதாகக் கற்கக்கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகின்றது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி.

***Student, Migration Visa* மூலமாக UK செல்பவர்களுக்கான**

### IELTS *(Academic / General)*

ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months**

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன்கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

**இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.**

**Diploma in English 2½ Months**

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English Course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாடநெறி.

வகுப்புகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திறகமைவாக (Audio & Video Visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்.
எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
Excellent Teacher's Panel & Individual Attention
கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

### புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15, Sirambiyadi Lane, (Off Stanley Road.) Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)

**Tel: 021 222 4550 Hotline: 077 730 4545**

2017 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பம்
(EUROPEAN LANGUAGE CENTRE VAVUNIYA)
சர்வதேச கற்கை மொழிப்பயிற்சி நிலையம்



பதிவுகளுக்கு முந்துங்கள்
விசேட விலைக்கழிவுடன்

இல. 105, குசைப்பிள்ளையார் குளம் வீதி,
நெல்லிஸ்ரார் விடுதி அருகில்,
வவுனியா.
076 963 9447
024 561 6556

கிளிநொச்சியில்
இல.07,
பழைய கச்சேரி வீதி,
கிளிநொச்சி.
076 830 4043

Email: europeanlanguages2015@gmail.com

(V 184)(13.16)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

| இல. | ஆதன பெயர் | ஆதனம் அமைந்துள்ள இடம் | ஆதன உரிமையாளர் | ஆதனத்தின் அளவு |
|---|---|---|---|---|
| 01 | கோணாவளை சித்தர் காடு | பிறவுண் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (விளையாட்டு விஞ்ஞான அலகுடன் இணைந்தது) | திரு.திருமதி கிருஸ்ணமூர்த்தி தில்லைராஜேஸ்வரி | நிலப்பரப்பு 3 குளி 10.1 |

மேற்படி ஆதனம் ஆதன உரிமையாளரால் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளதாக எம்மிடம் தெரிவித்தமையால் இவ்வாதனத்தைப் பல்கலைக்கழகம் கொள்வனவு செய்ய தீர்மானித்திருப்பதனால் இவ்வாதனம் தொடர்பில் அக்கறை, உரித்து உள்ள எவரும் இருப்பின் 06.01.2017 ஆம் திகதி 3 மணிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்லைக்கழகம், திருநெல்வேலி.
27.12.2016

(11.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபை எல்லைக்குள் தினமும் 106 தொன் திண்மக் கழிவுகள்

## யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ். மாநகர சபை எல்லைக்குள் ஒரு நாளைக்கு 106 தொன் திண்மக் கழிவுகள் சேருகின்றன. அவற்றில் 11 தொன் கழிவுகள், மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடியதும், மிக அபாயகரமானதுமான கழிவுகளாகும். இவ்வாறு யாழ். மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையில் நேற்று செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாநகர சபைகள் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து அகற்றும்செயற்றிட்டம்நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. நாட்டில் உள்ள 23 மாநகர சபைகளில் இந்தச் செயற் பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது.

யாழ். மாநகர சபையும் திண்மக் கழிவு அகற்றும் செயற்பாட்டை பாசையூர், அரியாலை, நாவாந்துறை, நல்லூர், யாழ் நகரப் பகுதி, வண்ணார்பண்ணை, குருநகர் ஆகிய எழு வட்டாரங்களில் மேற்கொண்டது. மக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்குவிழிப்புணர்வையும் ஏற்படுத்தியிருந்தோம்.

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து முழு வீச்சுடன் திண்மக்கழிவுகள் அகற்றுவதற்கு தீர்மானித்துள்ளோம். வீதிகளில் திண்மக் கழிவுகளை கலந்து போடுவதால் சுகாதாரத் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. அவற்றைக் கட்டுபடுத்தும்முகமாக தண்டம் அறவிடப்பட்டு வருகின்றது. திண்மக் கழிவுகள் அகற்றல் செயற்பாடு என்பது மிகவும் சவாலானது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் ஒரு நாளைக்கு 106 தொன் திண்மக் கழிவுகள் சேருகின்றன. அவற்றில் 82 தொன் திண்மக் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. 71 தொன் திண்மக் கழிவுகள் உக்கக் கூடியதாக உள்ளன.

அவற்றில் 11 தொன் மீள் சுழற்சிக்கு உட் படுத்தக் கூடியதும், அபாய கரமான இலத்திரனியல் கழிவுகளும் சேர்கின்றன.

உக்கக் கூடிய திண்மக் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு காக்கைதீவில் சேதனப் பசளையாக மாற்றப்படுகின்றன. இதுவரை 8 ஆயிரம் கிலோ உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு சுற்றாடல் அதிகார சபையால் இலத்திரனியல் கழிவுகள் அகற்றும் செயற்பாடு நடைமுறைப் படுத்தப்பட்டபோது அதில் 6 ஆயிரத்து 100 கிலோ சேகரிக்கப்பட்டது-என்றார். (ற-5,7)



# யாழ். வருகிறது நெடுந் தாரகை

யாழ்ப்பாணம், டிசெ.30

வடக்கில் பயணிகள் சேவையில் ஈடுபடவுள்ள நெடுந்தாரகைப் படகு ஜனவரி 5 ஆம் திகதி மாலை டொக்கியாட் நிறுவனத்தில் இருந்து புறப்பட்டு 9 ஆம் திகதி குறிகாட்டுவான் துறையை அடையவுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

குறிகாட்டுவான் - நெடுந்தீவு இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்காக உலக வங்கியின் நிதிப் பங்களிப்பில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 150 மில்லியன் ரூபா செலவில் புதிய படகு கட்டப்பட்டது. படகுக் கட்டுமானத்தை கொழும்பில் உள்ள படகு கட்டும் நிறுவனமான டொக்கியாட் நிறுவனம் மேற்கொண்டிருந்தது.

80 பயணிகள் பயணிக்கக் கூடிய போதிய வசதிகளுடன்புதியபடகுஅமைக்கப்பட்டது. அதற்கான இயந்திரமும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டு படகில் பொருத்தப்பட்டது. கட்டுமானப் பணிகள் முடிந்துள்ள நிலையில் எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பு டொக்கியாட் நிறுவனத்தில் இருந்து கடல் மார்க்கமாக பயணித்து படகு யாழ்ப்பாணம் வரவுள்ளது. மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன் தெரிவித்ததாவது:

நெடுந்தாரகைப்படகின் 6 பணியாளர்களுக்கு எம்மால் கொழும்பு துறைமுக அதிகார சபையின் கீழ் உள்ள மாபொல நிறுவனத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவர்கள் பயிற்சிகளை நிறைவு செய்து யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்களைச் செயன் முறைப் பயிற்சிகளுக்காக வடதாரகையில் இணைத்துக் கொள்ள ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

நெடுந்தாரகை படகை உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வுகள் ஜனவரி மாத இறுதிப் பகுதியில் ஏற்பாடுசெய்யப்படவுள்ளது. நெடுந்தாரகையை கொழும்பு டொக்கியாட் நிறுவனத்தில் இருந்து கடல் மார்க்கமாக யாழ்ப்பாணம் கொண்டுவர கடற்படையின் அனுமதி கேட்டு விண்ணப்பித்திருந்தோம். அனுமதி கிடைத்துள்ளது.- என்றார். (ற-5,10)

# விபத்தில் சிக்கிய முதியவர் சிகிச்சை பயனின்றி சாவு

வீதி விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த முதியவர் சிகிச்சை பயனின்றி ஐந்து தினங்களின் பின்னர் நேற்று அதிகாலை உயிரிழந்தார். சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த சுந்தரம் வல்லிபுரம் (வயது-72) என்பவரே உயிரிழந்துள்ளார். கடந்த 24 ஆம் திகதி இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்திற்கு முன்பாக சைக்கிளை வீதியின் மறுபக்கம் செலுத்த முற்பட்ட வேளையில் வீதியூடாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் முதியவரும், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரும் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டனர். முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

முதியவரின் சாவு தொடர்பான அறிக்கையைச் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் நேற்றுச் சமர்ப்பித்த பொலிஸார் விபத்தை ஏற்படுத்திய கச்சாய் தெற்கைச் சேர்ந்த நபரையும் முற்படுத்தினர். பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான் விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளோட்டியை தலா 1 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார். (ற-5,9)

# திண்மக் கழிவு முகாமையில் தனியார் பங்களிப்புத் தேவை

யாழ்ப்பாணம், டிசெ. 30

தரம் பிரிக்கப்பட்ட திண்மக் கழிவுகளை முகாமைத்துவம்செய்வதற்கு ஆர்வமுள்ள பொதுத் தனியார் நிறுவனங்கள் யாழ் மாநகர சபையுடன் தொடர்புகொள்ளமுடியும்என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். மாநகர சபையில் நேற்று செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. கடந்த நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல்கழிவுகள் தொடர்பாகவும், திண்மக் கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பாக அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பாகவும் விளக்கமளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடுகளை மக்களுடைய ஒத்துழைப்புடன் செயற்படுத்தலாம். திண்மக் கழிவு தரம் பிரித்தலின் பின்னர் அவற்றை என்ன செய்வது என்பது மிகவும் சவாலுக்குரிய விடயம். அதனை மாநகர சபை மட்டும் செய்ய முடியாது. தனியார்களுடைய பங்களிப்புக்கள் இருக்க வேண்டும். பொது, தனியார் பங்களிப்பு என்ற சொல்லப் படுகின்ற விடயத்துக்கு ஏற்கனவே சென்றுள்ளோம்.

பிளாஸ்ரிக், பொலித்தீன் மீள்சுழற்சி நிலையத்தை எங்களுடன் சேர்ந்து தனியார் நிறுவனம் ஒன்று செய்து வருகின்றது. எதிர்வரும் காலத்திலும் தரம் பிரிக்கப்படும் திண்மக் கழிவுகளை பொது, தனியார் பங்களிப்புடன் பரிகரிக்க முடியும்.

ஹோமாகமவில் உள்ள இலத்திரனியல் கழிவுகள் அகற்றும் நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளோம். குறிப்பிட்ட அளவு இலத்திரனியல்திண்மக்கழிவுகள் சேர்ந்ததன் பின்னர் அவர்களுக்கு அதை விற்பனை செய்யமுடியும். ஆர்வம் உள்ளவர்கள் எங்களுடன் தொடர்புகொண்டு செயற்படும் போதும் திண்மக் கழிவு முகாமைத்துவத்தை வினைத்திறன் மிக்க செயற்பாடாகக் கொண்டு நடத்த முடியும் - என்றார். (ற-7)

# புத்தளம் கடற்பரப்புக்குள் நெடுந்தாரகைக்குத் தடை

கொழும்பு, டிசெ.30

வடக்கு போக்குவரத்து சேவைக்காககொழும்பு டொக்கியாட் நிறுவனத்தில் கட்டப்பட்ட நெடுந்தாரகைப் படகு புத்தளம் கடற்பரப்புக்கு ஊடாக யாழ்ப்பாணம் பய ணிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் - நெடுந்தீவு பயணிகள் சேவையில் ஈடுபடவுள்ள இந்தப் படகு கொழும்பில் கட்டப்பட்டது. கொழும்பு டொக்கியாட் நிறுவனத்தில் இருந்து குறிகாட்டுவான் பிரதேசத்துக்கு கடல் மார்க்கமாக கொண்டு செல்வதற்கான அனுமதி வடமாகாண ஆளுநர் ஊடாக பாதுகாப்பு அமைச்சிடம் கோரப்பட்டிருந்தது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இலங்கையின் மேற்கு கடல் பரப்பில் புத்தளம் கடலைத் தாண்டிப் பயணிக்க அனுமதிக்க முடியாது எனவும் பதிலாக கிழக்குத் திசையின் ஊடாக பயணித்து யாழ்ப்பாணத்தை அடையுமாறும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மூன்று நாளில் சென்றடைய வேண்டிய இலக்கை, 5 நாள்கள் பயணத்தின் மூலம் சென்றடைய வேண்டிய நிலை நெடுந்தாரகைக்கு ஏற்பட்டுள்ளது. படகை கொழும்பு டொக்கியாட் நிறுவனப் பணியாளர்கள் செலுத்தி வரவுள்ளனர். (ற-101)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# எமது மரபுரிமைச் சான்றுகளை ஆவணப்படுத்துவது அவசியம்

## யாழ்.பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30
கட்டுக்கரைக் குளத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்கள் எங்களுடைய மரபுரிமைச் சான்றுகள். நாங்கள் யார், எங்களுடைய அடிப்படைகள் என்ன என்பதைக் கண்டுபிடித்து ஆவணப்படுத்தி பாதுகாக்க வேண்டும். இந்தப் பொறுப்பு பேராசிரியர் புஸ்பரட்ணத்துக்கும், யாழ். பல்கலைக்கழகத்துக்கும், கலைப்பீடத்துக்கும், தொல்லியல் துறைக்கும் உண்டு. இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்களால் கண்காட்சியும், தேடல்-2 சஞ்சிகை வெளியீடு நிகழ்வும் நடத்தப்பட்டன. மன்னார் கட்டுக் கரைக் குளத்தடியில் மேற்கொண்ட அகழ்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களை மையப்படுத்தியே கண்காட்சி இடம்பெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
நாங்கள் யார், எங்கிருந்து வந்தோம், எப்போது வந்தோம், எங்களுடைய கலாசாரம் என்ன, பண்பாடுகள் எவை என்பவை பற்றிய கேள்விகள் எழுப்பப்படுகின்றன. எங்களுடைய கலை, கலாசாரம், பண்பாடுகள் பற்றி வெளிப்படுத்த எங்களுக்குத் தொல்லியல் ஆய்வுகள் அவசியம். எங்களுடைய மரபுரிமைகளைப் பாதுகாக்க- யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் முழுமையான ஆதரவை வழங்கும்.

இன்று எட்டு ஆண்டுகளுக்குப்பின்னர் வெளிவருகின்ற தேடல்-2 என்ற சஞ்சிகை இனிவரும் காலங்களில் ஒவ்வொரு வருடமும் வெளிவர வேண்டும் - என்றார்.

தொல்லியத்துறைப் பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்ததாவது-
தொல்லியல் துறையும், சுற்றுலாத் துறையும் இணைந்து செயற்பட்டால்தான் தொல்லியல் வரலாற்றுச் சான்றுகளைப் பாதுகாக்க முடியும். விஞ்ஞானமும், சமூக விஞ்ஞானமும் இணைந்தால்தான் பல விடயங்களில் உள்ள உண்மைகளை நாம் முழுமையாக அறிந்து கொள்ள முடியும்.

இன்று வெளிவந்துள்ள தேடல்-2 சஞ்சிகை மற்றும் தொல்லியல் கண்காட்சிகள் அகழ்வுப் பணியில் ஈடுபட்ட மாணவர்களின் முயற்சிக்கும், ஆர்வத்துக்கும், புலமைக்கும் கிடைத்த வெற்றி என்றார்.

தொல்லியல் துறை மாணவர்களின் தொல்லியல் கண்காட்சி, தொல்லியல் அருங்காட்சியகத்தில் மு.ப. 9.30 மணியளவில் ஆரம்பமாகியது. நிகழ்வுக்கு தொல்லியல் துறை மாணவன் பொ.வருண்ராஜ் தலைமை தாங்கினார்.

கடந்த 6 மாத காலமாக மன்னார் கட்டுக்கரைப் பகுதியில் தொல்லியல் துறை மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது கண்டு பிடிக்கப்பட்ட தொல்பொருள் சான்றுகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கண்காட்சியைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் 'தேடல்-2' சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது.

துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அதனை வெளியிட்டார். அகழ்வாராய்ச்சியின் தொன்மையை உணர்த்தும் நாள்காட்டியும் வெளியிடப்பட்டது. (ற-5,ரி)

# இரு ஆண்டுகளாக களஞ்சியத்தில் நெல்

## பழுதடையும் அபாயம் என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 30
புத்தூர் பெரும்போக கமநல சேவை நிலைய வளவில் அமைந்துள்ள இரண்டு பெரிய களஞ்சியங்களில் ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் மேற்பட்ட நெல் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக எதுவித நடவடிக்கையும் இன்றிக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரிசி விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு எனக் கூறப்படும் இந்த வேளைகளில் கூட, புத்தூரில் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல் ஏன் பயன்பாட்டுக்கு எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

நெல் சந்தைப்படுத்தும் சபை 2013/2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். மாவட்ட விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குப் பொருத்தமான களஞ்சியம் இல்லை எனக் கூறியது. நெல் கொள்வனவு செய்வதற்குப் பின்னடித்தது. விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இரண்டு களஞ்சியங்களையும் கமநலசேவைகள் திணைக்களம், நெல்சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கியது. நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்த நெல்லை இரண்டு களஞ்சியங்களிலும் களஞ்சியப்படுத்தியது.

களஞ்சியப்படுத்தப்பட்ட நெல் இன்றுவரை உபயோகிக்கப்படவில்லை. களஞ்சியங்களும் கமநல சேவைத் திணைக்களத்திடம் திணைக்களத்தின் பாவனைக்கு மீளக் கையளிக்கவில்லை எனவும் தெரிய வருகின்றது.

புத்தூர் பெரும்பாக கமநல சேவை நிலையக் காணியில் அமைந்துள்ள மிகப் பெரிய களஞ்சியங்கள் இரண்டும் யாழ். மாவட்ட விவசாயிகளின் தேவைக்கான உர வகைகளைக் களஞ்சியப்படுத்தி வைத்து விநியோகிப்பதற்கு ஏற்றவகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, களஞ்சியங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல் இரண்டு வருடங்களைக் கடந்த நிலையில் இருப்பதால் அந்து உள்ளிட்ட பூச்சிகளின் தாக்கத்துக்கு உள்ளாகி சேதமடைந்து பொதுமக்களின் பாவனைக்கு உதவாத வகையில் மாறக் கூடிய வாய்ப்பும் உள்ளது- என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கேட்டபோது இது பற்றி ஊடகங்களுக்கு என்னால் பதிலளிக்க இயலாது என்று வடமாகாண நெல் சந்தைப்படுத்தும் பிரிவு முகாமையாளர் நிசங்க தெரிவித்தார். (ற-5,10,11)

# மழையால் தப்பின பயிர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.30
கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் மழையால் அழிவடையும் நிலையில் காணப்பட்ட நெற்செய்கை எழுச்சியடைந்துள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் மற்றும் அபிவிருத்தித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஈ.தயாரூபன் தெரிவித்தார்.

பெரும்போக செய்கை விதைக்கப்பட்டு பயிர்கள் நீர் இன்றி பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த வாரம் தொடக்கம் முதல் ஆங்காங்கே மழை பெய்து வருகின்றது

பயிர் நிலங்கள் படிப்படியாக செழிப்பு அடைந்து வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு குளத்தில் தற்போது திருத்த வேலைகள் காரணமாக நீரைத் தேக்கி வைத்து விவசாய நடவடிக்கைக்கு வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. சில பகுதிகளுக்கு கல்மடுக் குளத்தின் நீர் வழங்கப்பட்டது- என்று அவர் தெரிவித்தார். (ற-6)



மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலையினால் பதுளை - கொழும்பு பிரதான வீதியில் அப்புத்தளை மற்றும் பெரகல பகுதிகளில் கனத்த பனிமூட்டம் காணப்படுகின்றது. நேற்றுக்காலை வேளையில் நிரம்பிய பனிமூட்டத்தால் வாகனச் சாரதிகள் பலத்த சிரமங்களுக்கு முகம்கொடுத்தனர். சாரதிகள் தங்களின் வாகனங்களை மிக அவதானத்துடன் செலுத்துமாறும், வாகனங்களில் முன்விளக்குகளை (ஹெட்லைட்) ஒளிரவிட்டுச் செல்லுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ற-ய-43)

# மனைவி, மகள் மீது தாக்குதல்; குடும்பத் தலைவருக்கு மறியல்

தென்மராட்சி, டிசெ.30
மனைவி, மகள் உட்பட நான்கு பெண்களைத் தாக்கிக் காயப்படுத்தியவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிமன்று.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவளை - இயற்றாலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. மதுபோதையில் வந்த கணவன் தனது மனைவியை மோசமாகத் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான மனைவி மறுநாள் காலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பிய 16 வயது மகளை மரத்துடன் கட்டி வைத்த தந்தை அவரை கருக்கு மட்டையால் தாக்கியுள்ளார். அதைத் தடுக்க வந்த இரு பெண்களையும் தாக்கிக் காயப்படுத்தினார். தாக்குதலுக்கு இலக்கானவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதலுக்கு இலக்கான ஏனைய இருவரும் மனைவியின் தாயும், பெரியதாயும் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து கொடிகாமம் பொலிஸார் கணவரைக் கைது செய்து நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் அவரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற)

# தென்மராட்சியில் இந்த ஆண்டு 1,784 அபிவிருத்தி வேலைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 30
தென்மராட்சி பிரதேச செயலகத்தால் இந்த வருடத்தில் ஆயிரத்து 784 அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதேச செயலக புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிரந்தர வீடில்லாத 5 ஆயிரத்து 975 குடும்பங்களில் 348 குடும்பங்களுக்கு தலா 8 லட்சம் ரூபா பெறுமதியான நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. வீட்டு வேலைகள் பூர்த்தி செய்யாமையால் குடியமர முடியாதிருந்த ஆயிரத்து 613 குடும்பங்களில் 90 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தலா 2 லட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வீட்டு வேலைகள் நிறைவு செய்யப்பட்டன.

புனர்வாழ்வு அமைச்சால் தெரிவு செய்யப்பட்ட 345 குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களால் முன்மொழியப்பட்ட 76 அபிவிருத்தி வேலைகள் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தில் 91 வேலைத் திட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டு அவை நிறைவு செய்யப்பட்டன. பிரதேசத்தில் 3 ஆயிரத்து 934 குடும்பங்கள் மலசலகூடம் இன்றி வாழ்கின்ற போதிலும் மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்ட நிதியில் 174 மலசல கூடங்களும் வேள்ட் விசன் நிறுவனத்தால் மாற்றுத் திறனாளிகள் உட்பட 252 பேருக்கு மலசலகூடங்களும் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டன.

வெள்ள இடரால் வீடுகளை முழுமையாகவும், பகுதியாகவும் இழந்து பாதிக்கப்பட்ட 596 குடும்பங்களில் முழுமையாக வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதமும் பகுதியாக வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரை இடர் முகாமைத்துவப் பிரிவால் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபை உறுப்பினர்களால் பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளும் உரிய முறையில் செலவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக பாதுகாப்பு வலைப்பின்னலை விரிவுபடுத்த உலக வங்கி கடனுதவி



கொழும்பு, டிசெ. 30

சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் வேலைத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக இலங்கை அரசுக்கும் உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி நிறுவனத்துக்கும் இடையே 75 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நிதி அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த உடன்படிக்கையில் இலங்கை அரசின் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ் சமரதுங்கவும் உலக வங்கியின் சார்பில் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் ஐடாஸ் சுவராயிறிட்டிகோவும் கைச்சாத்திட்டனர்.

இது தொடர்பான நிகழ்வு நிதியமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தநிதிஉதவியின்கீழான வேலைத்திட்டம் 2017ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டுவரை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சமநிலை மேம்படுத்துதல், நாட்டின் சமூகப் பாதுகாப்பு வலைப் பின்னலை விதிகளுக்கமைவாக முன்னெடுத்தல், அதன் செயற்பாடுகளை சிறப்பான முறையில் செயற்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக குறைந்த வருமானத்தைக் கொண்ட பொதுமக்கள் இதன் மூலம் நன்மைகளை பெற்றுக்கொள்வர்.

நிதியமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தில் ஏனைய நிறுவனங்களும் இணைத்துக்கொள்ளப்படும்.

இந்த உத்தேச வேலைத்திட்டத்துக்கான மொத்தச் செலவு 75 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்த நிதியை உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி நிறுவனம் வழங்குகின்றது. இந்த நிதி உதவியை 5 வருடத்தில் நிவாரண வட்டியின் கீழ் செயற்படுத்த வேண்டும்-என்றுள்ளது. (வ)

# அரசியல் அதிகாரங்களை அடாவடியால் பெறயியலாது

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர் ரிசாத்




புத்தளம், டிசெ. 30

அரசியல் அதிகாரங்களையும் பதவிகளையும் அடாவடித்தனங்கள் மூலமோ சமூகத்திற்கிடையே குழப்பங்களை ஏற்படுத்தியோ ஒருபோதுமே பெற்றுக் கொள்ள முடியாது. அது இறைவனால் வழங்கப்படுகின்ற அருட்கொடை. இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

மீனவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு புத்தளம் கடற்கரைப் பள்ளிவாசல் முன்றிலில் இடம்பெற்றது. இதில் முதன்மை அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் தெரிவித்ததாவது:

அரசியல் அதிகாரம் ஜனநாயக வழியில் பெறப்பட வேண்டிய ஒன்று. அடித்து நொறுக்கி அபாண்டங்களைக் கூறி பழிகளைச் சுமத்தி அதனைப் பெற்றுக் கொள்ளலாமென நினைப்பது மடைமைத்தனமாகும்.

கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக புத்தளம் தொகுதி, அரசியல் அதிகாரத்தை இழந்து நிற்கின்றது. இதனால் இங்குள்ள மக்கள் தவிக்கின்றனர். பிரிவும் பிளவும் ஒற்றுமையீனமுமே இந்தப் பிரதிநித்துவத்தை நாம் இழந்து நிற்பதற்கு முதன்மைக் காரணம்.

புத்தளத்தின் அரசியல் அதிகாரம் அற்றுப்போனதால் நாம் கையறு நிலையில் இருக்கின்றோம். இந்த மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் நடப்பதற்குப் பதிலாக இங்குள்ள மக்களை பாதிப்புக்குள்ளாக்கும் செயற்திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன. இருக்கும் கட்டடங்களும் நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலையையே காண்கின்றோம்.

ஏற்கனவே அனல் மின்நிலயத்தின் தாக்கத்தினால் பல்வேறு பாதிப்புக்களை அனுபவித்து வரும் எங்கள் மீது இப்போது குப்பைகளையும் கொட்டத் துடிக்கின்றார்கள். கொழும்புக் குப்பைகளை புத்தளத்தில் கொட்ட எடுக்கும் அவசரமான முயற்சிகளுக்கு நாம் அனுமதிக்கப்போவதில்லை.

புத்தளத் தொகுதி இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கி வருகின்றது. உலகின் எந்த மூலையிலும் முஸ்லிம்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டால் முதலில் புத்தளம் வாழ் முஸ்லிம்களே முன்னின்று குரல் கொடுக்கின்றனர். பாலஸ்தீனத்தில் அட்டூழியங்கள் இடம்பெற்ற போதும், சதாம் ஹுசைனுக்கு மேற்குலகம் கொடுமைகளைச் செய்த போதும் காஸாவில் மோசமாக தாக்குதல்கள் இடம்பெற்ற போதும் இங்கு வாழ் முஸ்லிம்கள் துணிந்துநின்று குரல் கொடுக்கின்றனர். இத்தனைக்கும் மேலாக ஒரு இலட்சம் முஸ்லிம்களை புலிகள் விரட்டியடித்த போது எந்தவிதமான சலிப்புக்களுமில்லாமல் அவர்களை அரவணைத்து, உணவளித்து, உடுதுணிகள் வழங்கி இருக்க இடம் வழங்கியவர்கள் புத்தளம் வாழ் முஸ்லிம்களே-என்றார். (வ)

# மின்சார சபை ஊழியர்கள் புதனன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ. 30

இலங்கை மின்சார சபையின் சம்பளப் பிரச்சினைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனவரி மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக மின்சார சபை ஊழியர்கள் சங்கம் அறிவித்தது.

இதற்கமைய மின்சார சபையின் அனைத்து ஊழியர்களையும் கொழும்புக்கு அழைத்து எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக, அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்றுமுன்தினமும் மின்சக்தி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. எனினும் அது தோல்வியில் நிறைவடைந்தது என்று மின்சார சபை ஊழியர்கள் சங்கத்தின் முதன்மைச் செயலாளர் ரஞ்சித் ஜெயலால் தெரிவித்தார். (வ)

# நான்கு கோடி பாடப்புத்தகங்கள் பாடசாலைகளுக்கு விநியோகம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

பாடசாலை மாணவர்களுக்கு இதுவரை நான்கு கோடி புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் நூல் பிரசுரங்களுக்கு பொறுப்பான ஆணையாளர் நாயகம் பத்மினி நாளிக்கா தெரிவித்தார்.

"பாடசாலை மாணவர்களுக்காக நான்கு கோடியே பத்து லட்சம் பாடப் புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதில் நான்கு கோடி புத்தகங்கள் விநியோகிக்கப்பட் டுள்ளன.

பாடசாலைகளில் அடுத்த வருடத்திற்கு தேவையான சகல பாடப் புத்தகங்களும் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. பாடப்புத்தகங்களை கல்வி அமைச்சின் விற்பனை ஊக்குவிப்பு மையத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

பன்னாட்டு பாடசாலைகளுக்கு தேவையான பாடப்புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. தரம் ஒன்று மாணவர்கள் மற்றும் வேறு பாடங்களை தெரிவு செய்யும் வகுப்பு மாணவர்கள் ஆகியோருக்கான பாடப்புத்தகங்கள் முதலாம் தவணை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்படும்" என்று நூல் பிரசுரங்களுக்கு பொறுப்பான ஆணையாளர் தெரிவித்தார். (வ)

# பண்டிகைக் காலத்தில் நுகர்வோரை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள்

## பாவனையாளர் அலுவல்கள் சபை தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

பண்டிகைக் காலப்பகுதியில் நுகர்வோர் நலன்கருதி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரத்ன தெரிவித்தார்.

நுகர்வோர் நலன்கருதி முற்றுகைகளை மேற்கொள்வதற்கு அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

"நாடு முழுவதும் டிசெம்பர் மாதத்தில் இதுவரையில் 12 ஆயிரத்து 84 முற்றுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பிட்ட வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நுகர்வோரைத் தவறாக வழிநடத்துதல், காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, உணவுப் பொருள்களில் சேர்க்கப்படாத இரசாயனங்களை பயன்படுத்தியமை ஆகிய தவறுகளுக்காக இந்த வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார். (வ)

# ஓய்வு பெறாமல் இருப்பவர்களால் பெரும் தலையிடியாம்

கொழும்பு, டிசெ. 30

ஓய்வு பெறவேண்டிய அதிகாரிகளை தொழில் திணைக்களத்தில் வைத்திருப்பதால், பெரும் சிக்கல் தோன்றியுள்ளதாக, அரச சேவை தொழில் அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

இவற்றைத் தடுக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அந்தச் சங்கத்தின் தலைவர் ஐ.சீ.கமகே கேட்டுள்ளார். அவ்வாறு இல்லையாயின் எதிர்வரும் காலங்களில் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரி வித்தார். (வ)



# மலேசியாவுக்கான தூதுவராகிறார் முஸாமில்

கொழும்பு, டிசெ. 30

இலங்கைக்கான மலேஷியாவின் புதிய தூதுவராக ஏ.ஜே.எம்.முஸாமில் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி முதல் அவர் தனது பதவியைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கைக்கான மலேஷிய தூதுவராக இதுவரை ஐ.அன்சார் பதவி வகித்தார். (வ)

# அடக்கம் செய்த சடலம் நள்ளிரவில் தோண்டி எடுப்பு

சில தினங்களுக்கு முன்னர் அடக்கம் செய்யப்பட்ட பெண்ணொருவரின் சடலத்தை நள்ளிரவில் தோண்டி எடுத்த சம்பவம் ஒன்று நாரம்மல, மெதகொட பகுதியில் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

இனந்தெரியாத சிலரால் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு, அதிலிருந்து காதணிகள் திருடப்பட்டுள்ளன. திருடர்கள் சடலத்தை குறித்த இடத்திலேயே விட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ)

# வெடிபொருள்களுடன் இருவர் கைது

கொழும்பு, டிசெ. 30

வெடிபொருள்களை விநியோகம் செய்து கொண்டிருந்த இரண்டு பேர் மஹஓய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மஹஓய பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், கார் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.


அவர்களிடமிருந்து 90 கிராம் பிளாஸ்டர் தூள், 200 கிராம் அமோனியா நைட்ரேட், 135 கிராம் நீர் ஜெல் உட்பட இன்னும் சில பொருள்களும் கைப்பற்றப்பட்டன. மேலதிக விசாரணைகளுக்காக மஹஓயா பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர்கள் ஒப்படைக்கப்பட்டனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பிரபாகரன் குறித்து விஜயகலா கூறியது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடா?

## வீரவன்ச எம்.பி. கேள்வி



கொழும்பு, டிசெ. 30
பிரபாகரனை நியாயப்படுத்தும் வகையில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்டுள்ள கருத்து ஐக்கிய தேசிய கட்சியின் உத்தியோக பூர்வ நிலைப்பாடா? இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தாக கருதமுடியுமா?

இவ்வாறு கேள்வியெழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச நேற்று நிதிக் குற்றப் புலனாய்வு விசாரணைப் பிரிவின் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிவினைவாத நிலைப்பாட்டுக்கும் அப்பால் சென்று ஒரு பிரிவினைவாத நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளமை இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்தின் ஊடாக புலப்படுகிறது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கூறினார். (வ)

# ரவிராஜ் படுகொலை வழக்குத் தீர்ப்பு
# இலங்கையின் நீதித்துறையின் பலவீனம் பன்னாட்டுச் சமூகத்தின் வெளிச்சத்துக்கு

## குடிமக்கள் கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30
ரவிராஜ் படுகொலைச் சந்தேக நபர்களை விடுதலை செய்ததன் மூலம், நாட்டின் நீதித்துறை பலவீனமாகக் காணப்படுகின்றது என்பதை பன்னாட்டுச் சமூகம் விளங்கிக் கொள்ளவதை தடுக்க முடியாது. இவ்வாறு குடிமக்கள் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சமன்ரத்ன பிரிய தெரிவித்தார்.

கொழும்பு மருதானையில் சி.எஸ். ஆர். மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் பெருமளவு படுகொலைகள் நடைபெற்றன. 30 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். 60 பேர் வரையில் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர். சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் கொல்லப்பட்டனர். ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் போன்ற அரசியல்வாதிகளும் படு கொலை செய்யப்பட்டார்கள்.

ரவிராஜ் படுகொலையில் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்பு, கடந்த காலப் படுகொலைகள் தொடர்பான விசாரணைக்கு என்ன நடக்கும் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நியாயம் கிடைக்குமா என்ற சந்தேகத்தையும் உருவாக்கியுள்ளது.

புதிய அரசு அமைக்கப்பட்ட போது, படுகொலைகளுக்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர். படுகொலை தொடர்பான விசாரணைகளை உரிய முறையில் முன்னெடுத்து குற்ற மிழைத்தவர்களுக்கு எதிராகச் சரியான நீதிமன்றத் தீர்ப்பை வழங்கி சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். இதுவே நீதியைக் கோருகின்றவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

ரவிராஜின் வழக்குத் தீர்ப்பின் மூலம் நாட்டிற்குள்ளும் பன்னாட்டுச் சமூகத்துக்குள்ளும் நீதியைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் தற்போது ஏற்பட்டுள்ளது. ரவிராஜ்ஜை படுகொலை செய்தனர் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அது மிகவும் தெளிவான விடயம். அவரை ஏன் படுகொலை செய்தனர் என்பதும் அரசியல் ரீதியாக எம்மால் சிந்தித்துப் பார்க்கக் கூடிய விடயமாகும்.

ரவிராஜைப் படுகொலை செய்தனர். அவர் தற்கொலை செய்து கொள்ளவில்லையல்லவா ? நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு பொலிஸாரினால் ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. படுகொலை என்பது நீதிமன்றில் வெளிப்படுத்தப்பட்டது. கொலையை நேரில் கண்ட சாட்சி கூட இருந்தது. இறுதியில் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளால் சிறப்பு அறங்கூறும் சபை அமைக்கப்பட்டது. அந்தச் சபை கடைசியில் ரவிராஜ் கொலைச் சந்தேக நபர்களை விடுவித்தது.

இந்தத் தீர்ப்பின் மூலம் படுகொலைக்கு உள்ளாகியவர்களின் குடும்பத்தினருக்கு நீதி கிடைக்குமா என்ற விடயம் தொடர்பில் எமக்குள் கேள்வி எழுகின்றது.

இந்த அரசு படுகொலைகளுக்கு எதிராக - ஊழலுக்கு எதிராக செயற்படும் என்று தற்போதைய அரசு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தது. அந்த உறுதி மொழியை நிறைவேற்றத் தவறுகின்ற விடயமானது ரவிராஜ் படுகொலைச் சந்தேக நபர்களை விடுதலை செய்தன் மூலமாக நிரூபணமாகியுள்ளது. இதன் மூலம் மக்களின் நம்பிக்கை குலைந்து போவதை நிறுத்த முடியாது. நாட்டுக்குள் மட்டுமன்றி பன்னாட்டுச் சமூகத்திலும் இது தொடர்பாக கேள்வி எழும் - என்றார். (வ-5)

# வீதியை சீரமைக்குமாறு ஆதிவாசிகள் கோரிக்கை

அம்பாறை, டிச.30
பொலன்னறுவை மாவட்டத்தில் ஆதிவாசிகள் வாழ்ந்துவரும் மகியங்கனைப் பிரதேசத்தில் வீதிகளை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மட் நஸீரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது. திருகோணமலை சுகாதார அமைச்சுக்கு வருகைதந்த மகியங்கனை - தம்மான ஆசிவாசித் தலைவர் குணா நந்த அமதுரு அமரஜீவ அமைச்சரைச் சந்தித்துத் தமது குறைபாடுகள் தொடர்பில் எடுத்துரைத்ததோடு, கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் கையளித்தார். (வ-ய-48)

# கோணேஸ்வரர் ஆலயத்தைச் சீரமைக்க எந்த அனுமதியும் பெறத் தேவையில்லை

## பிரதேச இந்து குருமார் சங்கம் தெரிவிப்பு

மூதூர், டிசெ.30
திருகோணமலை, திருக்கோணேஸ்வரர் ஆலய மடத் திருத்தப் பணிக்கு எவரிடமும் அனுமதிபெறவேண்டிய கட்டாயம் இல்லை என்று மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ இ.பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிவபூமியான திருக்கோணேஸ்வரர் ஆலயம் இந்துக்களின் உயிர் மூச்சான 5 ஈஸ்வரங்களில் ஒன்றாகும். இந்த ஆலயத்தின் மடத்தைத் திருத்துவதற்கான முழு உரிமையும் ஆலய அறங்காவலருக்கு உள்ளது. இதற்கு எவரிடமும் அனுமதி பெறவேண்டிய கட்டாயம் இல்லை. அந்த வகையில் கோணேஸ்வரர் ஆலய அறங்காவலரான எழுத்தாளரும் இறைப்பற்றாளருமான க. அருள் சுப்பிரணியத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முற்படுவதைக் கண்டிக்கின்றோம்.

இந்த விடயம் இந்துக்களின் மனதை புண்படவைப்பதுடன், அரசு மேற்கொள்கின்ற இன, மத நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கும் குந்தகமாக அமையலாம்.

எனவே, இதை மேற்கொள்ள முயற்சிப்பவர்கள் பரந்தளவில் சிந்தித்துச் செயல்பட்டால் ஆரோக்கியமாக அமையும் - என்றுள்ளது. (வ-ய-40)

# துறைமுக ஊழியர்கள் திங்கள் முதல் கறுப்புப் பட்டிப் போராட்டம்

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் இலங்கை மற்றும் சீன நிறுவனத்துக்கு இடையே கைச்சாத்திடப்படவுள்ளதாக கூறப்படும் உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அகில இலங்கை துறைமுக ஊழியர்கள் சங்கம், பெரியளவிலான எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அறவித்தது.

“ஜனவரி 2ஆம் திகதி முதல் அனைத்து துறைமுக ஊழியர்களும் கறுப்புப்பட்டி அணிந்து கடமைக்கு சமூகமளிப்பர். அதே போல் வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்படும்” என்று அந்த சங்கத்தின் செயலாளர் சந்திர சிறி மஹகமகே தெரிவித்தார். (வ)

# வாகனங்களைப் பதிவு செய்யும் சலுகைக் காலம் இன்று நிறைவு

கொழும்பு, டிசெ. 30
பதிவுசெய்யாத வாகனங்கள் மற்றும் உரிமை மாற்றங்கள் செய்யப்படாத வாகனங்களின் உரிமையாளர்கள் எந்தவித தண்டத் தொகையும் செலுத்தாமல் அவற்றைப் பதிவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த சலுகைக்காலம் இன்றுடன் முடிவடைவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் ஏ.எச்.கே.ஜகத் சந்திரசிறி தெரிவித்தார்.

“கடந்த பல வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் உட்பட ஏராளமான வாகனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படாமல் பாவிக்கப்பட்டு வந்தன. அத்துடன், பல வருடங்களாக வாகனங்களை விற்றவர்கள் அவற்றின் உரிமை மாற்றங்களை செய்து கொள்ளவில்லை. இந்தக் காரணங்களால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய பெருந்தொகை வருமானம் இல்லாமல் போயிருந்தது. இவ்வாறான பிந்திய பதிவுகளையும், உரிமை மாற்றங்களையும் தண்டத் தொகை எதுவுமின்றி செய்துகொள்வதற்காக கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் டிசெம்பர் வரையிலான மூன்று மாதங்கள் சலுகைக்காலமாக வழங்கப்பட்டிருந்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஏராளமானவர்கள் தங்களது வாகனப் பதிவுகள் மற்றும் உரிமை மாற்றங்களைச் செய்து கொண்டனர். இந்தச் சலுகைக் காலம் மேலும் நீடிக்கப்பட மாட்டாது” என்றும் அவர் தெரிவித்தார். (வ-4)

# திருக்கோணேஸ்வரர் ஆலய சீரமைப்புக்கு தொல்பொருள் திணைக்களம் முட்டுக்கட்டை

## ஆலய பரிபாலன சபைத் தலைவர் குற்றச்சாட்டு

மூதூர், டிச.30
திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்களம் தொடர்ந்து முட்டுக்கட்டையாகவுள்ளதாக திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.அருள் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபையின் தலைவரைக் கைது செய்ய சில தினங்களுக்கு முன்னர் பொலிஸார் முயச்சித்தனர். இந்தவிடயம் தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“ஆலயத்துக்கு அன்றாடம் மூவினங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களும் சுற்றுலா பிரயாணிகளும் வருகின்றனர். அவர்களை ஆதரித்து போதுமான சேவைகளை வழங்குவதற்கு கட்டுமானங்களை மேற்கொள்ள வேண்டும். அவற்றுக்கான அனுமதியை நாம் தனித்தனியாக தொல்பொருள் திணைக்களத்திடம் கோரியபோது, முழுமையான திட்டம் ஒன்றைத் தருமாறு கோரினர்.

அந்த முழுமயான திட்டம் வழங்கப்பட்டு 3 வருடங்களாகியும் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனினும், கடந்த ஓகஸ்டில் எதிர் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் உட்பட பலர் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துடன் நடத்திய கலந்தரையாடலுக்மைய அன்னதான மடம் மற்றும் தேர் முட்டி சீரமைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அன்னதான மடத்தை விரிவாக்குவதற்கு இரண்டு வேப்பமரங்கள் இடையூறாக இருந்ததால், பணியாளர்கள் அவற்றை அகற்றினர். இதனையடுத்து வருகைதந்த பொலிஸார் என்னை கைதுசெய்ய முயன்றனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க எமது ஆலயத்தை அனுமதி எடுத்து சீரமைத்தாலும்கூட இவ்வாறான பல அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் வருகின்றன - என்றார். (வ-ய-40)

# போலி இந்திய கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த இலங்கையர்கள் கைது

புதுடில்லி, டிசெ. 30
போலி இந்திய கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த இரு இலங்கையர்கள் கொல்கத்தா வானூர்தி நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுரேஷ் கரனி மற்றும் ஜெபனேன் ரமேர் வானி ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டனர்.

“இலங்கையிலிருந்து சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் இந்தியா சென்ற குறித்த நபர்கள் போலி ஆவணங்களை காட்டி இந்திய குடிமக்களாக வாழ்ந்துள்ளனர். இந்த நிலையில் போலி ஆவணங்களைக் கொண்டு தயாரித்த இந்திய கடவுச்சீட்டுக் களுடன் இவர்கள் சீனாவிலிருந்து பிரான்ஸ் நாட்டிற்கு சென்றுள்ளனர். பிரான்ஸ் நாட்டு குடிவரவு திணைக்கள அதிகாரிகள் ஆவணங்களை சரிபார்க்கவே குறித்த நபர்கள் போலி இந்திய கடவுச்சீட்டில் பிரான்ஸ் வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த நபர்கள் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்ட நிலையில், அவர்கள் கொல்கத்தா சுபாஷ் சுந்தரபோஸ் பன்னாட்டு வானூர்தி நிலைய குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் போலி ஆவணங்கள் தயாரித்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டனர்” என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நூலகக் காப்பகத்தில் தமிழ் நூல்கள் மிகக்குறைவு

## இலங்கை தேசிய நூலக வெளியீட்டுப் பிரிவுத் தலைவர் தெரிவிப்பு

> இலக்கியம் மற்றும் பல்துறைசார் நூல்களின் வெளியீட்டுக்கு 50 ஆயிரம் ரூபாவில் இருந்து 60 ஆயிரம் ரூபா வரை உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம். டிசெ. 30

இலங்கை தேசிய நூலக வெளியீட்டுத் திணைக்களத்திலும் தேசிய நூலக காப்பகத்திலும் தமிழ் மொழியிலான நூல்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் பல நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றபோதும், துரதிஷ்டவசமாக அவை தேசிய நூலக வெளியீட்டுப் பிரிவுக்குக் கிடைப்பதில்லை.

இவ்வாறு இலங்கை தேசிய நூலகவெளியீட்டுப்பிரிவுத்தலைவர் அரவிந்த தெரிவித்தார்.

தேசிய நூலக வெளியீட்டுப் பிரிவும், யாழ். மாநகர சபையும் இணைந்து நடத்திய யாழ்ப்பாணத்திலுள்ள இலக்கிய எழுத்தாளர்கள், படைப்பாளிகளுக்கான செயலமர்வு யாழ். மாநகர சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் இருந்து வருடா வருடம் வெளிவந்து கொண்டிருக்கும் இலக்கியம் மற்றும் பல்துறைசார்நூல்களின்வெளியீட்டுக்கு 50 ஆயிரம் ரூபாவில் இருந்து 60 ஆயிரம் ரூபா வரை உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இந்த உதவித் தொகையை வட மாகாண எழுத்தாளர்கள் இதுவரை பெற்றுப் பயனடைந்தனரா என்று தெரியவில்லை. ஆங்கில, சிங்கள மொழியில் வெளிவரும் நூல்களுக்கு இந்தப் பண உதவி கிடைத்துவருகின்றது. ஆனால் தமிழ் மொழி எழுத்தாளர்கள் இந்தப் பணத்தைப் பெற்றதாகத் தெரியவில்லை.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு படைப்பாளிகளிடமும் இருந்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை வருடா வருடம் கொள்வனவு செய்கின்றோம். தமிழ் மொழியிலான நூல்களைக் கொள்வனவு செய்யமுடியாமல் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் தேசிய நூலக வெளியீட்டுப் பிரிவுபற்றிப் போதியளவு அறிந்திருக்காமையும், மற்றும் தரமான நூல்களுக்குரிய ஐ.எஸ்.பி.என்., ஐ.எஸ்.எஸ்.என்., ஐ.எஸ்.எம்.என். முதலான இலக்கங்களைப் பெற்றிருக்காதமையுமாகும். நூல்கள் கொள்வனவு செய்யும் போதும், சாகித்திய மண்டலப் பரிசுக்கு பரிந்துரை செய்யப்படும்போதும் இந்த இலக்கங்களைப் பெற்றிருப்பது கட்டாயமானது.

சிறுவர் நூல்களாயின் 16 பக்கத்துக்கு மேற்பட்டதாகவும், 4 வர்ணங்களைக் கொண்டதாகவும், கையால் வரைந்த படங்களையும் கொண்டிருக்க வேண்டும். சிறுகதையும், பாட்டுக்களும் பதினாறு பக்கங்களுக்கு மேல் இருக்கவேண்டும். இலக்கிய நூல்கள், துறைசார் நூல்களாயின் குறைந்தது 48 பக்கங்களாவது இருக்க வேண்டும். இத்தகைய நூல்களுக்கே பண உதவி வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பல நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றபோதும், அவை எவையும் தேசிய நூலக வெளியீட்டுப் பிரிவுக்குக் கிடைப்பதில்லை. நாம் யாழ்ப்பாணத்துக்கு வந்து புத்தகக் கடைகளில் புத்தங்களைக் கொள்வனவு செய்ய முற்பட்டபோதும் அது கைகூடவில்லை. காரணம் எமது பணிகள் பற்றிப் புத்தகக் கடைக்காரர்களும் அறிந்திருக்கவில்லை. நிறுவன ஒழுங்குமுறைகளுக்குஏற்பகாசோலை வழங்கிப் புத்தகங்களைக் கொள்வனவு செய்யமுடியாமல் போய்விட்டது.

யாழ். எழுத்தாளர்கள் நூல்களை வெளியிடும்போது, இலங்கை தேசிய நூலக வெளியீட்டுப் பிரிவுக்கு 5 பிரதிகளை அனுப்பிப் பண உதவியைப் பெற்றுக்கொள்வதோடு, ஐ.எஸ்.பி.என் இலக்கத்தையும் பெற வேண்டும். இந்த இலக்கம் இருந்தால் தான் நாம் நூல்களைக் கொள்வனவு செய்ய முடியும். இங்குள்ள எழுத்தாளர்களும், வெளியீட்டாளர்களும் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உங்களுக்குள் ஓர் அமைப்பை உருவாக்குவது மிக அவசியம் -என்றார். (ற-10)

# தரிசு நிலங்களை தோப்பாக்குவதற்கு முயல வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் அறிவுரை



யாழ்ப்பாணம், டிசெ.30

போரால் தமது கிராமங்களை விட்டு வெளியேறிய தென்மராட்சி மக்கள் மீளக்குடியமரா விட்டாலும் அவர்கள் தமது தரிசு நிலங்களைத் தோப்புகளாக மாற்ற வேண்டும். எறிகணைகள் வருமானம் தரக்கூடிய தென்னைகளை சிரச்சேதம் செய்தது மட்டுமன்றி அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தை நம்பியிருந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களை ஏதிலிகளாகவும் மாற்றின.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண தென்னை அபிவிருத்திச் சபை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் தென்னைப் பயிர்ச் செய்கைக்கான மானியக் கொடுப்பனவுகளை கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கியது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போர் என்பது வெறுமனே துப்பாக்கிச் சூடும் செல் தாக்குதலுமாக இருக்கவில்லை. பொருளாதார ரீதியாக நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டோம். பல தென்னை மரத் தோட்டங்களும், வீடுகளில் காணப்பட்ட தென்னை மரங்களும் அடியோடு அழிக்கப்பட்டன.

பாதிப்புக்களுக்கு ஆளாகிய மக்களுக்கு உதவுவதற்காகவே தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை மானிய உதவிகளையும், தென்னை மரக்கன்றுகளையும், அவற்றுக்கான உர வகைகள், மருந்துகள், விவசாய அறிவுறுத்தல்கள் ஆகிய அனைத்து உதவிகளையும் வழங்குகின்றது. மீண்டும் தென்னை மரச் சோலைகளை உருவாக்கி வருவாயைப் பெருக்குவதற்கு முயலுகின்றது. முடியுமான வரை தென்னைகளை மீள நட முன்வர வேண்டும்.

காணியுள்ள ஒவ்வொரு வீட்டிலும் உருவாக்கப்படுகின்ற குறைந்த பட்சம் ஐம்பது தென்னை மரங்கள் முறையாக பராமரிக்கப்படின் 5 வருட காலப்பகுதியில் பயன் தருவதற்குத் தென்னைகள் தயாராகிவிடும்.

போர் முடிவுற்று 7 வருடங்கள் முடிவடைந்துவிட்டன. பலரின் காணிகள் விடுவிக்கப்பட்டு 5 அல்லது 6 ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும் அவை இது வரை எந்தவித பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளாது தரிசு நிலங்களாக காணப்படுவது வேதனைக்குரியது.

நீண்டகால இடப்பெயர்வு அவர்களைத் தூர இடங்களில் குடியமரச் செய்துவிட்டதால் அவர்கள் தமது பாரம்பரிய காணிகளில் வந்து குடியிருக்கவோ அல்லது பயிர்ச் செய்கைகளில் ஈடுபடவோ பின்னிற்கின்றார்கள். பலரின் முதுமையும் அவர்களைப் பின்நிற்க வைக்கின்றது. காணிகளை விட்டுச் சென்றவர்கள் கிராமங்களுக்கு வந்து பயனுள்ள, அமைதி வாழ்க்கையை வாழுங்கள் என்று நாங்கள் அவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். அதற்கு தென்னை அபிவிருத்திச் சபையும் அந்தந்தப் பகுதி பிரதேச செயலர்கள், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோரும் வேண்டிய உதவிகளை மக்களுக்கு வழங்க வேண்டும். எம்மக்களின் பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்படல் வேண்டும்- என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு யாழ். மாவட்டச் செயலாளர் வேதநாயகன் உரையாற்றுகையில்,

"தற்போது பல குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதும் தென்னைப் பயிர்ச் செய்கை பெருமெடுப்பில் நடைபெறவில்லை. தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தென்னை மீள்நடுகைக்கு இப்போது பல கவர்ச்சிகரமான மானியத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. தென்னைப்பயிர்ச்செய்கையை அதற்குரிய சரியான முறைகளில் செய்தால் அதிகளவான இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்"- என்றார்.

தென்னைப் பயிர்செய்கையில் ஈடுபட்டுவரும் 180 பேருக்கு 35 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. தென்னைப் பயிர்ச்செய்கை அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட பயிற்சியில் கலந்து கொண்ட 30 பேருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் உயர் தர தென்னம் பிள்ளைகளும் வழங்கப்பட்டன. (ற-21,ரி)

# அனுமதியின்றி எடுத்துச் சென்ற பனை மரங்கள் சிக்கின

யாழ்ப்பாணம், டிசெ.30

கிளிநொச்சிபளையில் இருந்து அனுமதிப்பத்திரம் இன்றி எடுத்துச்செல்லப்பட்ட 47 பனை மரத் துண்டங்கள் கைப்பற்றப்பட்டன என்று பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டாரா தெரிவித்தார்.

பளை நகரை நோக்கி பனை மரத் துண்டங்களை எடுத்து வந்த உழவு இயந்திரத்தை பொலிஸார் மறித்தபோது உழவு இயந்திரத்தை நிறுத்தாது சாரதி சென்றுள்ளார். பொலிஸார் துரத்திச் சென்றதை அடுத்து சாரதி உழவு இயந்திரப் பெட்டியைக் கழற்றிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். உழவு இயந்திரப் பெட்டியையும் மரங்களையும் பொலிஸார் பளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

மரக்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார தெரிவித்தார். (ற-6)

# அறிவூட்டல் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ, 30,

கிளிநொச்சி, பளை கமநல சேவை அபிவிருத்தித் திணைக்களத்தால் உணவு உற்பத்தி தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் பெண்கள் விவசாய அமைப்பின் தலைவர்களுக்கான அறிவூட்டல் பயிற்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டது என்று பளை கமநல அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பெண்கள் விவசாய அமைப்புக்களின் தலைவர்களுக்கு வீட்டுத்தோட்டம், விவசாயம், போசாக்கு உணவு தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டதுடன் அவர்களின் அமைப்புக்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஈ.தயாரூபன், குடும்பநல உத்தியோகத்தர், பளை மற்றும் தர்மக்கேணி விவசாயப் போதனாசிரியர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-6)

# 70 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

> நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்குத் தோற்றி தகைமை பெற்றவர்களுக்கே நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், டிசெ.30

வடக்கு மாகாணத்தில் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் மனைப் பொருளியல் பாடத்துக்கும், சிங்களமொழி மூலப்பாடசாலைகளில் 13 வகையான பாடங்களுக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள் என கல்வி அமைச்சின் செயலர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜனவரிமாதம் 2 ஆம் திகதி காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர், செம்மணி வீதியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நியமனம் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

வெற்றிடமாகவுள்ள பாடநெறிகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்காகக் கடந்த 15ஆம் திகதி [illegible] கல்வி அமைச்சில் நடைபெற்ற நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்குத் தோற்றி தகைமை பெற்றவர்களுக்கே நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளில் பெண்கள் இள வர்ண சேலையுடனும், ஆண்கள் [illegible] வர்ண நீள் காற் சட்டை மற்றும் வெள்ளை நிற மேற்சட்டையும் அணிந்து வரவேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட 70 பட்டதாரிகளுக்குப் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அழைப் புக் கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன- என்றார். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலைகளை மூடுமாறு வலியுறுத்தி மக்கள் ஆர்ப்பாட்டம்



செங்கலடி, டிச.30

மட்டக்களப்பு - மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேசத்தில் மதுபான சாலைகளை அகற்றுமாறு கோரி நேற்றுக்காலை ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச பொதுமக்கள் மற்றும் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகிய அமைப்புகள் இணைந்து மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

பிரதேசத்திலுள்ள மதுபானசாலைகளைஅகற்றவேண்டும், புதிய மதுபான சாலைகள் திறப்பதற்கு அனுமதிக்கக் கூடாது மற்றும் வெளிமாவட்டங்களில் அனுமதிபெற்று மண்முனைப் பற்று பிரசேதத்தில் மதுபானசாலைகளைத் திறப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் இது தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதற்காக பிரதேச செயலாளரிடம் கைளிக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், கிழக்கு மாகாண சபை பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான ஞா.கிருஸ்ணபிள்ளை, எம்.நடராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர். (வ-ய-47,46)

## நீதிமன்றுக்குள் அலைபேசியை ஒலிக்கவிட்டவருக்குத் தண்டனை

பதுளை, டிச.30

நீதிமன்றத்துக்குள் கையடக்க அலைபேசியை ஒலிக்கவிட்ட ஒருவரை அன்றையதினம் நீதிமன்றக் கடமைகள் முடியும்வரை தடுப்புக் காவலில் வைக்கும்படி பதுளை நீதிபதி ருவந்திகா மாரசிங்க உத்தரவிட்டார். இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

பதுளை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. நீதிமன்றில் வழக்கு ஒன்றுக்காக வந்திருந்த மேற்படி நபரின் அலைபேசி எதிர்பாராத வகையில் ஒலிக்கத் தொடங்கியது. இதையடுத்து, நீதிமன்ற சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸார் உடனடியாக அவரைக் கைதுசெய்து, நீதிபதி முன்னிலையில் முற்படுத்தினர்.

அதையடுத்து நீதிபதி, அந்த நபரை எச்சரிக்கை செய்து நீதிமன்றக் கடமைகள் முடியும்வரை தடுப்புக் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (வ-ய-41)

## கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சீருடை

மூதூர், டிச.30

கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை 9 மணியளவில் திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் விழா மண்டபத்தில் நடைபெற்றது.

மாகாண கல்வி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியகமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுபாணி, மாகாணசபையின் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களான ஜெ.ஜெனார்த்தனன் கு. நாகேஸ்வரன் ஆகியோருடைய 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபா நிதிமூலம் 318 ஆசிரியர்களுக்கு சீருடைகள் வழங்கி வைக்கப்பட்டன. (வ-ய-40)

## தலைவர்களை அச்சுறுத்தல்; சந்தேகநபரின் மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 30

முகநூலில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞனின் விளக்கமறியலை கொழும்பு நீதிவான் மன்றம் நேற்று நீடித்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது குறித்த முகநூல் பதிவுகள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் மன்றில் தெரிவித்தனர்.

இந்தப் பதிவு முகநூலில் பதிவேற்றப்பட்டது கட்டாரில் இருந்து எனவும், மேலும் சில நாடுகளில் இருந்தும் சில நபர்கள் சம்பந்தப்பட்ட பதிவினைமுகநூலில்இணைத்துள்ளதாகவும் மன்றில் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து விடயங்களை ஆராய்ந்த நீதிவான் சந்தேகநபரை நாளை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (வ)

## கடலில் மூழ்கி குடும்பத் தலைவர் உயிரிழப்பு

மூதூர், டிச.30

திருகோணமலை, சம்பூரில் கடற்பரப்பில் நீராடிய குடும்பத்தலைவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

மீன்கொண்டு வருவதாக மனைவியிடம் கூறிவிட்டுச் சென்ற அவர் அளவுக்கதிகமான மது போதையில் கடலில் 200 மீற்றருக்கும் அதிகமான தூரம் நீந்திச் சென்றுள்ளார்.

இதன் போதே நீரில் மூழ்கி அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பூர்ரைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை வரதகுணராசா (வயது-50) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மூதூர் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஏ.ஜே.நூறுல்லா குறித்த நபர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக அறிக்கை வழங்கி சடலத்தை உறவினர் களிடம் ஒப்படைத்தார். (வ-ய-40)

## பஸ் உரிமையாளருக்கு 4,000 ரூபா தண்டம்

பதுளை, டிச.30

அனுமதிப்பத்திரமில்லாத ஒருவரை தனியார் பேருந்து நடத்துநர் சேவையில் அமர்த்திய பேருந்து உரிமையாளர் ஒருவருக்கு நான்காயிரம் ரூபா தண்டம் விதித்தார் பதுளை மேலதிக நீதிவான் சோமசுந்தரம் சத்தியமூர்த்தி.

ஊவா மாகாணத்தில் தனியார் பேருந்து நடத்துநருக்கான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமாக்கப்பட்டள்ளது. (வ-ய-41)

## மரண அறிவித்தல்



திருமதி **நெல்லியம்மா கந்தையா**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நெல்லியம்மா கந்தையா நேற்று (29.12.2016) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை, சிவபாக்கியம், லட்சுமி, பொன்னுத்துரை, குமரையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, சின்னத்துரை, நாகம்மா மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் இந்திராணி, சுந்தரலிங்கம், சந்திராணி, காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் யோகேஸ்வரி, விஜயகுமார், ஜெயக்குமாரி, சண்முகநாதன் (வேலணை பிரதேசசபை) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், இரத்தினம் மற்றும் கமலாதேவி, காலஞ்சென்ற பூபாலராசா மற்றும் கேதாரகௌரி (பிரான்ஸ்), கணேசன், சாரதாதேவி, ரவிச்சந்திரன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2016) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

077 163 6742

(தி.275:17) (13.18)

## இறக்குமதியாகும் பால்மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது

### பாவனையாளர் அதிகார சபை அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளின் விலைகளை அதிகரிக்க அனுமதியளிக்கப்படமாட்டாது என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவித்தது.

"முக்கிய பால்மா நிறுவனங்கள் சில இறக்குமதி செய்யும் பால்மாக்களுக்கான விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

ஒரு கிலோ கிராம் பால்மாவுக்கு 100 தொடக்கம் 117 ரூபாவும், 400 கிராம் பால்மாவுக்கு 40 தொடக்கம் 46 ரூபாவும் விலையை அதிகரிக்குமாறு குறித்தநிறுவனங்கள்கோரியுள்ளன.

எது எவ்வாறு இருப்பினும், குறித்த விலை அதிகரிப்பு அவசியம் இல்லை. இறக்குமதி செய்யப்படும் பால் மாக்களுக்கான விலையை அதிகரிக்க ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை" என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் கசித திலகரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால்மாவுக்கு 810 ரூபாவும் 400 கிராம் பால் மாவுக்கு 325 ரூபாவும் உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலையாக விதிக்கப்பட்டுள்து. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கொழும்பு பங்குப் பரிமாற்றம் என்பது தற்போது சம்பளங்களை மீளளிப்புச் செய்யமுடியாத, வழங்கமுடியாத நிலைக்கு வீழ்ச்சிகண்டுள்ளது"

# கொழும்பு பங்குப் பரிமாற்றல் செயற்பாடுகள் வீழ்ச்சி

## நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கருத்துரை

புற நிலையான அழுத்தங்கள் காரணமாக கொழும்பு பங்கு பரிமாற்றல் செயற்பாடுகள் வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கருத்துரைத்துள்ளதுடன் அரசை சாடியுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்ததாவது,

செலான் வங்கியின் பங்குகளில் 7.5 வீதமானவை கடந்தகாலத்தில் இலங்கை வங்கிக்கு உரித்தானதாக இருந்தது. ஆனால் இலங்கை வங்கியின் ஊடாக இவை 1.1 பில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை மூன்று நாள்களுக்குள் கொடுக்கல் வாங்கல்கள் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய நிலையில் பிரதமர் தனக்குரிதானதல்லாத அதிகாரத்தை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளார். பிரதமருக்கு அவ்வாறான அதிகாரமொன்று உள்ளதா..? பங்குச் சந்தையின் கொடுக்கல் வாங்கல் செயன்முறைகளை பிரதமர் எவ்வாறு நிறுத்தி வைக்க முடியும்? இதனை எற்றுக்கொள்ள முடியாது" என்றார்.

மேலும் உலகிலுள்ள ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் அரசியல்வாதியொருவர் பங்குச் சந்தை செயற்பாடுகளில் தலையீடு செய்து கொடுக்கல் வாங்கலை இதுவரை நிறுத்தவில்லை.

இங்கு ஜப்பான் பிரஜை ஒருவரே பங்குகளைக் கொள்வனவு செய்துள்ளார். என்ன காரணங்களுக்காக செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. இது தொடர்பில் அரசு பதிலளிக்க வேண்டும்.

இலங்கைக்கு மாத்திரமல்ல பன்னாடுகளுக்கும் பதிலளிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.




# கொழும்பு பங்குச்சந்தையின் எஸ் அண்ட் பி. எஸ்.எல் 20 சுட்டியின் மாற்றங்கள் அறிமுகம் செய்யப்பட்டன

கொழும்பு பங்குச்சந்தையின் பிரதான சுட்டிகளில் ஒன்றாகக் காணப்படும் எஸ் அண்ட் பி எஸ்.எல் (S&P SL20) சுட்டியில் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் கடந்த திங்கட்கிழமை முதல் அறிமுகம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் டீஜே லங்கா பங்குகள் மேற்படி சுட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், செலிங்கோ இன்சூரன்ஸ் பங்குகள் சுட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மொத்த சந்தை மூலதனவாக்கம், திரள்வுப் பெறுமதி, நிதி வெளிப்படுத்தல் மட்டம் என்பனவற்றின் அடிப்படையிலே முன்னிலையில் காணப்படும் சிறந்த 20 நிறுவனங்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களாக, அக்சஸ் என்ஜினியரிங் பிஎல்சி, எயிட்கன் ஸ்பென்ஸ் பிஎல்சி, ஆசிரி கொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி, கார்கில்ஸ் (சிலோன்) பிஎல்சி, சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் பிஎல்சி, சிலோன் ருபாக்கோ கம்பனி, செவ்றொன் லுப்ரிகன்ட்ஸ் லங்கா பிஎல்சி, கொமர்ஷல் வங்கி, டி.எவ்.சி.சி வங்கி, டயலொக் அக்ஸியாடா பி.எல்.சி, ஹற்டன் நஷ‑னல் வங்கி, ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி, மெல்ஸ்டாகோர்ப் லிமிட்டெட், தேசிய அபிவிருத்தி வங்கி, நெஸ்லே லங்கா, பீபிள்ஸ் லீசிங் கம்பனி அன்ட் பினான்ஸ் பிஎல்சி, சம்பத் வங்கி மற்றும் டீஜே லங்கா பிஎல்சி என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.






# முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சட்ட நடவடிக்கை வேண்டும்

## அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவிப்பு

மத்திய வங்கியின் முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முறையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது குறித்து கருத்துரைத்துள்ள அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க, "மத்திய வங்கியின் நிதிக் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளில் இடம்பெற்ற ஊழல் நடவடிக்கையில் அதிக நிதி கொள்ளையிடப்பட்டுள்ளது. குறிப்பாக 13 பில்லியன் ரூபா தொகை மதிப்பீடு கையாடப்பட்டுள்ளதாக வருமானவரித் திணைக்கள தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன. முன்னாள் மத்திய வங்கி ஆளுநரின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட சூழ்ச்சி நடவடிக்கையாகவே இதை நாம் கருதுகின்றோம். இந்த ஊழல் செயற்பாடுகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். நீதித்துறை நியாயத்தை வழங்காவிடின் ஜனாதிபதி இது குறித்து நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செயற்பட முன்வருவார்"- என்றார்.

# உலகின் மிக நுண்ணிய பனிமனிதன்



உலகின் மிக நுண்ணிய பனிமனிதனை கனடாவில் உள்ள ஒன்ராறியோவின் வெஸ்ரென் பல்கலைக்கழக விஞ்ஞானியொருவர் உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையிலே வெஸ்ரென் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ரொட் சிம்சன் நம்ப முடியாத அளவு சிறிய சிலிக்கா கோளங்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி உருவாக்கியுள்ள மேற்படி பனிமனிதனை ஒரு மின்னணு நுண்னோக்கியால் தான் பார்க்க முடிகிறது. இந்த பனி மனித உருவமானது சிலிகோன் செதிலிற்குள் வைக்கப்பட்டுள்ள ஆய்வு கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் மிகச்சிறிய பனிமனிதன் என்ற பெருமையுடையதாக தற்போது உருவாக்கப்பட்டுள்ள இந்த பனிமனிதனின் மூக்கும் கைகளும் பிளாட்டினத்தால் செய்யப்பட்டுள்ளதாகவும் 3 மைக்ரோன்கள் உயரமுடையதாக காணப்படுவதால் நடப்பாண்டின் மிகச்சிறிய உருவமாக இது விளங்குவதாகவும் சொல்லப்படுகிறது.

இது குறித்து கருத்துரைத்துள்ள ரொட் சிம்சன்,

"இந்த நுண்ணிய பனிமனிதனை கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்னர் உருவாக்க விரும்பினேன்.

இருந்தும் தற்போது தான் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மனித தலை முடி ஒன்றின் விட்டத்தை விட நுண்ணியதாக இந்த பனி மனிதனின் உயரம் காணப்படுகிறது.

குறிப்பாக மனித தலைமுடியின் விட்டம் 50 மைக்ரோன்கள். ஆனால் நான் உருவாக்கியுள்ள பனி மனிதனின் உயரம் என்பது 3 மைக்ரோன்கள் தான்." என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தம்

டாக்கா, டிசெ. 30
பங்களாதேஷின், அஸ்சூலியா மாவட்டத்திலுள்ள பிரபல நிறுவனமொன்றில் சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் செய்த ஆயிரத்து 500 தொழிலாளர்கள் குறித்த நிறுவனத்தால் வேலையில் இருந்து நிரந்தரமாக நிறுத்தப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் ராக்கா வரை ஊதியம் பெறும் ஊழியர்கள் ஒன்றுதிரண்டு தமக்கு 16 ஆயிரம் ராக்கா வரை வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்து குறித்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். ஆர்ப்பாட்டத்தின் விளைவாக அவர்கள் அனைவரும் பணியில் இருந்து நீக்கப்பட்டனர்.

குறித்த விடயம் தொடர்பான செய்தியை வெளியிட்ட நஸ்முள் குடா என்ற செய்தியாளரையும் பொலிஸார் கைதுசெய்தனர். நிறுவனத்தின் ரகசியக் குழுக் கூட்டத்தில் பேசிய விடயங்களை தவறாகப் பிரசுரித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே நஸ்முள் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் தரப்புத் தெரிவித்தது. (ம-ள)

## ரஷ்யத் தூதரகம் மீது சிரியாவில் தாக்குதல்



டமஸ்கஸ், டிசெ. 30
சிரியத் தலைநகர் டமஸ்கஸில் அமைந்துள்ள ரஷ்யத் தூதரகம் இரு தடவைகள் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது என ரஷ்யாவின் அயலுறவுத்துறை அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

ஆயுததாரிகள் இந்தத் தாக்குதலை நடத்தினார்கள். சிரியாவில் சமாதானத்தை எற்படுத்தச்செய்யும் முயற்சிகளுக்கு இடையூறாக இவை அமைந்துள்ளன. ஷெல்ஒன்று அயலுறவுத்தறை வளாகத்தில் வீழ்ந்தது. இன்னொன்று ராஜதந்திரிகள் அலுவலகத்துக்கு அண்மையில் விழுந்தது என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

ஆயுதக் குழுக்களின் ஒழிப்புக்கு சிரியாவுக்கு ரஷ்யா பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து வருகிறது.

அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின்பிடியிலிருந்தஅலெப்போ நகர்ரஷ்யாவின்உதவியுடன்சிரியாவால் அண்மையில் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-ள)

## மூன்று மாதங்களில் முடிவு பெறும் மோசூல் போர்
### ஈராக் அறிவிப்பு

பக்தாத், டிசெ. 30
ஈராக்கின் மோசூல் நகரை மீட்கும் போர் இன்னும் மூன்று மாதங்களில் முடிவுக்கு வரும் என்று ஈராக் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மொசூல் உள்ளது. அதனை மீட்கும் போரை அமெரிக்கா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் உதவியுடன் ஈராக் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் முன்னெடுத்து வருகிறது. மோசூலில் உள்ள முக்கிய கிராமங்கள் உள்ளிட்ட 25 கிராமங்களை ஈராக் மீட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மோசூல் நகர மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்ற காரணத்தால் நகரை மீட்பதில் தாமதம் ஏற்படுகிறது என்று அமெரிக்கா அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தது. இந்த நிலையில் இன்னும் மூன்று மாதங்களில் மோசூல் நகரம் முழுவதுமாக மீட்கப்படும் என்று ஈராக் தெரிவித்தது. (ம-ள)

## இரண்டாவது கறுப்புப் பெட்டி கருங்கடலில் கண்டெடுப்பு

மொஸ்கோ, டிசெ. 30
கருங்கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளான ரஷ்ய இராணுவ விமானத்தின் இரண்டாவது கறுப்புப் பெட்டி நேற்று மீட்கப்பட்டது.

சிரியாவில் நடைபெறும் உள்நாட்டுப் போர் மற்றும் ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான போர் ஆகியவற்றுக்காக அங்கு முகாமிட்டிருக்கும் ரஷ்யப் படையினருக்குத் தேவையான பொருள்கள் மற்றும் சிப்பாய்களுடன் புறப்பட்டுச் சென்ற விமானம் கிறிஸ்மஸ் தினத்தன்று கருங்கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

விமானத்தில் பயணித்த இராணுவ இசைக்குழுவைச் சேர்ந்த 64 பேர் உட்பட 92 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உடல்களையும் விமானத்தின் பாகங்களையும் தேடும் பணியில் ரஷ்யா தீவிரம் காட்டியது.

விமானத்தின் முதுலாவது கறுப்புப்பெட்டி கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டது. இரண்டாவது கறுப்புப் பெட்டி நேற்று மீட்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

குறித்த விமானம் எவ்வாறு விபத்துக்குள்ளானது என்பது தொடர்பில் மர்மம் நீடித்துவரும் நிலையில், கறுப்புப் பெட்டி கிடைத்தமை திருப்பு முனையாக அமையும் என்று கருதப்படுகிறது. (ம-ள)





சீனாவின் சியாங்யாங் பகுதியில் விசித்திரமான தோற்றத்துடன் உள்ள
பாறைகள் 2.8 மீற்றர் நீளமும், 2 மீற்றர் அகலமும், 1.6 மீற்றர் உயரமு
முரணான விதத்தில், ஒரே அளவு தூண்கள், இடை வெளி...டன் ...
காணப்படுகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன

## அ.தி.மு.க. பொ
## ஏகமனதாகத் தெ





சென்னை, டிசெ. 30
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக ஜெயலலிதாவின் நண்பியான சசிகலா தெரிவு செய்யப்பட்டார்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சராகவும் அ.தி.மு. கழகத்தின் பொதுச்செயலாளராகவும் இருந்த ஜெயலலிதா உயிரிழந்ததை அடுத்து, முதலமைச்சராக ஓ.பன்னீர்ச்செல்வம் பொறுப்பேற்றுள்ளார். ஆனால் குறித்த கட்சியின் பொதுச் செயலாளர் பதவி வெற்றிடமாகவே உள்ளது. பொதுச் செயலாளர் பொறுப்பை சசிகலாவே ஏற்க வேண்டும் என்று முதலமைச்சர் பன்னீர்ச்செல்வம்உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் சசிகலாவிடம் வலியுறுத்தி வந்தனர். அ.தி.மு. கழகத்தின் வருடாந்தப் பொதுக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. பொதுவான எதிர்பார்ப்பின்படி சசிகலா பொதுச் செயலாளராக ஏக மனதாகத் தெரிவானார்.

பொதுக்குழுவின் தீர்மானத்தை சசிகலாவிடம் தெரிவிப்பதற்காக பன்னீர்ச்செல்வ
முக்கிய அமைச்சர்கள் சிலர் போ
னுக்கு விரைந்தனர். தீர்மானத்
விடம் வழங்கி பதவியை ஏற்கும்படி
விடுத்தார் பன்னீர்ச்செல்வம். தீர்ப

## ஜெயலலிதாவின் உயிரிழப்பில்

சென்னை, டிசெ. 30
ஜெயலலிதாவின் சாவில் சந்தேகம் உள்ளது என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்றுத் தெரிவித்தது.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா டிசெம்பர் 5 ஆம் திகதி உயிரிழந்தார். ஜெயலலிதா சாவு குறித்து விசாரணை நடத்தக் கோரி ஜோன்ஸ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் வைத்திய
நாதன், பார்த்திபன் ஆகியோர் முன்
நேற்று விசாரணைக்கு வந்தது. அப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



...டன் உள்ள பாறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. குறித்த ...ரி உயரமும் உடையனவாகும். இவை இயற்கைக்கு ...டன் ...க்கிர வாசிகளின் பறக்கும் தட்டுப் போன்று ...வளியிட்டன. (ம-எ)

# கச்சதீவை மீட்பதற்கு வேண்டும் நடவடிக்கை

## பன்னீர்ச்செல்வம் வலியுறுத்தல்

சென்னை, டிசெ. 30

இலங்கையுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தைக் கைவிட்டு கச்சதீவை மீட்பதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தினார்.

கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் தென்மண்டல பேரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. பன்னீர்ச் செல்வத்தின் உரையை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் வாசித்தார். குறித்த உரையில்,

ஜெயலலிதாவின் மறைவுக்கு உங்களில் பலர் வருத்தமும், ஆறுதலும் தெரிவித்து இருந்தனர். அதற்கு நன்றி. பாக்கு நீரிணைப் பகுதியில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 51 தமிழக மீனவர்களையும் 114 படகுகள் மற்றும் உபகரணங்களையும் விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கச்சத்தீவை மீட்க 1974 ஆம் ஆண்டு இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை கைவிட்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. (ம-எ)

# அத்துமீறலை நிறுத்தினால் இஸ்ரேலுடன் பேசலாம்

## பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸ் தெரிவித்தார்

## அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கும் பாராட்டு



ஜெருசலேம், டிசெ. 30

ஐக்கிய நாடுகள் சபையும் முக்கிய நாடுகள் பலவும் பலஸ்தீனத்துக்கு ஆதரவுக்கரம் நீட்டியுள்ள நிலையில் கிழக்கு ஜெருசலேமில் இஸ்ரேலால் அத்துமீறி கட்டப்பட்டுவரும் குடியிருப்புக்களை நிறுத்தினால் அந்த நாட்டுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயார் என்று பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸ் தெரிவித்தார்.

1967 ஆம் ஆண்டு நடந்த நீண்ட போரின் இறுதியில் பலஸ்தீன நாட்டில் இருந்து கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் கைப்பற்றியது. அன்று முதல் குறித்த பகுதியை இஸ்ரேல் சொந்தம் கொண்டாடுகின்ற போதிலும், அந்தப் பகுதியை இஸ்ரேலுக்குச் சொந்தமானதாகப் பன்னாட்டு சமூகம் அங்கீகரிக்கவில்லை.

சமீபகாலமாக, பலஸ்தீன நாட்டுக்கு உட்பட்ட பகுதியில், கிழக்கு ஜெருசலேமிற்கு நெருக்கமாக, இஸ்ரேல் குடியிருப்புக்களை அமைத்து வருகிறது.

இதனால் குறித்த குடியிருப்புக்கள் பலஸ்தீனத்தின் சுய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று உலக நாடுகளின் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

பன்னாட்டு எல்லைக்கோடு சட்டத்தை மீறி இஸ்ரேல் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு நியூசிலாந்து, மலேசியா, வெனிசுலா, செனெகல் ஆகிய நாடுகளின் சார்பில் ஐ.நா. பாதுகாப்பு சபையில் தீர்மானம் முன் வைக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தின்மீது ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளும் வாக்களிக்க இருந்த நிலையில், தனது வெட்டுரிமை (வீட்டோ) அதிகாரத்தை அமெரிக்கா பயன்படுத்தி மேற்கண்ட தீர்மானத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என அமெரிக்காவின் வருங்கால அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா தலைமையிலான அமெரிக்க அரசு அவரது ஆலோசனையை நிராகரித்தது.

இஸ்ரேலுக்கு எதிரான இந்த தீர்மானத்தை ஆதரித்தோ, எதிர்த்தோ வாக்களிக்காமல் அமெரிக்கா நடுநிலை வகித்தது. இதனால் 15 நாடுகளில் 14 நாடுகளின் அமோக ஆதரவுடன் இஸ்ரேலுக்கு எதிரான இந்த தீர்மானம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியை பலஸ்தீன அரசு கொண்டாடிவரும் அதேவேளையில், தன்னைக் கைவிட்ட அமெரிக்காவுக்கு இஸ்ரேல் அரசு கண்டனம் தெரிவித்தது. தவிர தீர்மானத்துக்கு கட்டுப்படப் போவதில்லை எனவும் இஸ்ரேல் தெரிவித்தது.

1979 ஆம் ஆண்டுக்கு பிறகு இப்போதுதான், குடியிருப்பு கொள்கையில் இஸ்ரேலுக்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற அமெரிக்கா வழிவிட்டுள்ளது. இஸ்ரேல் பலவந்தமாக அமைக்கும் குடியிருப்புக்களைக் கைவிட்டால் அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று பலஸ்தீன ஜனாதிபதி மொகமட் அப்பாஸ் தெரிவித்தார். (ம-எ)

# ...பொதுச் செயலாளராக ...தெரிவானார் சசிகலா









...னீர்ச்செல்வம் உள்பட ... சிலர் போயஸ் கார்ட ...தீர்மானத்தை சசிகலா ...ப ஏற்கும்படி அழைப்பு ...ல்வம். தீர்மானத்தின்

நகலைப் பெற்று முதலில் ஜெயலலிதாவின் உருவப்படத்துக்கு முன்னால் வைத்து சசிகலா ஆசி பெற்றார். அப்போது அவர் மிகையாகக் கண்கலங்கினார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சசிகலாவுடனான சந்திப்பை அடுத்து செய்தியாளர்களைச் சந்தித்த பன்னீர்ச்செல்வம், பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்க சசிகலா இணங்கியுள்ளார் எனத் தெரிவித்தார்.

முன்னதாக பொதுக் குழுக்கூட்டத்தில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை 'தேசிய விவசாயிகள் தினம்' என்று அறிவிக்கவும், நாடாளுமன்றத்தில் ஜெயலலிதாவின் வெண்கலச் சிலையை நிறுவ வேண்டும் எனவும், ஜெயலலிதாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் எனவும், மானுட சேவைக்கான பிலிப்பைன்ஸ் நாட்டின் ரமோன் மகசசே விருது மற்றும் உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்ட வேண்டும் எனவும் கோரிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் விடுக்கப்பட்டன.

எம்.ஜி.ஆர். நூற்றாண்டினை மக்கள் பணி ஆண்டாக அனுசரிக்க தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்தும், ஒவ்வோர் ஆண்டும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினத்தன்று அதிமுக தொண்டர்கள் ஒன்றுகூடி கழக ஒற்றுமைக்கு உறுதியேற்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ம-எ)

# ...பில் சந்தேகம்; சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்தது

...தக் கோரி ...னை உயர் ...டர்ந்திருந் ... வைத்திய ...யோர் முன் ...ந்தது. அப்போது நீதிபதி வைத்தியநாதன் ஜெயாவின் உயிரிழப்பில் சந்தேகம் உள்ளது என்று தெரிவித்தார்.

மத்திய அரசுக்கு கேள்வி

ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை உள்ளிட்ட அனைத்து விவரங்களும் மத்திய அரசுக்கு தெரியும். ஆனால் மத்திய அரசு வாயை திறக்காமல் மௌனம் காத்தது ஏன். நான் இந்த வழக்கை தொடர்ந்து விசாரிப்பதாக இருந்தால் விசாரணை வேறாக இருக்கும் என்றும், ஜெயலலிதாவின் உடலைத் ... செய்ய உத்தர... என்றும் நீதிபதி வைத்தியநாதன் தெரிவித்தார். ஜனவரி 9 ஆம் திகதிக்கு வழக்கு பிற்போடப்பட்டது. ஜெயலலிதாவின் சாவு குறித்து பதிலளிக்க பிரதமரின் செயலர், உள்துறை செயலர் ஆகியோர் பதில் வழங்க ... சென்னை மன்று ... (ம-எ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எல்லை தாண்டிய சிந்தனையே வேண்டும்

இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு அடிப்படையாக அமையக் கூடும் என எதிர்பார்க்கப்படும் புதிய அரசமைப்புத் தொடர்பான பணிகள் தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ள நிலையில், அந்த முயற்சியின் மீதான அவநம்பிக்கை தமிழர் தரப்பில் அதிகரித்து வருகின்றது. இதன் விளைவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதும் கணி சமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான குழுவின் பங்கேற்பில் இருந்து கூட்டமைப்பு உடனடியாக விலகவேண்டும் என்கிற கூச்சல்கள் கூட்டமைப்புக்குள் இருந்தே அதற்கெதிராகச் சதா கருத்துச் சொல்லிக்கொண்டிருக்கும் ஈபிஆர்எல்எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் கூட்டமைப்பு எதிர் அரசியல் வாதிகளால் எழுப்பப்படுகின்றன. அதேநேரத்தில் அரசு ஏமாற்றினால் போராட்டத்தில் குதிப்பதற்குத் தமிழ் மக்கள் தயாராக வேண்டும் என்கிற அறைகூவல்களும் கூட்டமைப்புத் தலைவர்கள் சிலரிடம் இருந்து எழுகின்றது.

இத்தகைய கூச்சல்களையும் முழக்கங்களையும் கேட்கும்போது தமிழ் அரசியல்வாதிகள் மீண்டும் மீண்டும் குண்டுச் சட்டிக்குள் குதிரையோடிக்கொண்டிருக்கின்றனர் என்றே தோன்றுகின்றது. இதேபோன்ற அரசியல் முயற்சிகளை தமிழினம் இதற்கு முன்னரும் எத்தனையோ தடவைகள் செய்துள்ளது. அவற்றால் கிடைத்த பயன் ஏதுமில்லை என்பதும் உறுதியானது.

கொழும்பு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த அமைதிப் பேச்சுக்கள் அனைத்திலும், அரசு மீது நம்பிக்கையீனம் ஏற்பட்டதும் பேச்சுக்களில் இருந்து வெளியேறுவதையே விடுதலைப் புலிகள் இயக்கம் தனது தெரிவாக வைத்திருந்தது. அந்தக் கால கட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுத ரீதியில் பலம் பொருந்தியதாக இருந்தமையால் அது சரியான முடிவாகவே கணிக் கப்பட்டது என்றாலும் இறுதியில் அத்தகைய முடிவுகளால் கண்ட பயன் எதுவுமேயில்லை என்றாகிவிட்டது.

புலிகளின் காலத்திற்கு முன்னரும் தமிழினம் இத்தகைய முயற்சிகளை செய்து பார்த்தே இருக்கிறது. அகிம்சைப் போராட்டங்களை நடத்தியிருக்கிறது. அரசமைப்பு உருவாக்கங்களையும் அதற் கான முயற்சிகளையும் புறக்கணித்துப் பங்கேற்காது இருந்திருக் கிறது. 13ஆவது திருத்தம் போன்ற தீர்வுகளைக் கூட நிராகரித்திருக்கிறது. இத்தகைய நடவடிக்கைகளால் எல்லாம் தமிழர்கள் வெற்றிகரமான தீர்வைப் பெற்றார்கள் என்று சொல்லிவிட முடி யாது.

இப்போது மீண்டும் அதேபோன்றதொரு நிலைக்குள்தான் தமிழ் இனம் மாட்டிக்கொண்டுள்ளது. ஒரு பக்கத்தில் அரசோடு ஒத்தோடி தீர்வைப் பெற்றுவிடமுடியுமா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கிறது. மறுபுறத்தில் இந்த முயற்சிகள் வெற்றியளிக்காது என்று ஆருடம்கூறி கூட்டமைப்பை விமர்சிக்கும் தரப்புகள், கூட்டமைப்பைத் தீர்வு முயற்சியை விட்டு வெளியேறவேண்டும் என்று அழுத்தம் கொடுக்கின்றன.

புதிய அரசமைப்புக்கு ஊடாகத் தமிழர்களுக்கு எதுவும் கிடைக்காது என்கின்றன கூட்டமைப்பு எதிர்த் தரப்புகள். புதிய அரசமைப்பில் கூட்டாட்சியும் (சமஷ்டி) இல்லை, பல்லின பல மத சுதந்திரம் உறுதிப்படுத்தப்படப் போவதுமில்லை என்று அவை ஆருடம் கூறுகின்றன. வடக்கு – கிழக்கு இணைப்பு நடக்கப்போவதில்லை என்றும் எதிர்வுகூறுகின்றன. இந்த விடயங்களைக் கூட்டமைப்பின் தலைமை குறிப்பாக, தீர்வு முயற்சியில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள இரா. சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் வலியு றுத்தவேயில்லை என்று நேரடியாகச் சாடுகின்றன.

இதனால் அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவிலிருந்து இந்த இருவரும் வெளியேறவேண்டும் என்றும் அவை வலியுறுத்துகின்றன. வெளியேறி அரசுடன் நேரடியாகப் பேச வேண்டும் என்று யோசனையும் முன்வைக்கின்றன. ஆனால் இந்த இரண்டுமே பயனற்றவை என்பதுதான் கடந்த காலப் படிப்பினை.

ஐக்கிய தேசியக் கட்சியுடனும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் என மாறி மாறி இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு தோல்வி கண்ட வரலாறுகளையே கொண்டிருக்கிறோம். இணக்க அரசியலுக்கும்கூட அதுவேதான் நிலமை. இருந்தாலும் மீண்டும் மீண்டும் அதையேதான் செய்கிறோம்; செய்யச் சொல்கிறோம்.

இந்தப் பாரம்பரிய, தோற்றுப்போன சிந்தனைகளுக்கு அப்பால் எல்லை தாண்டிச் (out of the box) சிந்திக்க வேண்டிய தருணம் இது. துரதிர்ஷ்டம் என்னவென்றால் கூட்டமைப்பை விமர்சிப்பவர்களுக்குக்கூட அந்தத் திறன் இல்லை என்பதுதான். அதனால் தான் அவர்கள் முரண்டு பிடித்தால் தீர்வு வந்துவிடும் என்று தாமே நம்பிக்கை கொள்கிறார்கள்.



# வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சவால்களைச் சந்திக்கும் நல்லாட்சி அரசு

சிங்கள மூலம் - சூரவி (மவ்பிம)
தமிழில் - வீ.எஸ்.ரீ

1994 ஆம் ஆண்டின் தோல்விக்குப் பின் னர், 2001 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலேயே ஐ.தே.கட்சியால் நாடாளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது, பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்ற போதிலும், ஜனாதிபதியாக சந்திரிகாவே பதவி வகிக்க நேர்ந்தது. 1978ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், 2001ஆம் ஆண்டிலேயே முதல் தடவையாக பிரதமர் ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், ஜனாதிபதி மற்றொரு கட்சியைச் சேர்ந்தவராகவும் இயங்க நேர்ந்தது.

1948ஆம் ஆண்டு முதல் ஐ.தே.கட்சியும், சுதந்திரக்கட்சியும் மாறி மாறி நாட்டை நிர்வகித்தபோதிலும், இவ்விரு கட்சிகள் மத்தியிலும் முடிவற்ற போட்டிகள் நிலவினவே தவிர, இரு தரப்புக்களும் இணைந்து நாட்டை நிர்வகிக்கும் வாய்ப்பு வாய்த்ததில்லை. ஆனால் 2001அம் ஆண்டில் ஏற்பட்ட அத்தகைய வாய்ப்பை நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற கருத்து அவ்வேளையில் முன்வைக்கப்பட்டது.

ஆயினும், குறுகிய காலத்திலேயே, பிரதமர் ரணிலுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்குமிடையில் பனிப்போர் ஆரம்பமாகியது. ரணில் அமெரிக்கா சென்றிருந்த தருணம் பார்த்து சந்திரிகா, ரணிலின் வசம் இருந்த மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களைத் தன்வசமாக்கிக் கொண்டதையடுத்தே, அந்தப் பனிப்போர் ஒரு முடிவுக்கு வந்தது.

குறுகிய காலத்திலேயே, பிரதமர் ரணிலுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்குமிடையில் பனிப்போர் ஆரம்பமாகியது. ரணில் அமெரிக்கா சென்றிருந்த தருணம் பார்த்து சந்திரிகா, ரணிலின் வசம் இருந்த மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களைத் தன்வசமாக்கிக் கொண்டதையடுத்தே, அந்தப் பனிப்போர் ஒரு முடிவுக்கு வந்தது.

இந்த அதிகாரப் போட்டி காரணமாக ரணிலின் தலைமையிலான அரசு கலைக்கப்பட்டு, 2004 அம்ஆண்டில் நாடு தீடீர்ப் பொதுத் தேர்தலொன்றைச் சந்திக்க நேர்ந்தது.

### பனிப்போர் ஆரம்பமா?

இன்று ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையே மீண்டும் முன்னையதைப் போன்றதொரு பனிப்பொர் ஆரம்பித்திருப்பதால், நாடு குழப்ப நிலையொன்றுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மகிந்தவுக்கு எதிரான வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில், ரணிலை நிறுத்த சோபித தேரரின் தலைமையிலான அமைப்பு விரும்பவில்லை. மகிந்தவைத் தோற்கடிக்க வேண்டுமானால், பொது வேட்பாளரொருவரை நிறுத்தவே அவர்கள் விரும்பினர். கரு ஜெயசூரியாவின் பெயர் அதற்காக முன்மொழியப்பட்டபோதிலும், மைத்திரிபால சிறிசேனவே அதற்குப் பொருத்தமானவரென சந்திரிகாவும் ரணிலும் கருதினர். பிரதமர் பதவி மீது மட்டுமே விருப்புக் கொண்டிருந்த மைத்திரிபால, கடைசியில் பொது வேட்பாளராகப் போட்டியிட்டு, ஜனாதிபதிப் பதவியை ஈட்டிக் கொள்ள முடிந்தது. தமது தோல்வியை ஏற்று, கடைசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் தமது அதிகாரங்களைத் துறந்து, மகிந்த தமது சொந்த ஊருக்குச் செல்ல நேர்ந்தது. தோல்விக்கு மேல் தோல்வியைச் சந்தித்து விரக்தியுற்றிருந்த ரணிலுக்கு, பிரதமர் பதவியை வகிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

ஊழல் மோசடிக்காரர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுத்து, நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் இட்டுச் சென்று, ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டிக் காப்பார்கள் என்ற நம்பிக்கையில் தான், மைத்திரிபால மற்றும் ரணில் தரப்பினருக்கு 62 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாக்களித்துப் பதவியில் அமர்த்தினர்.

**அலுத்துக் கொள்ளும் நல்லாட்சி ஆதரவாளர்கள்**

ஆனால் ரணிலோ, மத்திய வங்கிப் பிணைமுறி வழங்கலில் ஊழல் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனைக் குற்றச்சாட்டிலிருந்து காப்பாற்ற முயன்றார். மைத்திரியோ சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்ற தன்மூலம், இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மகிந்தவுக்கு சுதந்திரக்கட்சி சார்பாக வெற்றிலைச் சின்னத்தில்போட்டியிடவாய்ப்புவழங்கியதைக் கண்டு, ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபாலவுக்கு வாக்களித்த வாக்காளர்கள் ஆச்சரியத்துக்கு உள்ளாகினர். அரசை நிர்வகித்துச் செல்லும் விடயத்தில் மகிந்தவுக்கும் மைத்திரிபாலவுக்கும் வேறுபாடு எதுவும் இல்லையே என அவர்கள் அலுத்துக் கொண்டனர். நாளுக்கு நாள் அவர்களது அத்தகைய நிலைப்பாடு வலுவடைந்ததே தவிர, நலிவடையவில்லை. மகிந்த தரப்பினரைத் தோற்கடித்த பெரும்பாலான வாக்காளர்களது எதிர்பார்ப்பாக அமைந்தது, மற்றையோருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதல்ல. 1948ஆம் ஆண்டுக்குப்பின்னர் பதவி வகித்த சகல அரசுகளும் தமது பெரும்பான்மையை நிலைநிறுத்த எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி அரசு தரப்புக்குக் கட்சி தாவவைத்து, நாட்டு மக்களை மடையர்களாக்கியே வந்துள்ளனர்.

ஜனநாயகத்தை உறுதி செய்தல், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டல், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல், இலஞ்சம், ஊழல் என்பவற்றை ஒழித்தல், பொருளாதார நிலையை வலுப்படுத்தல் என்பவற்றை எதிர்பார்த்தே நாட்டு மக்கள், மைத்திரி – ரணில் தரப்பினரிடம் அதிகாரத்தை ஒப்படைத்தனர். ஜனவரி 8 அரசியல் புரட்சி அதற்கான தொன்றே. ராஜபக்ச தரப்பினர் அதில் நாட்டு மக்களது எதிரிகளாக அமைந்தனர். ஆனால் இன்றோ, நிலமை தலைகீழாக ஆகியுள்ளது. இன்றைய மோதல் நிலை, சுதந்திரக்கட்சிக்கும் ஐ.தே. கட்சிக்குமிடையேயானது என்றாகியுள்ளது. துரோகிகளாகக் கொள்ளப்பட்டோர், வீரர்கள் ஆகியுள்ளனர். ஊடகங்கள் மீதான அடக்குமுறை உச்சம் பெற்றுள்ளது.

வேலைவாய்ப்புக்கோரி, அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட தொழிலாளர்களை, படையினரைப் பயன்படுத்தி அடக்கியதாக மகிந்த குற்றம் சுமத்தியபோது, குடிதண்ணீர் வேண்டி ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட ரதுபஸ்வல பொது மக்களை படைபலம்கொண்டு அடக்கி ஒடுக்கினீர்கள் தானே? எனத் திருப்பிக் கேட்க முனையாமல், 2020 ஆம் ஆண்டில் தனித்து அரசமைப்பது குறித்து ரணிலும் மைத்திரிபாலவும் தனித்தனியாகக் கனவு காண்கின்றனரே?

தாம் வாக்களித்தபடி அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மைத்திரிபால குறைத்துள்ளார். அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக, புதிய அரசமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியில் அரசு மும்முரம் காட்டி வருகிறது. ஆனால் அதேவேளை மகிந்த தரப்பினரோ, அதற்குப் பல விதங்களிலும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். இனவாதக் கருத்துக்கள் ஊடாக சிங்கள மக்களை உசுப்பேத்தி இன்றைய அரசைப் பதவி கவிழ்க்கும் முயற்சியில் அவர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர். ஆனால் மைத்திரி – ரணில் தரப்புக்களோ, இந்த ஆபத்தைப் பெரிதுபடுத்தாமல், 2020 இல் ஒவ்வொரு தரப்பும் தனித்து அரசமைப்பதற்கான கனவில் காலத்தைப் போக்கி வருகின்றன.

அரசு தேர்தல்களுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எவற்றையும் நிறைவேற்றவில்லை என்றில்லைத் தான். ஆனால் அரசு தனது வாக்குறுதிகளில், சிறிய சிறிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றியுள்ளதே தவிர, முக்கியமான வாக்குறுதிகளில் எவையும் இது வரை நிறைவேற்றப்படவில்லை. ஆனால் மகிந்த தரப்பினரோ, சிறிய பிரச்சினைகளையே, பூதாகாரப் பிரச்சினைகளாக நாட்டு மக்களுக்குக் காட்டி, நாட்டு மக்களை உசுப்பேத்தி வருகின்றனர்.

**கீரியும் பாம்பும் மோதல் நிலையை உருவாக்கமுயலும் மகிந்ததரப்பு**

ஐ.தே.க., சுதந்திரக்கட்சி ஆகிய இருதரப்புக்கள் மத்தியிலும் கருத்து வேறுபாடுகளை உருவாக்கி வளர்ப்பதில் மகிந்த தரப்பினர் ஆர்வம் காட்டிச் செயற்படுவது தெளிவாகப் புலப்படுகிறது.

இதன் மூலம் இவ்விரு தரப்பினரையும் கீரியும் பாம்பும் மோதலுக்கு இட்டுச் செல்லும் அபாயம் தலைதூக்கியுள்ளது.

மறுபுறம், ஒரு வகையில் பொருளாதாரம் தொடர்பான சகல முடிவுகளும் ரணிலாலே முன்னெடுக்கப்படுகின்றன. ஊழல் மோசடிக்காரர்களை இனம் கண்டு உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தலு பொறுப்பையும் ரணிலே மேற்கொள்கிறார்;.


தேவையான சமயத்தில் மட்டும் பந்தை மைத்திரியிடம் தள்ளிவிட இயலாது. அரசின் நற்பெயருக்கு உரிமை கோருவது போன்று, தவறுகளுக்கான பொறுப்பையும் ரணில் ஏற்றாக வேண்டும்.

அதேவேளை சந்தர்ப்பவாதிகள், நீரின் கீழாக நெருப்பைக்கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

முழு உலகத்தையுமே ஏமாற்றி வருகின்றனர். இது இப்படியே தொடருமானால், நல்லாட்சி அரசை உருவாக்க ஆதரவளித்த 62 லட்சம் மக்களுக்குப் பதிலளிக்கவேண்டியபொறுப்பை ரணிலும், மைத்திரியும் ஏற்றாகவேண்டிய நிலை ஏற்படும். ■

அரசு தேர்தல்களுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எவற்றையும் நிறைவேற்ற வில்லை என்றில்லைத் தான். ஆனால் அரசு தனது வாக்குறுதிகளில், சிறிய சிறிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றியுள்ளதே தவிர, முக்கியமான வாக்குறுதிகளில் எவையும் இது வரை நிறைவேற்றப்படவில்லை. ஆனால் மகிந்த தரப்பினரோ, சிறிய பிரச்சினைகளையே பூதாகாரப் பிரச்சினைகளாக நாட்டு மக்களுக்குக் காட்டி நாட்டு மக்களை உசுப்பேத்தி வருகின்றனர்.





# வாசகர் திருமுகம்

## மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் பொலிஸ் நிலையம் வேண்டாம்

மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை அமைக்க எடுக்கப்படும் நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ்வரும் சுன்னாகம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியைச் சுவீகரித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை அமைப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை முடவேம்படி என்ற பகுதியைச் சேர்ந்த மக்கள் மிகத் தீவிரமாக எதிர்ப்பதோடு இது தொடர்பாக பிரதேச செயலர் உள்ளிட்ட உயர் மட்டத்தினர் பலருக்கும் மனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர். உரிய நிர்வாகத்தரப்பினர் இது குறித்து அக்கறை காட்டிச் செயற்படுவார்களா?

*பி.கணேசன், சுன்னாகம்*

## சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுக்கும் ஆண்டிகள்

வடமாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் அடுத்த தவணை முதல் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்பதில் சம்பந்தப்பட்டவர்கள் உறுதியாக இருந்து வருகின்றனர். இது தொடர்பாக அவர்கள் எந்தவித விட்டுக் கொடுப்புக்களுமற்று இருந்து வருவதையும் உணர முடிகிறது.


இந்தப் பின்நோக்கற்ற முடிவாயல் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்கள் மட்டு மன்றி ஆசிரியர் குழாமும் தான். உதாரணத்துக்குத் தினமும் யாழ்.நகரில் இருந்து வன்னிக்குச் சென்று பயிற்றுவித்து விட்டுப் பிற்பகல் வீடு திரும்பும் ஆசிரியர்களின் நிலை குறித்து இந்த அதிகாரிகள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

குறித்த ஆசிரியர்கள் இனிவரும் காலத் தில் தினமும் ஒரு மணித்தியாலம் பிந்தியே தமது வரவேட்டில் கையயாப்பம் இடவேண்டி வரும். மொத்தத்தில் இது சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டியின் கதைபோன்ற தொன்றே.

*அலெக்ஸ் பரந்தாமன்*
*புதுக்குடியிருப்பு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிஸ்டாட்டில்



அரிஸ்டாட்டில் பல்வேறு துறைகளில் பரந்த அறிவு கொண்ட மிகப் பெரிய தத்துவ மேதை. பல்வேறு துறைகளில் பயின்ற அவர், தான் கற்ற ஒவ்வொரு துறையிலும் பல்வேறு ஆக்கங்களை இவ்வுலகிற்கு அளித்திருக்கிறார். இந்த கிரேக்க தத்துவவாதி கிமு 384இல் Stagira என்ற ஊரில் பிறந்தார். அவரது தந்தை நிகோமசுஸ் ஆவார்.

ஆரம்ப காலத்தில் தன் தந்தையிடம் வீட்டில் இருந்தபடியே மருத்துவத்தை கற்றார். அந்த மருத்துவ அறிவு அவரின் இயற்கை நிகழ்வுகள் பற்றிய ஆய்வுக்கு வழிவகுத்தது. அவரது 18 ஆவது வயதில் , மற்றொரு பெரிய கிரேக்க தத்துவவாதியான பிளேட்டோவின் மாணவரானார்.

அறிவியலில் அவரது பங்களிப்புகள், பிற்காலத்தில் அறிவியல் வளர்ச்சிக்கு மிக உறுதுணையாக இருந்தன. இவர் தனது வாழ்க்கையை இயற்கை அறிவியல் ஆய்வுகளிலேயே பெருமளவு செலவிட்டார். இவரது ஆராய்ச்சிகளை கணக்கியலோடு தொடர்புபடுத்தாமல் இருந்தது மிகப்பெரிய பின்னடைவாக பிற்கால அறிவியல் அறிஞர்களால் நிரூபிக்கப்பட்டது.

அவர் மாவீரர் மகா அலெக்சாண்டருக்கு ஆசிரியராகவும் இருந்தார். இந்த மாபெரும் தத்துவ மேதை கி.மு. 322இல் இறந்தார்.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.

செ.மதீசன்
தரம் - 06
வ/நெளுக்குளம் கலைமகள்
மகா வித்தியாலயம்

## பிரார்த்தனை செய்யலாமா?

இறைவன் எங்கோ வெகு தொலைவில் இருக்கிறார். ஆனால், பிரார்த்தனையோ அவரை பூமிக்கு இழுத்துக் கொண்டு வருவதுடன், அவருடைய சக்தியையும் எம்முடைய முயற்சியையும் இணைக்கிறது

*- மாட்டிகாஸ் பெரீன்*



## வாழ்க்கைத் தத்துவங்கள்

- அழிவைத் தருவது – ஆணவம்
- ஆபத்தைத் தருவது – கோபம்
- இருக்க வேண்டியது – பணிவு
- இருக்கக் கூடாதது – பொறாமை
- உயர்வுக்கு வழி – உழைப்பு
- கண்கண்டதெய்வம் – பெற்றோர்
- செய்ய வேண்டியது – உதவி
- செய்யக்கூடாதது – துரோகம்
- நம்பக் கூடாதது – வதந்தி
- நழுவ விடக்கூடாதது – வாய்ப்பு
- நம்முடன் வருவது – புண்ணியம்
- பிரியக்கூடாதது – நட்பு
- மறக்கக் கூடாதது – நன்றி
- மிக மிக நல்லநாள் – இன்று
- மிகப்பெரிய தேவை – அன்பு
- மிகக் கொடிய நோய் – பேராசை
- மிகவும் சுலபமானது – குற்றம் காணல்
- மிகப் பெரிய வெகுமதி – மன்னிப்பு
- விலக்க வேண்டியது – விவாதம்
- வந்தால் போகாதது – பழி
  போனால் வராதது – மானம்




மந்தையிலிருந்து பிரிந்து போன ஓர் ஆட்டுக் குட்டியை ஓநாய் துரத்தியது.

தப்பிக்க முடியாது என்று தீர்மானமாகத் தெரிந்ததும், ஆட்டுக்குட்டி, ஓநாயைப் பார்த்து, நான் இனித் தப்ப முடியாது என்பது எனக்குத் தெரியும். நான் இன்னும் சிறிது நேரம்தான் வாழப் போகிறேன்.

இறப்பதற்கு முன் என்னை மகிழ்ச்சியாகச் சிறிது நேரம் இருக்க அனுமதிப்பாயா? சிறிது நேரம் பாட்டுப் பாடேன் நான் ஆடுகிறேன், என்று கேட்டது.

ஓநாயும் அதற்குச் சம்மதித்து, தனது குழலை எடுத்து சத்தமாக வாசித்தது; ஆட்டுக் குட்டியும் நடனமாட ஆரம்பித்தது.

ஆனால், சில நிமிடங்களுக்குள்ளேயே குழல் இசை கேட்டு, ஆட்டு மந்தையை மேய்ப்பவர்கள் ஓடி வந்து ஓநாயை விரட்டி அடித்தனர். ஓடிக் கொண்டே ஓநாயும், எனக்கு இது தேவைதான்.

வேட்டையாடுவதுதானே என்னுடைய தொழில். அதை விடுத்துகுழல் ஊதியது தவறுதான்! என்று சொல்லி வருந்தியது.


நீதி! அவரவர் செய்ய வேண்டிய தொழிலை விட்டுவிட்டு அடுத்தவர் தொழிலைச் செய்வது ஆபத்து.

சோம்பேறிக்கு எல்லாமே கடினமாகத் தோன்றும். ஊக்கமுள்ளவனுக்கு எல்லாமே எளிதாகத் தோன்றும்.

இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தாய் நாட்டில் சட்டத்தை மதிக்கத் தூண்டும்.

எந்தக்கொள்கையும், நோக்கமும் இல்லாத வாழ்க்கை, திசைகாட்டும் கருவி இல்லாத கப்பல் நடுக்கடலில் நிற்பதற்கு ஒப்பாகும்


# வரலாற்றில் இன்றைய தினம்



1922 - சோவியத் சோசலிசக் குடியரசு உருவாக்கப்பட்டது.
1927 - ஜப்பானின் டோக்கியோவில் ஆசியாவிலேயே முதன் முதலாக நிலக்கீழ் புகையிரதப் பாதை தொடங்கப்பட்டது.
1943 - போட் பிளயரில் சுபாஸ் சந்திரபோசால் இந்திய காங்கிரஸ் கொடி ஏற்றப்பட்டது.
1993 - சாவகச்சேரியில் கூடியிருந்த மக்கள் மீது புக்காரா விமானம் ரொக்கட் குண்டு வீச்சு; 8 பேர் உடல் சிதறி உயிரிழப்பு. 60 பேர் காயம். பழமை வாய்ந்த தேவாலயம் சேதம்.
- பேராசிரியர் கு.நேசையா காலமானார். காந்தியவாதியும் கல்விமானுமான அவர் 93ஆவது வயதில், யாழ்ப்பாணத்தில் காலமானார்.
1999 - புங்குடுதீவில் இளம் பெண் படுகொலையைக் கண்டித்து அங்கு மறியல் போராட்டம்.
- நிபந்தனையுடன் பேச்சு; பிரபாவுக்கு ஜனாதிபதி அழைப்பு; ஈழம் தவிர்ந்த வேறு எது பற்றிப் பேசுவதற்கும் தயாராம்.
2005 - ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மீண்டும் தமிழகத்தில் பெரும் உணர்வெழுச்சி.
2009 - நீர்கொழும்பில் பூசகர் ஒருவர் இரவு சுட்டுக்கொலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில புத்தாண்டு பலன்



# 2017

## மேடம்

உங்களின் ராசிநாதனாகிய செவ்வாய் பகவான் லாப வீட்டில் நிற்கும் போது இந்த ஆண்டு பிறப்பதால் உங்களின் நிர்வாகத்திறன், ஆளுமைத்திறன் அதிகரிக்கும். புதுப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

எதிர்பாராத பணவரவு உண்டு. போட்டித் தேர்வுகளில் வெற்றிபெற்றுப் புது வேலையில் சேர்வீர்கள். வழக்கால் இருந்து வந்த நெருக்கடிகள் நீங்கும். நீண்ட காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்த விசா இந்த ஆண்டு வந்து சேரும். உறவினர்கள் வீட்டு விசேடங்களை எடுத்து நடத்துவீர்கள். பேசாமல் இருந்த நண்பர்கள் வலிய வந்துப் பேசுவார்கள். பூர்வீக சொத்துப் பங்கைக் கேட்டு வாங்குவீர்கள்.

ஆனால் 16.01.2017 வரை ராசிநாதன் செவ்வாய் கேதுவுடன் சேர்ந்து நிற்பதாலும், 17.01.2017 முதல் 26.02.2017 வரை ராசிக்கு பன்னிரண்டில் மறைவதாலும் முன்கோபம், குருதிச்சோகை, சகோதரங்களுடன் மனக்கசப்புகள், சிறுசிறு நெருப்புக் காயங்களெல்லாம் வந்துப்போகும். 11.04.2017 முதல் 26.05.2017வரை உள்ள காலக்கட்டத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாயைச் சனி பார்ப்பதால் சிறுசிறு விபத்துக்கள், பணம் கொடுக்கல், வாங்கல் விடயத்தில் ஏமாற்றங்கள் வந்து போகும். காணி, வீடு வாங்கும்போது தாய்ப்பத்திரத்தைச் சரி பார்க்கத் தவறாதீர்கள்.

உங்களின் சுகாதிபதி சந்திரன் உங்கள் ராசிக்கு 10 ஆம் வீட்டில் நிற்கும் போது இந்த 2017ஆம் ஆண்டு பிறப்பதால் கடந்த ஆண்டில் ஏற்பட்ட இழப்புகள், ஏமாற்றங்களிலிருந்து விடுபடுவீர்கள். சின்னச் சின்ன சந்தர்ப்பங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். வேலைக்கு விண்ணப்பித்துக் காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். வீடு, வாகனம் உங்கள் ரசனைக் கேற்ப அமையும்.

ஜுலை 26ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு லாப வீட்டில்கேது இருப்பதால் எவ்வளவுபிரச்சினைகள் வந்தாலும் அதையெல்லாம் எதிர்த்து நின்று போராடிச் சமாளிக்கும் மனப்பக்குவம் உண்டாகும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ராகு 5 ஆம்வீட்டில் நிற்பதால் பிள்ளைகளிடம் உங்களின் எண்ணங்களைத் திணிக்க வேண்டாம். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினையில் இப்போது தலையிட வேண்டாம்.

ஆனால் 27ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு ராகு 4ஆம் வீட்டிலும், கேது 10இலும் அமர்வதால் ஓய்வெடுக்க முடியாதபடி அடுத்தடுத்து வேலைப்பளு இருந்துக் கொண்டேயிருக்கும். வீண் பழிகளும் வரக்கூடும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகளும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் நெருக்கடிகள், இடமாற்றங்கள் வந்து செல்லும். சிலர் இருக்கும் இடத்தை விட்டு வேறு வீடு, வேறு ஊர் அல்லது வெளி மாவட்டம் மாற வேண்டிய சூழ்நிலை உருவாகும். புத்தாண்டின் தொடக்கம் முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை உங்களின் பாக்கியாதிபதியும்-விரையாதிபதியுமான குரு உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் நிற்பதால் குடும்பத்தில் வீண் சச்சரவுகள் வரக் கூடும். சந்தேகத்தால் கணவன்-மனைவிக்குள் பிரிவு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம். வங்கிக் காசோலையில் முன்னரே கையொப்பமிட்டு வைக்காதீர்கள். தங்க ஆபரணங்களை இரவல் வாங்கவோ, கொடுக்கவோ வேண்டாம். நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். பிள்ளைகளால் அலைச்சலும், செலவுளும் வந்து நீங்கும். ஆனால் மறுநாள் தொடங்கி முதல் வருடம் முடியும் வரை குரு பகவான் 7ஆம் வீட்டில் அமர்ந்து உங்களைப் பார்க்கவிருப்பதால் உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும். தள்ளிப்போன திருமணம் கூடிவரும். அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குடும்பத்தில், பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லையே என வருந்தியவர்களுக்கு இந்த வருடத்தில் வாரிசு உருவாகும். டிசெம்பர் 14ஆம் திகதி வரை சனி 8இல் நின்று அஷ்டமத்துச் சனியாக வருவதால் அவ்வப்போது கோபப் படுவீர்கள். ஏமாந்து போன தொகையை நினைத்து வருத்தப்படுவீர்கள். ஏமாற்றிய நபர்களை நினைத்தும் ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். பணம், பொருள் களவு போக வாய்ப்புள்ளது. திடீரென்று அறிமுகமாகுபவர்களிடம் குடும்ப அந்தரங்க விடயங்களைச் சொல்ல வேண்டாம். தாழ்வுமனப்பான்மை தலைத்தூக்கும். பெரிய நோய்க்கான அறிகுறிகளெல்லாம் இருப்பதைப் போல் தோன்றும். ஆனால் மருத்துவப் பரிசோதனை செய்யும் போது பெரிய பாதிப்புக்கள் இருக்காது என்றாலும் கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. வருடத்தின் இறுதியில் முதல் சனி 9ஆம் வீட்டில் அமர்வதால் எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். மற்றவர்களின் மனநிலையைப் புரிந்து பேசும் பக்குவம் உண்டாகும். நெருடலான, தர்மசங்கடமான சூழ்நிலைகளெல்லாம் நீங்கும். வியாபாரத்தில் இந்தாண்டு செப்ரெம்பர் மாதம் முதல் லாபம் அதிகரிக்கும். என்றாலும் மற்ற வர்களின் பேச்சைக் கேட்டு பெரிய முதலீடுகள் போட்டு சிக்கிக் கொள்ளாதீர்கள். புதிய வேலையாள்களை பணியில் அமர்த்தும்போது விசாரித்துச் சேர்ப்பது நல்லது.

உத்தியோகத்தில் உங்களின் உத்தியோகஸ்தானாதிபதி சனி 8இல் நீடிப்பதுடன், ஜீலை 27ஆம் தேதி முதல் கேது உத்தியோகஸ்தானத்தில் அமர்வதாலும் கூடுதலாக வேலைபார்க்க வேண்டி வரும். அலுவலகத்தில் சின்ன சின்ன மரியாதைக் குறைவான சம்பவங்களும் நிகழக்கூடும். உங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சலுகைகளையும் போராடிப் பெற வேண்டி வரும். அதிகாரிகளால் மதிக்கப்பட்டாலும் சக ஊழியர்களால் இடையூறுகளை சமாளிக்க வேண்டி வரும். ஆனாலும் செப்ரெம்பர் மாதம் முதல் வேலைச்சுமை குறையும். மறுக்கப்பட்ட உரிமைகளும் கிடைக்கும். இடமாற்றமும் கிட்டும். பெண்களுக்கு செப்ரெம்பர் மாதம் முதல் திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு தற்போது கைகூடி வரும். உங்கள் ரசனைக் கேற்ப நல்ல வரனும் அமையும். என்றாலும் தோலில் தடிப்பு, தேமல், தூக்கமின்மை வந்துசெல்லும். பெற்றோரின் ஆலோசனைகள் இப்போது கசப்பாக இருந்தாலும் பின்னர் அது சரியானது தான் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

இந்த 2017ஆம் ஆண்டு முள்கள் நிறைந்த பாதைகளில் உங்களைப் பயணிக்க வைத்தாலும் அனுபவ அறிவாலும், சமயோஜித புத்தியாலும் ஓரளவு முன்னேற்றம் அமையும்.

### நாளை

மார்கழி-16
சனிக்கிழமை -31.12.2016
திதி: துதியை பி.ப.03.06
நட்சத்திரம்: உத்தராடம் பி.இ.03.16
ராகுகாலம்:09.29-10.59 வரை
சுபநேரம்:03.29-04.59 வரை

# நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பாருங்கள்

'இராணுவத்தினரிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டால் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் அவர்களை இங்கிருந்து வெளியேற்ற முடியாது' என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையில் தெரிவித்திருந்தார்.

முதலமைச்சரின் கருத்து மிகச் சரியானது. இராணுவத்தினர் நின்று நிலைப்பதற்கு அவர்கள் செய்த உதவி காரணமாகி விடும் என்ற இந்தக் கருத்தை முதலமைச்சர் விக்னேஸ்வரன், எதிர்க்கட்சி உறுப்பினர் அகிலதாஸைப் பார்த்துக் கூறினார். அந்தக் கருத்தை அவரைப் பார்த்துச் சொல்வதற்கு முன்னர், தன்னைச் சுற்றியுள்ள-தற்போது முதலமைச்சரின் அணியாகத் தம்மைக் காட்டிக் கொண்டுள்ளவர்களைப் பார்த்தே கூறியிருக்க வேண்டும்.

ஏனெனில், இப்போது முதலமைச்சருடன் கூட இருப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள் - முதலமைச்சர் அரவணைத்துச் செல்லும் அந்தக் கூட்டத்தினர்தான் இராணுவத்தினரிடமிருந்து இரந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள். அவர்கள் அவ்வாறு பெற்றுக் கொண்ட உதவிகளால்தான் இராணுவத்தினர் இங்கே நிலைத்து நிற்கின்றார்கள்.

விக்னேஸ்வரனுக்கு மகுடிகாரகச் செயற்படும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், சர்வேஸ்வரன், புளொட் அமைப்பின் சித்தார்த்தன், சிவநேசன், ரெலோ அமைப்பின் விந்தன், சிவாஜிலிங்கம் போன்றோரே இராணுவத்தினரிடம் வலிந்து சென்று உதவிகளைக் கேட்டு அவர்களுக்கு இங்கே தங்கக் கூடாரம் அமைத்துக் கொடுத்தவர்கள்.




"ஆயுதப் போராட்டத்தினால் தான் இந்தச் சபையே கிடைத்தது" என்று விந்தனும், "நாங்கள் உயிரைக் கூடத் தியாகம் செய்யத் துணிந்துதான் போராடினோம்" என்று சிவாஜிலிங்கமும் வீரவசனங்களை வடக்கு மாகாண சபையின் அமர்வில் வீசியெறிந்தனர்.

அவர்கள் கூறியதில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது. உயிரைத் துச்சமாக மதித்துத்தான் போராட்டக் களத்துக்குள் அவர்கள் புகுந்தார்கள். தாயக தேசத்தின் விடியலே-மண் மீட்பே தங்களின் இலட்சியம் என்றுதான் போராடினார்கள். கால ஓட்டத்தில் அவர்களின் தடத்தில் தளம்பல் ஏற்பட்டது. கிடைத்ததைப் பெற்றுக் கொள்வோம் என்று, கொண்ட இலட்சியத்தையே மறந்து போனார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளால் இவர்கள் தடை செய்யப்பட்டார்கள்.

உயிரைத் துறந்து மண் மீட்கப் புறப்பட்ட இவர்கள், தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும் சகோதர உயிர்களை அழிக்கவும் இராணுவத்தினரிடமே உதவிகளைப் பெற்றுக் கொண்டனர். தமிழனை அழிப்பதற்கு இராணுவத் துணைக்குழுவாக இவர்கள் பயன்பட்டனர். ஒட்டுக் குழுவாகச் செயற்பட்டு தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொண்டனர்.

இராணுவத்தினரிடம் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டாம் என்ற கதையை முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது நண்பர்களுக்கு-மகுடி ஊதுபவர்களுக்குத் தான் சொல்லியிருக்க வேண்டும். ஏனெனில் காலஓட்டத்தில் அவர்கள் எப்போதும் நிலையான கொள்கையில் இருப்பதில்லை. கடந்த காலத்தில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தமிழனை அடகு வைத்து இராணுவத்தின் உதவியைப் பெற்றவர்கள், எதிர்காலத்தில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மீண்டும் இராணுவ உதவியைக் கோர மாட்டார்கள் என்று சொல்ல முடியாது. எனவே முதலமைச்சர் இந்த அறிவுரையை அவர்களுக்குத்தான் அழுத்தி உரைக்க வேண்டும். இப்போது இராணுவத்தினர் இங்கே இருப்பதற்கு அவர்கள்தான் காரணம் என்பதையும் முதலமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

"இராணுவத்தினரை இங்கிருந்து வெளியேற்றுவதே இறுதி முடிவு" என்று ஆளும் கட்சி உறுப்பினர் க.விந்தன் மாகாண சபை விவாதத்தில் குறிப்பிட்டிருந்தார். இதனைச் செயற்படுத்துவதற்காகத்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் முழுமூச்சாக, வீச்சாகச் செயற்பட்டனர்.

இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில், மேற்படி நடவடிக்கையை முன்னெடுத்த விடுதலைப் புலிகளுக்கு எதிராக, இராணுவத்தினருடன் சேர்ந்திருந்து - ஒட்டுக்குழுவாக ஒட்டியிருந்து, இராணுவத்தினர் இங்கே இருக்க வேண்டும் என்று அழுங்குப்பிடி பிடித்திருந்தவர்கள் யார் என்பதை விந்தன் மறந்து விட்டார் போலும். அன்று இராணுவத்தினர் இங்கே கால் ஊன்றுவதற்குக் காரணமானவர்களே இவர்கள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.திருநாவுக்கரசு

# நவ சமசமாஜக்கட்சியின் 39ஆவது ஆண்டு நிறைவு விழா

நவசமசமாஜக்கட்சியின் 39ஆவது ஆண்டு நிறைவு விழா'பேரினவாதத்தைத்தோற்கடித்துஜனநாயகத்தைப் பலப்படுத்துவோம்' என்ற தொனிப்பொருளில் இன்று 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன் நிமித்தம் பி.ப. 2 மணியளவில் ஒரு ஞாபகார்த்தக் கூட்டமும் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக நவசமசமாஜக் கட்சி இலங்கை அரசியல் பரப்பில் மட்டுமல்லாமல் பன்னாட்டு அரசியல் விவகாரங்களிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்துள்ளது. இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியாகிய லங்கா சமசமாஜக் கட்சியில் (ல.ச.ச.க) இணைந்து செயற்பட்டு வந்த ஒரு பிரிவினர், ல.ச.ச.க. 1960கள் முதல் முதலாளித்துவ இனவாத சக்தியாகிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டரசில் தடம் பதித்ததையிட்டு விரக்தியும் வெறுப்பும் கொண்டு சில வருடங்களாக உட்கட்சிப் போராட்டம் நடத்தியதன் காரணமாக தோழர்கள் விக்கிரமபாகு கருணாரத்ன, குமார் டேவிட், எட்வின் கொத்தலாவலை, சிறிதுங்க ஜயசூரிய, ஒஸ்வின் பெர்ணாண்டோ, வாசுதேவ நாணயக்கார, ஆ.க.அண்ணாமலை போன்றோர் ல.ச.ச.க. யிலிருந்து வெளியேற்றப்பட்டனர்;. அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களும் அதனை அடுத்து ல.ச.ச.க. வை விட்டு வெளியேறிய பலரும், ஏனையோரும் ஒன்று திரண்டுதான் 1977ஆம் ஆண்டு ந.ச.ச.கட்சியை ஆரம்பித்தனர்.

ஐக்கிய தேசிய கட்சி(ஐ.தே.க) தலைமையிலென்றாலும் சரி. சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலென்றாலும் இந்த நாட்டை மாறி மாறி ஆண்டு வந்த எல்லா அரசுகளும் அரசியல் பொருளாதார, சமூக, மற்றும். கலாசார ரீதியாக நாட்டை மிகப் பாதகமான திசையிலேயே இட்டுச் சென்றன. எனவே, நாட்டில் 80 வீதமான மக்களின் வாழ்க்கைத் தரம் குன்றிய நிலையிலே இருந்து வந்தது. ஆளும் பிரதான இரண்டு கட்சிகளும் வாக்கு வங்கியைக் குறிவைத்து இன, மத வாதத்தைப் பரப்புரைப் பொருளாகக் கொண்டு பயணித்தபடியால் இந்த நாடு கொடுத்த விலை கொஞ்ச நஞ்சமல்ல.

1956இல் 'சிங்களம் மட்டும்' சட்டம் முடுக்கி விட்ட தீச்சுவாலை தான், காலப்போக்கில் தமிழர் தரப்பில் தனி நாட்டுக் கோரிக்கைக்கு வித்திட்டு 26 வருட அழிவுப் போர் நடத்தப்பட்டது. 'சிங்களம் மட்டும்' சட்டம் காலக்கிரமத்தில் தமிழர் தனி நாட்டுக் கோரிக்கைக்கு இட்டுச் செல்லும் என அன்றைய இடதுசாரித் தலைவர்கள் எச்சரித்தனர். 'இருமொழிகள் என்றால் ஒரு நாடு, ஒரு மொழி என்றால் இரு நாடுகள்' என்றும் எச்சரித்தனர். அதனை அவ்வாறு கடுமையாக எதிர்த்த அதே இடதுசாரிக் கட்சிகள், ஒரு தசாப்தகாலம் கழிவதற்கு முன்னதாகவே மேற்படி இனவாதச் சட்டத்தைக் கொண்டு வந்த அதே சிறி.ல.சு.க. யுடன் கூட்டரசில் இறங்கியது பெரிய சாபக்கேடாகியது.

> ‘ஆணைப்பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் ஆக்க முடியாதது தவிர இதர அனைத்து அதிகாரங்களும் என்வசம்' என்று மார்தட்டி ஜே.ஆர் ஜயவர்த்தன 1978ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி நிறைவேற்று அதிகார முறைமையை அறிமுகப்படுத்திய அதே தினம் தோழர் விக்ரமபாகு தலைமையில் அதனை எதிர்த்து கறுப்புக் கொடி உயர்த்தி போராட்டம் நடத்தப்பட்டது. அதற்குப் பரிசாக போகம்பரை சிறைவாசமும் தோழர் விக்கிரமபாகுவின் பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவிப் பறிப்பும் அமைந்தன.

நவசமசமாஜக் கட்சி ஆரம்ப காலம் முதல் சரியான அரசியல்பொருளாதார கொள்கைகள் மீது கவனம் செலுத்திய வண்ணம் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளது. குறிப்பாக தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை சுயநிர்ணய அடிப்படையில் வடக்கு கிழக்கு மாநில சுயாட்சி முறைமைதான், தீர்வு என்பதற்காக போராடியதன் காரணமாக தோழர் ஆ.க.அண்ணாமலை உள்ளிட்ட பல தோழர்கள் தமது இன்னுயிரைத் தியாகம் செய்தது அடங்கலாக பல்வேறு தியாகங்களைச் செய்து பல போராட்டங்களை ந.ச.ச..க நடத்தி வந்துள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக 1979 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்த்தன அரசு கொண்டு வந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை சவப் பெட்டி ஊர்வலம் நடத்தி எதிர்த்தது. அதற்கு முன்னதாக 1978இல் ‘ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் ஆக்க முடியாதது தவிர இதர அனைத்து அதிகாரங்களும் என்வசம்' என்று மார்தட்டி ஜே.ஆர் ஜயவர்த்தன 1978ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி நிறைவேற்று அதிகார முறைமையை அறிமுகப்படுத்திய அதே தினம், தோழர் விக்கிரமபாகு தலைமையில் அதனை எதிர்த்து கறுப்புக் கொடி உயர்த்தி போராட்டம் நடத்தப்பட்டது. அதற்குப் பரிசாக போகம்பரை சிறைவாசமும், தோழர் விக்கிரமபாகுவின் பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவிப் பறிப்பும் அமைந்தன.

அத்தனை இடர்பாடுகளையும் துச்சமென மதித்து புரட்சிகரப் போராட்டம் என்ற பாதையில் சலிக்காது முன்னேறி மகிந்த ராஜபக்சவின் எதேச்சதிகார, இலஞ்ச ஊழல் நிறைந்த, தமிழரைக் கொன்று குவித்த குடும்ப ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காகவே நவசமசமாஜக் கட்சி ஏறத்தாழ ஒரு தசாப்த காலமாக நடத்தப்பட்ட பொது எதிர்க்கட்சி போராட்டத்தின் முன்னணியில் நின்று போராடியது. அதன் ஒட்டுமொத்த விளைவாகவே மகிந்த ராஜபக்சவின் படுபயங்கர ஆட்சிக்கும், அவரது வாழ் நாள் ஜனாதிபதி கனவுக்கும் 2015 ஜனவரி 8ம் திகதி சாவு மணி அடிக்கப்பட்டது. இன்றைய சிறிசேன–விக்கிரமசிங்க தேசிய ஒற்றுமை அரசு குறிப்பாக உத்தேசிக்கப்படும் அரசியல் யாப்பு மூலம் புரையோடிப் போயுள்ள தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வு செயற்பாடுகளும் முன்னெடுப்புகளும் திருப்திகரமானவையாகத் தோன்றவில்லை.

அடுத்ததாக, வடக்கு கிழக்கில் அதிகளவு இராணுவ பிரசன்னமும் புலனாய்வும் மாற்றமில்லாமல் தொடர்கின்றது. மறுபுறத்தில், தென்னிலங்கையில் பச்சையாக இடம் பெற்று வரும் இனவாதத்தை, குறிப்பாக சில பௌத்த துறவிகள் இனவாதத்தைக் கக்கிச் சட்டத்தின் ஆட்சியைக் கூட மிதித்து அட்டகாசம் புரிந்து வருவதை அரசு செய்வதறியாது கை கட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது நிச்சயமாக புத்திசாலித்தனமானதோ விரும்பத்தக்கதோ அல்ல. இனவாதம் எந்த வட்டாரத்திலிருந்து வந்தாலும் அது நிச்சயமாக வன்மையாக எதிர்க்கப்பட வேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பாரிய பணிகளில் மக்கள் அணிதிரட்டப்பட



வேண்டும் என்பதில் நவசமசமாஜக் கட்சி அசைக்க முடியாத திடசங்கற்பதுடன் உள்ளது. இந்த வரலாற்றுப் பணியில் மக்கள் உணர்வுபூர்வமாக இணைந்து கொள்ள வேண்டும் என்பது எமது வினயமான வேண்டுகோளாகும்.

*கட்டுரையாளர்:*
*அரசியல் குழு உறுப்பினர்*

# 2016 இல் கவனம் ஈர்த்த தமிழ்ப் படங்கள்

2016 இல் சுமாராக 200 படங்கள் வெளியாகின. அதில் கவனம் ஈர்த்த படங்களை இரண்டு கைவிரல்களுக்குள் அடக்கிவிடலாம். இந்த வருடம் வெளியான திரைப்படங்களில் சீனு ராமசாமியின் தர்மதுரை, அறிமுக இயக்குநரின் உறியடி, பாபி சிம்ஹா நடித்த மெட்ரோ, ஒருநாள் கூத்து போன்ற படங்கள் வெளியான போது, விமர்சகர்கள் மத்தியில் சின்ன சலசலப்பு எழுந்தது. வருட இறுதிவரைகூட அந்தச் சலசலப்பு நீடிக்கவில்லை என்பது முக்கியமானது. பீட்சா, ஜிகிர்தண்டா படங்களின் மூலம் கவனம் பெற்ற கார்த்திக் சுப்பாராஜின் இறைவி திரைப்படம் ஏமாற்றத்தையே தந்தது. பாத்திரப் படைப்புகளில் வெளிப்பட்ட செயற்கைத்தனமும், முற்போக்கு என்றால் என்ன என்பதில் அவரிடம் காணப்பட்ட குழப்பமும் இறைவியை அரைகுறை படைப்பாக்கியது. இன்னொரு முக்கிய இயக்குநரான பாலாவின் தாரை தப்பட்டை மிக மோசமான விமர்சனங்களை எதிர்கொண்டது. பாலா மீதான நம்பிக்கைகள் தொடர்ச்சியாகச் சரிந்து வந்த நிலையில் தாரை தப்பட்டை அதன் இறுதி அத்தியாயத்தை எழுதியது. சூது கவ்வும் நலன் குமாரசாமியின் காதலும் கடந்து போகும் கொரிய திரைப்படமான மை டியர் டெஸ்பரடோவின் அதிகாரப்பூர்வ தழுவல். அந்தப் படத்தை தமிழில் அதன் கட்டுக்கோப்புக் குலையாமல் நலன் இயக்கியிருந்தார். படத்தில் ஆழமான உணர்வுகளோ திடீர் திருப்பங்களோ இல்லாததால் சுமாரான படமாக அது தோற்றமளித்தாலும், காதலும் கடந்து போகும் திரைப்படம் நலன் குமாரசாமியின் மீதான நம்பிக்கையை தக்க வைத்தது எனலாம். இந்த வருடத்தின் புதிய நம்பிக்கை சுதா கொங்கரா. இவர் இயக்கிய இறுதிச்சுற்று திரைப்படம் தமிழ் சினிமாவில் அதுவரை திறக்கப்படாத ஒரு சாளரத்தைத் திறந்தது.

படத்தில் அரசியல்ரீதியாக நிறைய விமர்சனங்கள் இருந்தாலும் அதையும் மீறி படம் கவனத்தை கவர்ந்தது. இந்த வருடம் அதிகம் எதிர்பார்க்கப்பட்டவர் காக்கா முட்டை மணிகண்டன். அவரது இயக்கத்தில் குற்றமே தண்டனை, ஆண்டவன் கட்டளை என இரு படங்கள் வெளிவந்தன. குற்றமே தண்டனை படத்தின் அமைதியான திரைமொழி மணிகண்டன் மீதான மரியாதையை தக்க வைத்தது. எனினும் படம் அரைகுறை பதார்த்தமாக திருப்தியளிக்கவில்லை. ஆண்டவன் கட்டளை இன்னொருவரின் கதை. ஆயினும் ஒரு நிறைவைத் தந்தது. ஓரளவு நேர்த்தியுடனும், கதைக்கருவுடனும், வர்த்தக ரீதியாகவும் படம் எடுக்க முடியும் என்பதற்கு ஆண்டவன் கட்டளை உதாரணமாக அமைந்தது. சுசீந்திரனின் மாவீரன் கிட்டு திரைப்படம் சாதிய படிநிலைகளை சாதிப் பெயர் குறிப்பிடாமலே விமர்சித்தது. இதுபோன்ற படங்கள் வரவேற்கத்தக்கவை என்றாலும், சமகால சாதிப் பிரச்சினைகளிலிருந்து விலகி நின்று, அதேநேரம் சாதிப் பிரச்சினையைப் பேசுவதாலேயே கவனத்தை ஈர்க்கும் படங்களாக இவை நிலைபெற்றிருப்பதும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டியது. இந்த வருடம் அதிகம் பேசப்பட்ட படங்களில் முக்கியமானது ஜோக்கர். ராஜு முருகனின் இந்தப் படம் சாமானியனின் பார்வையில் இன்றைய அரசியலை நையாண்டி செய்தது. பரப்புரை வசனங்கள் தூக்கலாக இருந்தாலும் ஜோக்கர் இந்த வருடத்தின்முக்கியமான வரவு. இதனை அடித்தளமாக வைத்து ராஜு முருகன் அடுத்தப் படத்தில் முன்னேறிச் செல்வார் என்று நம்பலாம். சந்தேகமில்லாமல் இந்த வருடத்தின் பெருமைக்குரிய படம், வெற்றிமாறனின் விசாரணை. பொலிஸ் என்ற அதிகார அமைப்பின் அத்துமீறல்களை, அடாவடிகளைத் தோலுரித்து காட்டிய படம். படத்தில் பல குறைகள் இருந்தாலும் விசாரணையின் வரவு முக்கியமானது. இவை தவிர தோழா, அப்பா, அம்மிணி போன்ற ஒருசில முயற்சிகளும் இந்த வருடம் மேற்கொள்ளப்பட்டன. என்றாலும் நல்ல படங்கள் என்று சுட்டக்கூடிய திரைப்படங்கள் இந்த வருடமும் தமிழில் கிட்டத்தட்ட இல்லை என்றே சொல்லலாம் என சினிமா வட்டாரச் செய்திகளில் இருந்து அறிய முடிகின்றது.

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பெண்கள் சந்தோச வாழ்வு நடத்துவர். உறவினரின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள்.

**இடபம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். பணவரவு சராசரி அளவில் கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.

**மிதுனம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர் களுக்கு சலுகை கிடைக்கும். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடலாம்.

**கடகம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சி முழு அளவில் வெற்றி பெறும். தொழில், வியாபாரம் வியத்தகு வளர்ச்சி அடையும். பணவரவு அதிகரிக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பு வரும்.

**சிங்கம்:** நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். தொழில், வியாபாரம் சீராக கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை பெறுவர். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும்.

**கன்னி:** உறவினர் மத்தியில் நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பூர்வீகச் சொத்து கிடைக்க யோகமுண்டு.

**துலாம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையில் இருந்து விடுபடுவர். பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும்.

**விருச்சிகம்:** அதிர்ஷ்ட தேவதையின் அருள் பார்வை கிடைக்கும். வாழ்க்கைத்தரம் மேம்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவான இடையூறு எளிதாக விலகும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். விரும்பிய பதவி உயர்வு பெற அனுகூலம் உண்டு.

**மகரம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்று நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய மாற்றங்களை உருவாக்குவீர்கள். லாபம் உயரும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் கிடைக்கும்.

**கும்பம்:** அனைவரிடமும் அன்பு காட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள் உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

**மீனம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில் வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். மாமன், மைத்துனருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் கிடைக்கும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | | 2 | | 7 | |
| 5 | | | 4 | 3 | | 9 | | |
| | | 4 | | | | | | 3 |
| | | 9 | | | 6 | 5 | 3 | 7 |
| 7 | | | | 8 | | | | 6 |
| | 3 | 6 | 7 | | | 8 | | |
| 6 | | | | 7 | | 2 | | |
| | | 8 | | 9 | 4 | | | 1 |
| | 9 | | 5 | | 1 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 8 | 4 | 3 | 5 | 2 | 6 | 1 |
| 6 | 2 | 1 | 7 | 8 | 9 | 5 | 3 | 4 |
| 3 | 5 | 4 | 2 | 1 | 6 | 8 | 9 | 7 |
| 2 | 4 | 6 | 1 | 5 | 8 | 9 | 7 | 3 |
| 7 | 3 | 9 | 6 | 4 | 2 | 1 | 5 | 8 |
| 1 | 8 | 5 | 3 | 9 | 7 | 6 | 4 | 2 |
| 8 | 1 | 7 | 5 | 6 | 4 | 3 | 2 | 9 |
| 5 | 9 | 2 | 8 | 7 | 3 | 4 | 1 | 6 |
| 4 | 6 | 3 | 9 | 2 | 1 | 7 | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும், அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிக்கோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அட பாவிகளா... திரைப் பதிவாகவே வைச்சிட்டீங்களா...





சார்... என் பொண்டாட்டியோட வங்கிக் கணக்கில 5 லட்சம் ரூபாய் கட்டிட்டேன்...



வருமான வரித்துறை அதிகாரிங்க அவளைக் கைது பண்ணிடுவாங்களா... இல்ல இன்னும் கொஞ்சம் பணம் கட்டனுமா...

காதலி தன் காதலனுக்கு இரண்டு குறுந் தகவல்களை அனுப்பினாள்.
முதல் செய்தி காயப்படுத்தியது, இரண்டாவது செய்தி இதயத்தை உடைத்தது.
செய்தி 1 : “உன்ன எனக்கு இப்ப பிடிக்கலை, இதோட நிறுத்திப்போம்... பிரிஞ்சிடுவோம் bye bye”
செய்தி 2 : “சாரி... சாரி... சாரி... தெரியாம போன செய்தி அனுப்பிட்டேன்... அது வேற ஒருத்தனுக்கு அனுப்பினது”




குமரன் :)
நீங்கள் முட்டாளாய் இருப்பதற்குச் சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதை உணர்ந்திருந்தால், நீங்கள் முட்டாளாய் இருப்பதற்குச் சாத்தியக் கூறுகள் குறைவு!

## தலையலங்காரம்

படத்தில் காட்டியவாறு இரு பக்க தலைமுடியை கட்டிக் கொள்ளவும். மற்றைய பகுதி முடியை படத்தில் காட்டியவாறு உட்பக்கத்தால் சுற்றி எடுக்கவும். பின்னர் பான்ட் இட்டு கட்டிக் கொள்ளவும். அலங்காரம் தயார்.





## பாண் பழக் கலவை ரோல்

### செய்முறை:

முந்திரி, உலர் திராட்சை மற்றும் எல்லாப் பழங்களையும் ஒன்றாகக் கலந்துகொள்ளவும். பாண் துண்டுகளை ஓரம்வெட்டிக் கொள்ளவும். பாண் மீது ரின்பால் ஒரு தேக்கரண்டி தடவி நடுவில் கொஞ்சம் பழக்கலவை, சிறிது தேன் சேர்த்து பரப்பவும். பாணைச் சில்வர் பேப்பர்மீது வைத்து இறுக்கமாக ரோல் செய்து, குளிர்சாதனப்பெட்டியில் அரை மணிநேரம் வைத்து எடுத்துப் பரிமாறவும். பாண் பழக்கலவை ரோல் தயார். இதனைக் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவதுடன் சத்தான உணவாகவும் இருக்கும்.

### தேவையான பொருள்கள்

பாண் - 5துண்டுகள்
பொடியாக நறுக்கிய அப்பிள் - 2 தேக்கரண்டி
நறுக்கிய ஒரேஞ், கிவி, பப்பாசி, வாழைப்பழம் மற்றும் திராட்சைப்பழம் தலா - 2 தேக்கரண்டி
முந்திரி, உலர் திராட்சை (சேர்த்து) - 4 தேக்கரண்டி
ரின்பால் - 5 தேக்கரண்டி
தேன் - சிறிதளவு
சில்வர் பேப்பா
(ஃபாயில் பேப்பர்) தேவைக்கேற்ப.




## பாடசாலைப் பைகள்

உயர்தர பாடசாலைப் பைகள் அறிமுகமாகியுள்ளன. சிறப்பான வடிவமைப்பில் மாணவர்களுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளன. இவை ஆயிரத்து 800 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## பெண்கள்

### கர்ப்பமாவதைத் தடுக்கும் உணவுப் பழக்கம்

பெண்கள் கர்ப்பமாவதைத் தடுப்பதில் பெரிதும் காரணமாக இருப்பது இன்றைய வாழ்க்கைமுறையும், உணவுப் பழக்க வழக்கங்களும்தான்.

கர்ப்பம் தரிப்பது என்பது எளிமையான காரியம் அல்ல. சமீப காலமாக அதிகமான பெண்கள் கர்ப்பமாவதில் பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறார்கள். ஒருசில உணவுகளை அதிகமாக எடுத்துக் கொண்டால் எளிதில் கர்ப்பமாகக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

சில உணவுகளில் கருத்தரிப்பதற்குத் தேவையான சத்துக்களான விற்றமின் ஏ, ஈ, டி, ஆகியவை அதிகம் நிறைந்துள்ளன.



இந்தச் சத்துக்கள் நிறைந்த உணவை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் விரைவில் கர்ப்பம் தரிக்க வாய்ப்பிருப்பதாக மருத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள்.

இந்த உணவை ஆண், பெண் இருவருமே சாப்பிடவேண்டும். ஏனென்றால் இதில் உள்ள முட்டை மற்றும் காளானில் ஆண்களின் விந்தணுவை அதிகரிக்கும் சிக், விற்றமின் டி இருப்பதால் இது பெண்ணின் இனப்பெருக்க மண்டலத்திற்குத் தேவையான வலுவையும் வீரியத்தையும் தருவதால்; விரைவில் கர்ப்பம் உருவாகலாம்.

காலை உணவாக கோதுமை மாவில் பாதாம் பவுடரைச் சேர்த்து, அதனைச் சப்பாத்தி போட்டுச் சாப்பிட்டால், நல்ல பலன் கிடைக்கும். கருத்தரிப்பதை அதிகரிக்கும் உணவில் மிக முதன்மையானது, சால்மன் மீன்கள். இந்த மீன்களை கழுவி, அதில் இஞ்சியைத் துருவிப் போட்டு வினிகர், மிளகுத்தூள் சேர்த்து பிரட்டி, 20 நிமிடம் ஊறவைத்து, கிரில் செய்து சாப்பிட்டால் கருத்தரிக்கும் வாய்ப்பு அதிகம்.

பாலாடை உணவில் பெண்கள் கருத்தரிக்கத் தேவையான கல்சியம் அதிகம் இருக்கிறது. இதனை சாண்ட்விச் போன்று செய்து சாப்பிடுவது நல்லது. கடல் சிப்பியில் சிங் அதிகம் இருப்பதால், ஆண்கள் இதை அதிகம் சாப்பிடுவது நல்லது.


பெண்களுக்கு காம உணர்வைத் தூண்டக்கூடிய ஓமோனை அதிகப்படுத்தும் மற்றொரு இயற்கை உணவாக சிப்பி உள்ளது. அதிலும் கடல் சிப்பியில் ஒலிவ் எண்ணெய், மிளகாய்த் தூள், பூண்டு சேர்த்து பிரட்டி, ஊற வைத்து 10 நிமிடங்கள் நெருப்பில் வாட்டிச் சாப்பிட்டால் சுவையாக இருப்பதோடு விந்த ணுவின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

பெண்களுக்கு மிகவும் அவசியமான தாதுக்களில் ஒன்றாக போலிக் அமிலம் உள்ளது. உடல் மற்றும் வலிமையைப் பொறுத்தவரை ஆண்களைவிட பலம் குறைந்தவர்களாக பெண்கள் இருப்பதால், அவர்களுடைய உடலை பலமாகவும் திறனாகவும் வைத்திருக்க போலிக் அமிலம் உதவுகிறது. கர்ப்பமாவதில் பிரச்சினை உள்ளவர்கள் கோப்பி குடிப்பதை தவிர்த்து, பசளைக் கீரை, பார்லி, வெள்ளரிக்காய் ஆகியவற்றை ஒன்றாக அரைத்து மாலையில் குடித்து வந்தால் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணாத்துப் பூச்சி.!

## வ(எ)ண்ண மயங்களின் அலங்கார ஞாபகம்.!



உடலில் வரிவரியாக பளிச்சென்ற வண்ணத்தில் இருக்கும் கம்பளிப் புழுவானது (மயிர்க் கொட்டி) அதனைவிட வனப்புமிக்க வண்ணத்துப்பூச்சியாக உருமாற்றம்பெற்றிடத்தன்னையே அழித்துக் கொள்கிறது. இந்த உருமாற்றம் என்பது இயற்கையில் பொதிந்துள்ளஎத்தனையோ வியத்தகு அம்சங்களில் ஒன்றாக விளங்குகிறது.

ஆச்சரியமான விடயமாகக் கொள்ளக்கூடியது வண்ணத்துப்பூச்சியின் கூடு. முட்டையில் இருந்து வெளிவரும் கம்பளிப் புழுக்கள் தாம் உணவாக உட்கொள்ளும் தாவர இலைகளின் அடிப்புறத்தில்தான் சாதாரணமாக முட்டையிடுகின்றன. செடிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் கம்பளிப் புழுக்களின் பளபளப்பானகூடுகள்விநோதமான தோற்றத்துடன் இருக்கும். மனிதர்களின் வாழ்நிலையை ஒட்டி சில உயிரிணங்கள் தங்கள் வாழ்க்கை முறைமையை தகவமைத்துக் கொள்கின்றன. அதன் ஒரு பகுதியாகத்தான் வண்ணத்துப் பூச்சிகளின் வாழ்நிலையையும்கருத வேண்டியுள்ளது.

சாதாரணமாக வண்ணத்துப்பூச்சிகள் இடும் முட்டைகள் நிலவும் சாதாரண வெப்பத்தைப் பொறுத்து 3தொடக்கம் 12 நாள்களில் பொரித்து விடுகின்றன. பின்பு அவற்றிலிருந்துஉருவாகும் வண்ணமயமான முதல்நிலைப்புழுக்கள் தாவர இலைகளை வட்டவட்டமாகக் கடித்து உண்ணும் இருவாரங்கள் இலைகளைஉண்டபின் 2அங்குலநீள முள்ளகொழுகொழு கம்பளிப்புழுக்களாக அவை வளர்ந்து விடுகின்றன. இந்த வண்ணமயமான கம்பளிப்புழுக்களின் பின்பாகத்தில்கொக்கிகள் போன்ற இரண்டு பகுதி இருக்கும். இவற்றின் பயனுறுதியோடு வசதியான ஓர் இலையின் அடிப்புறமாக ஒட்டிக்கொண்டு கம்பளிப் புழுக்கள் தலைகீழாகத் தொங்க ஆரம்பிக்கும்.

இந்தநிலையிலேதான்கம்பளிப்புழுக்கள் உருமாற்றத்தின் முக்கிய கட்டத்தை அடைந்துகொள்கிறன்றன. தம்மையே அழித்துக்கொள்கிறன்றன. தமது தோலை சிறிது சிறிதாக இழந்து கூட்டுப்புழுக்களாக மாறுகின்றன. இந்த உருமாற்றம் சில மணி நேரங்களில்நடந்துவிடும்என்கின்றனர் விஞ்ஞானிகள். தலை கவிழ்ந்த பூஞ்சாடிகள் போன்ற இந்த கூட்டுப்புழுக்களைச் (24ஆம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### பொன்னையா கிருஷ்ணமூர்த்தி



ஏழாலை கிழக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கிருஷ்ணமூர்த்தி 28.12.2016 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமணி - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், திருமதி லீலாவதியின் கணவரும், புஸ்பலதா (ஜேர்மனி), சந்திரகுமார் (சுவிஸ்), புஸ்பகீதா ( UK) , ஜெயக்குமார் (சுவிஸ்), ரமணகுமார் (கணக்காளர்- பிரதேச செயலகம் பதவிஸ்ரீபுர), ரமணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி), தயாநிதி (சுவிஸ்), ஜெயக்குமார் ( UK), றாஜிதா (சுவிஸ்), சிவகுமாரன் (சுவிஸ்), ஷர்மினி (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிங்காரம், சுந்தரமூர்த்தி மற்றும் பொன்னம்மா, விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் சகோதரரும்,கஜானா, காயத்திரி, கவீனா, கவின், ஹர்சனா, கௌசிகன், தீபிகா, அபிராஜ், அனுஸ்கா, அபிஷயன், சுஜானன், ஆராதனி, அனுஷன், சுபிதா, சஹானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.01.2017 ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் காலை 9 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
(J/7251)
(11,18)
தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வல்வெட்டித்துறை தென்கிழக்கு (J|392) கிராம சேவையாளராக கடமையாற்றும் **திருமதி ஜெ.சங்கீதா** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி ஜெயலட்சுமி (ரஞ்சி) சிவகுருநாதன்

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிசங்கம்.
பிரதேச செயலகம், பருத்தித்துறை.
(N 213)
(22,18)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கதிர்காமு வாலாம்பிகை

**திதி: 30.12.2016**

நீதி வழுவா நெறிமுறையில்
மேதினியில் நாம் வாழ
வாழிகாட்டிய எமது தெய்வமே!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாய் ஆகிவிட்ட எம் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டு நீங்கி
ஆண்டுகள் ஐந்து நகர்ந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் பசுமையாகவே உள்ளன.
உங்கள் நினைவுகள் என்றும் மறைவதில்லை.

111/3, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் மாநகர சபை.

### 2017ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் திரு.பொ.வாகீசன், ஆணையாளர் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்துக்கு 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு இன் கீழ் யாழ்ப்பாணம் மாநகரசபை இற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகரசபைகள் அதிகாரப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள சகலவீடுகள், கட்டடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2016 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு/ மதிப்பீட்டை 2017 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு/ மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்றும், மேற்படி விலைமதிப்பின் அடிப்படையில் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனத்தின் மீது குறித்த மதிப்பீட்டுக்கு வருடாந்தப் பெறுமதியில் 6 சதவீதமான (6%) வருடாந்த வீதவரி விதிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2017 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகரசபையின் நிதியத்துக்குச் செலுத்தவேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீதவரித் தொகை யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிதியத்துக்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகரசபையினால் வழங்கப்படவேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% திலுமான (பதினைந்துவீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது20% திலுமான (இருபதுவீதம்) விறாந்துச் செலவுஅறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

மேற்படி அட்டவணை

| காலாண்டு | செலுத்தவேண்டியதிகதி | 5% கழிவுக்குஉரித்துப் பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவதுகாலாண்டு | 01.01.2017- 31.03.2017 | 31.01.2017 |
| இரண்டாவதுகாலாண்டு | 01.04.2017 – 30.06.2017 | 30.04.2017 |
| மூன்றாவதுகாலாண்டு | 01.07.2017 – 30.09.2017 | 31.07.2017 |
| நான்காவதுகாலாண்டு | 01.10.2017 – 31.12.2017 | 31.10.2017 |

குறிப்பு:- 2017 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப் பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகரசபை ஆதனவரிப் பகுதியில் நேரடியாக வந்து தமது ஆதன விவரங்களைத் தெரிவித்து 2017 ஆம் ஆண்டுக்கான ஆதனவரிகளைச் செலுத்தமுடியும் என்பதுடன் 31.01.2017 ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

யாழ்ப்பாணம் மாநகரநபை (சி/27515) (11.18) திரு.பொ.வாகீசன்- ஆணையாளர்

## மரண அறிவித்தல்



### நாகர் ஞானபண்டிதன்

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் ஞானபண்டிதன் 28.12.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், சீதாலட்சுமியின் அன்புக் கணவரும், ரவிராஜின் பாசமிகு தந்தையும், சுஜாவின் மாமனாரும், கிரிஷின் பேரனும், காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் ஞானசேகரம், காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில்.
(J/7249)
(11,18)
தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

1. Technical Officers (NDES,HND,(Civil), NCT (Civil) with Or without Experience) Willing to work anywhere in Northern Province.

திறமை,அனுபவம்,வேலை செய்யும் ஆற்றல் என்பவற்றிற்கு ஏற்ப வேதனம் வழங்கப்படும். வேலை செய்யும் போது Technical Officer இற்கு அவர்களின் தகுதியை வளர்த்துக்கொள்ளும் விதத்தில் பயிற்சிகள் வழங்கப்படும்.

No- 207, Navalar Road, Jaffna.
Email: sarukaya10@gmail.com

**021 221 3663, 077 712 0945**

## முக்கிய அறிவித்தல்

### அவசர கலந்துரையாடல்

29.01.2017 அன்று யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ள வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தொடர்பாக கலந்துரையாடவேண்டி உள்ளதால் **15.02.2015** இற்கு பின்னரும் **11.09.2016** இற்கு முன்னரும் சித்தியடைந்த மாணவர்களை அழைக்கின்றோம்.

**இடம் : நாவலர் கலாச்சார மண்டபம்**
**காலம் : 31.12.2016 (சனிக்கிழமை)**
**நேரம் : மு.ப 9.00 மணி**

**வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் மனிதகுலம் மேம்பட அளித்தவையே முழுமைநல வாழ்விற்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்

**தனிமனிதன் உயரவும் அதன் மூலம் பிறரை உயர்த்தவும் ஏற்றமிகு பயிற்சியே மனவளக்கலை யோகாவாகும். இக் கலையின் மாண்புணர்ந்து பயிற்சி பெற்று உடல் நலம், உளநலம், உயிர் வளத்தோடு நோயற்ற வாழ்வையும் மன நிறைவையும் கருணையையும் அமைதியையும் விளக்கி திசைகாட்டியாக நிற்கும் மனவளக்கலை யோகா பயில வாருங்கள்.**

**நிகழ்ச்சிகள்:**

**காலம் - 31.12.2016 தொடக்கம் 06.01.2017 வரை**
**நேரம் - பி.ப 5.00 மணி தொடக்கம்**
**இடம் - அறிவுத்திருக்கோயில் யாழ்ப்பாணம்.**

**தலைமை:**

**மனவளக்கலை பேராசிரியர் : அருள்நிதி முருகானந்தவேல் அவர்கள் (தலைவர் யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)**

**பயிற்சிகளை வழங்குபவர்:**

**மனவளக்கலை பேராசிரியர் : அருள்நிதி ச. இந்திரா அவர்கள் (தமிழ் நாடு - இந்தியா)**

**பயிற்சிகளின் விவரம்:**

**31.12.2016 அறிமுக உரை ( இலவசம்)**
**01.01.2017 தொடக்கம் 06.01.2017 வரை ஆளுமை திறனாக்கப்பயிற்சிகள் (PDC) அவையாவன**

- *காயகல்ப பயிற்சி
- *எளியமுறைத்தியானம்
- * எளிய முறை உடற்பயிற்சிகள்
- *அகத்தாய்வு பயிற்சிகள்

**அகத்தாய்வு I (PDC முடித்தவர்களுக்கு)**
**31.12.2016 சனி 9.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை**
**01.01.2017 ஞாயிறு 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை**

### உலக நல வேள்வி

**"தனி மனித அமைதியே உலக அமைதிக்கு வழி"**

மலரும் புத்தாண்டில் உலக அமைதி வேண்டி யாழ். அறிவுத் திருக்கோவிலில் 01.01.2017 காலை 7.00 மணிக்கு **உலக நல வேள்வி** நடைபெறவுள்ளது. அதில் மனவளக்கலை அன்பர்கள் கலந்து கொள்ளலாம்.

### கூட்டுத்தவம்

தினமும் காலை 6.10 மணி முதல் 6.30 மணி வரை அறிவுத் திருக்கோயிலில் கூட்டுத்தவம் நடைபெறவுள்ளது.
மனவளக்கலை பயின்ற அன்பர்கள் கலந்து கொள்வதன் மூலம் உங்கள் தவ ஆற்றலை மேம்படுத்திக் கொள்ளக் கூடியதாகவிருக்கும்.
மேற்படி மனவளக்கலை யோகா பயிற்சிகளை பயின்று பயன் பெறவென அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
"வாழ்க வளமுடன்"

அறிவுத்திருக்கோயில்
இல.81, பிறவுன் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
021 222 2772

யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.

# 15 லட்சம் ஆப்கான் அகதிகளை திருப்பி அனுப்பியது பாகிஸ்தான்

பதினைந்து லட்சம் அகதிகளை திருப்பி யனுப்ப பாகிஸ்தான் முடி வெடுத்துள்ளது. பாகிஸ்தானிலுள்ள ஆப்கான் அகதிகள் பலர், தமது ஒட்டுமொத்த வாழ்வையும் இங்கேயே வாழ்ந்தவர்கள் என்று பாகிஸ் தான் ஊடகம் தெரி வித்தது. ஆப்கானில் வன்முறைச் சூழல் தொடர்வதாகக் கூறும் அகதிகள் பலர், நாடுதிரும்புவது தம் வாழ்வை நிச்சயமற்றதாக்குமென அஞ்சு கிறார்கள். (வ)

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1327
சீட்டிழுப்பு திகதி 2016.12.29

வெற்றி இலக்கங்கள்
40 44 45 48 F

2875996 3012038

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 15,741,480/-

Web: www.dlb.lk

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

Development Fortune

சீட்டிழுப்பு வாரம் ▶ 03
சீட்டிழுப்பு திகதி ▶ 29.12.2016 வியாழக்கிழமை

| வெற்றி இலக்கங்கள் | | | | சுப்பர் இலக்கம் | அதிர்ஷ்ட மாதம் |
|---|---|---|---|---|---|
| 02 | 05 | 51 | 60 | 02 | மார்ச் |

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 5, 717, 440/= | 2, 538, 080 | 1, 000,000 |

2016.12.31 திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

**SUPER BALL**
சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 595
சீட்டிழுப்பு திகதி 29.12.2016 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்
23 26 48 52 Q

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.46,212 300/=

**விசேட வெற்றி இலக்கத்தினை கொண்ட 07 இலக்கங்கள் பொருந்துவதன் மூலம்**

| | | விசேட வெற்றி இலக்கம் | விற்பனை முகவர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | மோட்டார் வாகனம் | 0365401 | பி.ஜி.பி.எல்.கே. டீசில்வா (மாத்தறை) |
| 2 ஆம் பரிசு | ஸ்கூட்டி பைக் 5 | 421 2330 | டபிள்யூ .சி. பெரேரா (குருனாகல்) |
| | | 7250839 | எஸ்.செனரத் (கொழும்பு) |
| | | 0391637 | எச். ஜீ. ஸ்வர்ணலதா (கேகாலை) |
| | | 0674319 | ஏ.பி. சாந்தி டீசில்வா (கம்பஹா) |
| | | 5236588 | கே. சந்திரலதா ( அனுராதபுரம்) |

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919
நீல நிற டிக்கட்டுக்கள் 2016.12.31 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்



# பிலிப்பைன்ஸில் குண்டுவெடிப்பு சம்பவங்களில் 39 பேர் காயம்

பிலிப்பைன்ஸின் லெய்ட்டே மாகாணத் தின் மத்திய பகுதியில் உள்ள ஹில்லாங் கோஸ் என்ற இடத்தில் நேற்று குத்துச் சண்டைப் போட்டி நடைபெற்ற போது, திடீர் என குண்டு வெடித்தது. இதில் 33 பேர் படுகாயமடைந்தனர். இதேபோல் மிண்டனோ தீவுப் பகுதி நெடுஞ்சாலையில் நிகழ்த்தப்பட்ட மற்றொரு குண்டு வெடிப் பில் 6 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்புச்சம்பவங்களுக்கு இஸ்லாமிய பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்பிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹில்லாங்கோஸ் நகரில் மேலும் ஒரு குண்டு வெடிக்காத நிலையில் கண்டெ டுக்கப்பட்டுள்ளது. இவ்விரு குண்டு வெடிப்பு சம்பவங்களிலும் படுகாயம் அடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத் துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**ஞானேஸ்வரி (குஞ்சு)**
**தவபாலசிங்கம்**

எமது குடும்ப விளக்கின் திடீர் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து நேரில் அஞ்சலி செலுத்தி யோருக்கும், தொலைபேசிகள், பத்திரிகைகள், முகநூல், இணையத்தளங்களினூடாக அனுதாபச்செய்திகள் அனுப்பி யோருக்கும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர்க்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த 30.11.2016 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தின் அணையா விளக்கு அமரர் ஞானேஸ்வரி (குஞ்சு) தவபாலசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் (30.12.2016) வெள்ளிக்கிழமை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அதில் பங்கு பற்றுவதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை மனமுவந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

**அருந்தவநாதன் (சகோதரன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளவால்..!

செ.கோமகன்



ஒரு முன்னிரவு நேரமதில் என் இல்லத்தின் முற்றத்தில் அமர்ந்திருந் தேன். தரை மீது ஏதோ ஒரு பூச்சி ஊர்ந்து செல்வதை அறிந்து கொண்டேன். அது வழக்கமாகப் பார்க்கும் பூச்சிகளைப் போல் அல்லாமல், வித்தியாசமான வடிவில் இருந்தது. அருகே சென்று பார்த்தேன். ஆச்சரியம்,அதுவொரு வெளவால் குட்டி.

ஒரு வெளவால் குட்டி இவ்வளவு சிறியதாக இருக்கும் என்பதை இது வரை நினைத்துப் பார்த்ததில்லை. ஏறத்தாழ ஓர் அங்குல நீளமே இருந்தது. அண்மையில்தான் பிறந்திருக்க வேண்டும். தரையில் குட்டி தன் இறக்கையை இரண்டு புறங்களிலும் சற்று பரப்பியவாறே ஊர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தது. அந்தக் குட்டி வெளவாலை கையில் எடுத்தால் அதன் மென் உடலுக்கு ஏதேனும் காயங்கள் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சி ஒரு சிறிய விளக்குமாற்று குச்சியை எடுத்தபடி அதன் பின்னங்கால்களுக்கு அருகே வைத்தேன். நான் எதிர்பார்த்தது போல அது தன் பின்னங்கால்களால் குச்சியை கவ்விப் பிடித்துக் கொண் டது. குச்சியை மெல்ல மேல்நோக்கி தூக்கி னேன். வெளவால்களுக்கே உரித்தான இயல் பூக்கத்தோடு அந்தக் குட்டி தலைகீழாக தொங்கிக் கொண்டிருந்தது.

இப்போது என்ன செய்வது என்ற சிந்தனை. எனக்கு ஒன்றும் புரியவில்லை. வெளவால்கள் விளக்கை அணைத்த பிறகுதானே பறக் கத் தொடங்குகின்றன என்பதான ஞாபகமூட்டல். சற்று இருட்டாக இருந்த சுவரின் மேல் பகுதியில் அக்குச்சியோடு சேர்த்தே வெளவால் குட்டியை வைத்துவிட்டேன். அந்தக் குட்டியும் அக ஒலியை எழுப்பி தன் தாயை வர வழைத்து விடக்கூடும் என்பதே எனது நம் பிக்கையாக இருந்தது. உண்மையில் வெளவால்களைக் குறித்து நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய தகவல்கள் பல உள்ளன. தெரிந்து கொள்வோம்.

**வெளவால்களின் பரிணாமம்**

ஒவ்வொரு முறையும் வெளவால் ஒரே ஒரு குட்டியை மட்டுமே ஈனும். இப்படி வெளவால்கள் ஒரே ஒரு குட்டியை ஈனுவதற்குரிய காரணத்தை அறிந்து கொள்ள அதன் பரிணாம வளர்ச்சிப் பாதையில் பின்னோக்கி ஒரு பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. முழுமையாக வளர்ச்சியடைந்த வெளவால்களின் புதை படிவங்கள் ஐந்து கோடி ஆண்டு களுக்கு முந்தைய பாறை இடுக்குகளில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக சொல்லப் படுகிறது. அந்தவகையிலே வெளவால் மிகப் பழைமையான உயிரினம். பறவைகள் தோன்றிய பல காலங்களின் பின்பாக பாலூட்டி களுள் சில சிற்றினங்கள் காற்றில் சறுக்கிப் பறக்கும் ஆற்றலைப் பெற்றன. இவை கொலுகோ என்று அழைக்கப்பட்டன. ஆரம்ப கால பூச்சியுண்ணிகள் தங்கள் பரிணாம வளர்ச்சியின்போது ஒரு குறிப்பிட்ட இடை நிலையைக் கடந்துதான் மேற்சொன்ன கொலுகோவாக மாறியிருக்கின்றன. கொலு கோவுக்கு உதாரணமாக போர்னியோ காடுகளில் காணப்படும் பறக்கும் லீமர் விளங்குகிறது.

பறக்கும் அணில்களைப் போல காணப்படும் இவை வெளவால்களை போலவே தலை கீழாக தொங்கும் தன்மையுடையவை. இந்த கொலுகோதான் உண்மையான பறக்கும் பாலூட்டிகளாக விளங்குகின்றன. அதாவது வெளவால்களாக மாறின என்பது உயிரிய லாளர்களின் கருத்தாக விளங்குகிறது.

மேலும் பறவைகளுக்கு ஒரு மாற்றாக இப்படி வெளவால்களை உருவாக்க வேண்டிய அவசியும் இயற்கைக்கு இருந்தது. பறவைகள் பகலில் பறந்து பூச்சிகளை உணவாக உட்கொள்கின்றன. இதனால் இரவு நேரப் பூச்சிகள் பெருகின. எனவே இவற்றை கட்டுப் படுத்த இத்தகையதொரு பரிணாம மாற்றம் நிகழ்ந்ததாக கூறப்படுகிறது. இருப்பினும் பறவைகளுக்கு இல்லாத ஒரு பிரச்சினையை வெளவால்கள் சந்திக்க நேர்ந்ததாக சொல்லப்படுகிறது.

**வெளவால்களின் இயல்பூக்கங்கள்**

பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பவை. வெளவால்களின் மூதாதைகளோ பாலூட்டிகள். பாலூட்டிகள் வழிவழி யாக நஞ்சுக் கொடிய்ய பெற்றிருப்பவை. பரிணாமக் கடிகாரம் என்பது எப்போதும் பின்னோக்கி சுழல்வதில்லை என்ற தாற்பரியத்தின் படி வெளவால்கள் பறக்கும் தன்மையை பெற்று விட்டன.

பொதுவாக எல்லோருக்கும் வெளவால்கள் குறித்து ஒரு வெறுப்பான மனநிலையே காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக மேற்கு உலகத்தோருக்கு இவை ரத்தப் பிசாசாகவே காட்சியளிக் கின்றன. இதற்கு வாம்பயர் என்ற ஒரு வகை வெளவாலே கார ணம். இது 10 செ.மீ. அளவேயுள்ள ஒரு சிறிய வகை வெளவால். இந்த வகை வெளவாலின் எச்சிலில் குருதி உறைவதை தடுக்கும் எதிர்ப்பு பொருள் உள்ளது. இவை தூங்கும் விலங்கின் தோலில் கடிக்கும்போது தன் எச்சிலையும் கலந்து விடுகின்றன. இதன் காரணமாக வெளிவரும் குருதியானது இயல்பாக உறை வதற்கு முன்பு ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு தொடர்ந்து

வெளிவந்தபடியே இருக்கும். இப்படி ஒழுகும் குருதியை இந்த வெளவால் உறிஞ்சிக் குடிக்கிறது. இது ஏறக்குறைய குருதியை உறிஞ்சிக் குடிக்கும் அட்டையைப் போன்றது தான். சமயங்களில் உறங்கும் மனிதனும் இந்த சிறிய வெளவாலின் கடிக்கு ஆளாகிவிடுவதால் இவை ரத்தக் காட்டேரியாக [illegible] பட்டு விட்டன. இதைத் [illegible] எந்த வகை வெளவாலும் குருதியை உறிஞ்சுவதில்லை. பெரும்பாலும் ஏனையவை பூச்சியுண்ணிகளே.

**வெளவால்களின் வகைப்பாடு**

வெளவால்களில் ஏறத்தாழ இரண்டாயிரம் வகைகள் இருக்கின்றன. இவற்றில் இந்தியாவில் மாத்திரம் 73 வகைகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இருந்தாலும் வெளவால்களை குறித்த முழுமையான ஆய்வு இன்னமும் நடைபெறவில்லை என்பதே உண்மை. ஆனால் எல்லா வகை வெளவால்களும் சூழலியலுக்கான தனக்குரித்தான பங்கை செலுத்திக் கொண்டே இருக்கின்றன. அந்தாட்டிக்காவை தவிர அனைத்து கண்டங்களிலும் காணப்படும் வெளவால்களில் அமெரிக்காவில் காணப்படும் ஒரு குறிப்பிட்ட வகை வெளவால்கள் மட்டும் ஆண்டுக்கு 20 ஆயிரம் தொன் எடையுள்ள பூச்சிகளை உட்கொள்வதாக கூறப்படுகிறது. இந்த தகவலே வெளவால்கள் ஏன் பாது காக்கப்பட வேண்டும் என்பதை எமக்கு உணர்த்துகின்றது.

இந்தபூச்சியுண்ணிவகைவெளவால்களைப் பற்றி சொல்லும் ஆய்வாளர்கள் கொமந்தோங் குகை என்ற பெயரை தவிர்க்க இயலாது என்கின்றனர். ஏனெனில் உலகிலேயே அதிக வெளவால்கள் வசிக்கும் இடம் இதுதான் என்று கூறப்படுகிறது. இந்த ஒரேயொரு குகையில் மட்டும் சுமார் 20 இலட் சம் வெளவால்கள் வசிக்கின்றன. இந்த வகை வெளவால்கள் ஒவ்வொன்றும் ஓர் இரவில் மட்டும் தன் உடல் எடைக்கு நிகரான அளவுக்கு பூச்சிகளை உண்பதாகவும் இவை சூழலுக்கு ஆற்றும் நன்மைகளை ஒரு நிமிடம் நினைவுகூர வேண்டும் எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**உணவுப் பழக்கம்**

எல்லா வகை வெளவால்களும் பூச்சிகளை உண்பதில்லை. சில வகை வெளவால்கள் பூந்தேன், பூந்தாது ஆகியவற்றை உண்ணுகின்றன. இத்தகைய வெளவால்களுள் ஒன்றுதான் விடிகாலை வெளவால்கள். இந்த வகை வெளவால்களின் நாக்கு மிக நீளமாக அமைந்திருக்கும். பூவுக்குள் தன் நாக்கை துழாவி இவை தேனை உண்கின்றன. விலை உயர்ந்த பழ வகைகளில் ஒன்றான டூரியன் இந்த வெளவால்கள் இல்லாது போனால் தங்களது இன விருத்தி செயற்பாட்டை மேற்கொள்ளவிய லாத நிலை தோன்றும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஏனெனில் இதன் மலர்கள் நள்ளிரவில் மலர்ந்து விடியலில் உதிர்ந்துவிடும் தன்மை கொண்டவை. எனவே அந்த குறிப்பிட்ட நேரத்துக்குள் மகரந்தச் சேர்க்கை நடக்க வேண்டியது அவசியம். இம் மலர் பூத்தவுடன் அதன் வாசனையை முகர்ந்து கொள்ளும் இவ்வகை வெளவால்கள் விரைந்து சொல்கின்றன. பப்பாளி, வாழை போன்ற தாவரங்களிலும் மகரந்தச் சேர்க்கை நடை பெற வெளவால்கள் உதவுகின்றன.



## நைஜீரியாவில் பட்டினியால் பல லட்சம் மக்கள் பரிதவிப்பு

நைஜீரியாவில் பல லட்சம் மக்கள் கடும் உணவுப் பற்றாக் குறையை எதிர் கொள்கிறார்கள் என ஐ.நா. மீண்டும் எச்சரித்துள்ளது.

அங்கு உடனடி உதவிகள் கிடைக்காவிட்டால் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பட்டினியால் உயிரிழக்க நேரிடும் எனவும் ஐ நா கூறுகிறது. அதில் பெரும்பாலானோர் சிறார்கள். (வ)

**கொக்கோகோலா(மென்பானம்) சோடா விநியோகத்திற்கு பணியாளர்கள் தேவை**

கரடிப்போக்குச்சந்தி கிளிநொச்சியில் இயங்கும் **சிவகுருஹாட் வெயார்** நிறுவனத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் ஆண் பணியாளர்கள் தேவைப்படுவதால் நேரடியாக உரிமையாளருடன் தொடர்பு கொள்ளவும் .குறித்த பணியில் போதிய அனுபவமுள்ளவர்களும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் விரும்பத்தக்கது சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

1. விநியோகப் பணியாளர்
2. கணக்காளர் (கணினியில் போதிய அறிவும் அனுபவமும் உடையவராக இருத்தல் வேண்டும் )
3. சோடா விற்பனை முகவர்

**தொடர்புகளுக்கு .0777722305**

## மரண அறிவித்தல்கள்

### செல்வக்குமாரன் மயூரன்


மயிலிட்டி நக்கட்டியோடையை பிறப்பிடமாகக் கொண்ட செல்வக்குமாரன் மயூரன் U:K இல் 28.12.2016 புதன் கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரதும் சுப்பிரமணியம் - புவனேஸ்வரி தம்பதியினரதும் அன்புப்பேரனும் Dr.செல்வக்குமாரன் -Dr.மனோகரி தம்பதியினரின் ஏக புத்திரனும் சிவகுமாரன் - நிர்மலாதேவி தம்பதியினரின் பெறா மகனும் ஜெயதாசன்- சுலோசனா ,குமாரசாமி-லீலாவதி (கனடா), வள்ளிகாந்தன் - றோகினி (கனடா),சண்முகநாதன்-புஸ்பா (கனடா),ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற சிவாஜினி மற்றும் செந்தூரன் செந்தீபன் (கட்டார்) ,லக்ஷிகா ஆகியோரின் உடன் பிறவாச்சகோதரனும் காலஞ்சென்ற ஆரணி மற்றும் திலிப்காந் (கனடா), விமல்காந் (கனடா), ஜானகி (அமெரிக்கா) ,தாரணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார் .அன்னாரின் இறுதிக்கிரியைகள் U.K இல் இடம்பெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

**கருகம்பனை ,**
**காங்கேசன்துறை.**

**தகவல்**
**செ.சிவகுமாரன்.**

### சண்முகம் சுந்தரம்பிள்ளை ஆறுமுகம்



காரைநகர் களபூமி பாலாவோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சண்முகம் சுந்தரம்பிள்ளை ஆறுமுகம் 29.12.2016 வியாழக்கிழமை காலமாகிவிட்டார் .

அன்னார் சுந்தரம்பிள்ளை அம்பலவாணரின் சகோதரனும் பரிமளத்தின் அன்புக்கணவரும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரிய்யகள் இன்று 30.12.2016 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக களபூமி தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

**பாலாவோடை,**
**களபூமி,காரைநகர்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**0778863346**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத்துப் பூச்சி.!

(23ஆம் பக்கத் தொடர்ச்சி

சுற்றியதாக மெழுகுப்படலம் போன்ற மெல்லிய தோல் இருக்கும். இவை நாளடைவில் கண்ணாடி போல வெளிப்படையாகி உள்ளிருப்பவை தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கும்.

இந்த நிலையிலிருந்து இரு வாரங்களின் பின்பாக இந்த கூட்டுப்புழுக்கள் அழகான வண்ணத்துப் பூச்சிகளாக மாறி விடுகின்றன. அதன்பிறகு கூட்டின் தோல் பகுதியைக்



கிழித்து வெளிவருகின்றன. வயிற்றுப்பகுதியில் உள்ள குருதியின் மூலம் சத்தைப் பெறும் வண்ணத்துப் பூச்சிகள் இறக்கைகளை மெதுமெதுவாக விரிக்கும். உடலிலுள்ள கூடுதல் திரவப் பொருள்களை வெளியேற்றும். தமது இறக்கைகள் காயவும், உறுதியாக மாறவும் காத்திருக்கும். என்னதான் இறக்கைகள் எடை குறைவாக இருந்தாலும் உடனடியாக அவற்றால் பறக்க முடியாது.

முட்டையிட்டது முதல் வண்ணத்துப்பூச்சி பிறக்கும் வரை மொத்த செயன்முறைகளும் நடந்து முடிவதற்கு ஒரு மாத காலம் ஆகிறது. ஒரு நாள் அதிகாலை நான் அவசரமாகப் வேலைத்தளத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது வண்ணத்துப் பூச்சியொன்று கூட்டைக் கிழித்து பிறந்துவிட்ட தகவல் நண்பனிடமிருந்து கிடைத்தது. அன்றையதினம் வண்ணத்துப்பூச்சி பிறந்தவுடன் பறக்க முடியாத இயல்பு கொண்டது என்பதை நேரடியாகப் பார்த்து அறிந்துகொண்டேன். அந்த வண்ணத்துப்பூச்சி நீண்டநேரம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

அதன் இறக்கைகள் கூட்டின் உள்ளே இருந்ததுபோல உட்புறமாக வளைந்து இருந்தன. இறக்கை விரிய நாழிகைகளை தன்னுள் சுவீகரித்துக்கொண்டிருந்தது. அதன் இயல்பூக்கத்தைத் தொந்தரவு செய்யக்கூடாது என்பதால் நானோ நண்பனோ எந்தக் காரியங்களையும் செய்யவில்லை. காலையில் பிறந்த அந்த வண்ணத்துப்பூச்சி மாலை வேளையிலே நான் வீடு திரும்பிய போதும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. ஞாபகங்களும் வண்ணாத்துப்பூச்சிகளின் சிறகாய் படபடத்தபடி அமைதி கொள்கிறது. ஆக,இயற்கை எத்தனையோ அதிசயங்களைத் தன்னுள் பொதித்து வைத்துள்ளது.அழகான வாழ்வியலாய் அலங்கரித்து வைத்துள்ளது.

அழகு மிகுந்த, நுணுக்கமான இதுபோன்ற வண்ணத்துப்பூச்சியை ஆறறிவு படைத்த எம்மால் உருவாக்க முடியுமா என்ற கேள்வி எழுந்து மறைகிறது. இயற்கை என்றென்றைக்கும் எமைப் பார்த்துப் புன்னகைத்தபடி வியப்பூட்டுகின்றது.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 . 01 . 1965



மறைவு 02 . 01 . 2014

**அமரர் ஐயம்பிள்ளை கற்பகவரன்**

திதி: பிரதமை

ஆண்டுகள் மூன்று அகன்றாலும்- ஆறிடுமோ
உமைப்பிரிந்த சோகம்!
எப்போதும் நாம் மீளப்போவதில்லை- இத்
துயரில் இருந்து
நற்குணமும் நல்லெண்ணமும் கொண்ட- உங்களை
யாருக்குத்தான் பிடிக்காது போகும்- அது தான்
காலனுக்கும் பிடித்து விட்டது போல
கல்லறைக்குள் இழுத்து விட்டான்.

உமது ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(J 7248)
(22,18)

மனைவி- செல்வமலர்
பிள்ளைகள்- சாய்சரன், சாத்வீகன்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**அம்பலவாணர் இரத்தினசபாபதி**

திதி: துதியை

தோற்றம்
1958.05.31

மறைவு
2016.11.30

கற்பகத் தருபோல் எம்மைக் காத்து நின்றீர்கள்
கற்பனை செய்யும் முன் காலனவன் கவர்ந்து சென்றானோ ?
ஆறாத் துயருடன் உங்கள் ஆன்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்

*ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!*

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்தியக்கிரியையிலும் கலந்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 135, மானிப்பாய் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி

அமரர்

**தேசமான்ய. லயன் கந்தசாமி சிவபாலன் M.J.F, J.P (WI)**

(சாமசிரீ தேசாபிமானி, தேசபந்து விஸ்வகீர்த்தி, லங்காபுத்ர, இறைபணிச் செம்மல்)

**(ஓய்வுநிலை இலங்கை வங்கி சிரேஷ்ட முகாமையாளர் – வவுனியா)**



எங்கள் குடும்ப ஒளி விளக்கே!
ஒளி கொடுத்த விளக்கு அணைந்து
ஓராண்டு சென்று விட்டதே
தந்தையாய் இருந்தெமக்கு – தகுதியாய்
தலைமை தாங்கினீர்களப்பா.
எந்தையைக் காணாதிங்கே
ஏங்கியே தவிக்கின்றோமப்பா
வாழ்வே இடிந்துவிட்டதப்பா – எந்தன்

வாழ்வும் முடிந்து விட்டதப்பா
அப்பாவே எழுந்து வாருங்கள்
வங்கியில் முகாமை செய்தீர்கள்
வளம்பெற லயன்சிற் குதவினீர்கள்
அங்கமா யானந்த இல்ல
அற்புத விளக்கு மாவீர்களப்பா
தங்குமால் கணபதிக்கு
தகுந்ததோர் கோவில்கட்டி
எங்குமே போற்றும் தேச
விஸ்வநல் கீர்த்தியானீர்களப்பா
அப்பா உங்கள் சேவைகள் மறைந்திடுமா
எல்லோரையும் கவரும் கம்பீரக் குரலைத்
தேடித்தேடி தேம்பி அழுகிறோமப்பா
இந்த வீடே அழுகுதப்பா
பாரெல்லாம் உன் புகழைப் போற்ற
பாரினில் கடமையால்க் கரைந்திட்ட தலைவனே!
அநாதையாய் ஆனது நாங்களப்பா

நீங்கள் இருந்தபோது நாங்கள்
இழந்தது எதுவுமில்லை – இழந்த பின்னர்
இழப்பதற்கு எங்களிடம் எதுவுமில்லையப்பா
காலங்கள் ஆயிரமானாலும்
கண்வீட்டு மறைவாரோ எங்கள் அப்பா
அப்பா still sleeping எனக் கூறும்
பேர மக்களுக்கு விடைகூறத்
தெரியாது தவிக்கிறோமப்பா
அப்பா நீங்கள் செய்த புண்ணியத்தின் பேறாக
படுக்கையில் விழுந்து பரிதவிக்காமல் – அந்த
பரந்தாமன் தன் திருவடிக்கே அழைத்தாரோ
கடமைகள் யாவும் முடிந்துவிட்ட நிம்மதியில்
உங்கள் தூவிழியை மூடி அன்றொன்று
எட்டவே சென்ற போதும்
எம் விழியமுது சோரத்
திட்டமாய் வருவீர்களென்று
தேம்பியே அழைக்கின்றோமப்பா
குடும்ப அஸ்திவாரம் அஸ்தமனமானதினால்
நிலைகுலைந்து தடுமாறி நிற்கின்றோமப்பா
என்றும் நீங்காத நினைவுகளுடன்
கனத்த நெஞ்சோடு உங்கள்
வரவுக்காய் ஏங்கி நிற்கும்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!**

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லை...

வேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

தேர்தலை பிற்போட்டு வரும் மோசடி மிக்க நடவடிக்கைக்கு எல்லை நிர்ணயக் குழு ஆதரவு வழங்கி வருகின்றது.

கடந்த 27ஆம் திகதி எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை அமைச்சுக்கு வழங்குவதற்கு தீர்மானமாகியிருந்த போதிலும், அது ஒப்படைக்கப்படுவதற்கு தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று கீர்த்தி தென்னகோன் மேலும் தெரிவித்தார். (வ-5)

## சுரேஸின்...

இல்லை, பௌத்தத்திற்கு முன்னுரிமை, வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை என்று தேசிய அரசின் அமைச்சர்கள் தெளிவாக அழுத்தம் திருத்தமாகச் சொல்லியுள்ளனர். தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் பின்னரும், வழி நடத்தல் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இருவரும் ஏன் இருக்க வேண்டும். அதிலிருந்து விலக வேண்டும். அரசுடன் பேச்சு நடத்தி இணக்கப்பாடு காண வேண்டும்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமசந்திரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் இரா. சம்பந்தனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அது அவரின் தனிப்பட்ட கருத்து. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் விரைவில் நடைபெறும். அதில் இந்தக் கருத்தைப் பரிசீலிப்போம் - என்றார். (வ-5)

## சட்டவரைவு...

வைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு மாகாண சபைகளில் முன்வைக்க முன்னர், சட்டவரைவு தொடர்பில் மாகாண முதலமைச்சர்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அதனை செய்திருக்கவில்லை.

அவ்வாறு தெளிவுபடுத்தியிருந்தால் குறித்த சட்டவரைவு மாகாண சபைகளால் நிராகரிக்கப்பட்டிருக்காது. எனினும், சட்டவரைவு நிராகரிக்கப்பட்டமை குறித்து அரசு கவலை அடையவில்லை" என்று நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4)

## உத்தரவாதம்...

பங்காளிக் கட்சியான புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

இரண்டு நிபந்தனை களின் அடிப்படையில் ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு ஒரு வருட கால நீடிப்பு வழங்கத் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தக் கருத்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் தனிப்பட்ட கருத்து. கூட்டமைப்பாக அவ்வாறு முடிவு எடுக்கப்படவில்லை. இரண்டு வருட காலத்தில் செய்து முடிக்காதையா அரசு ஒரு வருட காலத்தில் செய்து முடிக்கப் போகின்றது.

ஒரு வருட கால நீடிப்பு வழங்க வேண்டுமானால், அரசிடமிருந்து உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் பரிசீலிக்கலாம். உத்தரவாதம் இல்லாமல் கால நீடிப்புக்கு ஆதரவு வழங்கக் கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார். (வ-5)

## இலங்கை...

பேச்சாகவே இது நடைபெற்றுள்ளது.

இந்தியாவில் இழுவைமடி மீன்பிடி முறைமைக்கு தடை விதிப்பது தொடர்பில், கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற முதல் கட்டப் பேச்சில் ஆராயப் பட்டிருந்தது. இதற்கு இந்திய அரசு கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்திருந்தது. இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் இந்தப் பேச்சில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது தொடர்பாகவும் இதன் போது பேசப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி, இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். இரண்டாம் கட்டப் பேச்சு, ஜனவரி 2 ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## மைத்திரியிடம்...

வெளியிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் உடன்பாடு விடயத்தில் இரகசிய தரகு இடம்பெற்றிருப்பதாக அரசில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய, எதிரணியைச் சேர்ந்த மக்கள் விடுதலை முன்னணி மற்றும் கூட்டு எதிரணியைச் சேர்ந்தவர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து சீனா அதிருப்தி அடைந்துள்ளது. அரசில் இடம்பெற்றுள்ள ஜாதிக ஹெல உறுமய, அம்பாந்தோட்டை உடன்பாட்டுடன் தொடர்புடைய சில அமைச்சர்கள், சீனாவுக்குச் சென்று தரகுப் பணம் பெற்றதாக சுமத்தியுள்ள குற்றச்சாட்டை முன்வைத்திருப்பது தொடர்பான சீனாவின் கவலையை ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்துள்ளார் சீனத் தூதுவர் யாங்லியாங். (வ-5)

## சிறுவர்...

யசாலைச் சுற்றாடலில் உள்ளவர்களிடமிருந்து நன்கொடையாக எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2017ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்திலும், தென் பகுதியிலும் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு தலா ஆயிரம் மில்லியன் ரூபா அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சிறுவர் வைத்தியசாலையானது மாகாணத்தில் உள்ள போதனா வைத்தியசாலையுடன் இணைந்ததாகவே அமைக்கப்பட உள்ளது. யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையாக இந்த வைத்தியசாலை அமைக்க வேண்டும். போதனா வைத்தியசாலை சுற்றாடலில் அண்ணளவாக 1.5 ஏக்கர் பரப்பளவான காணி தேவையாக உள்ளது.

போதனா வைத்தியசாலைச் சுற்றாடலில், இலகுவில் போக்குவரத்துச் செய்யக்கூடிய மையப் பகுதியில் காணி உள்ளவர்கள், நன்கொடையாளர்கள் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு காணி தந்துதவ வேண்டும்.

இன்னும் சில மாதங்களில் பணிகள் ஆரம்பிக்கப்படாதவிடத்து ஒதுக்கப்பட்ட நிதியானது வேறு பகுதிக்குத் திருப்பப்படும் சாத்தியமுள்ளது. அடுத்த ஆண்டு இந்த நிதி வடபகுதிக்கு ஒதுக்கப்பட வாய்ப்பு இல்லை. காலியில் சிறுவர் வைத்தியசாலை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இலங்கையில் தற்போது கொழும்பிலும் கண்டியிலும் மாத்திரமே சிறுவர்களுக்கான நவீன வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைகள் அமைந்துள்ளன - என்று அந்தப் பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5-10)

## அபிவிருத்தி...

மாகாண சபையில் இந்தச் சட்டவரைவு அடுத்த மாதமே விவாதத்துக்கு எடுக்கப்படுகிறது.

மாகாண சபைகளின் ஒப்புதலை பெறுவதற்காக கொழும்பு அரசால் அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. வடக்கு, வடமத்திய, வடமேல், ஊவா, தென், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளில் இந்தச் சட்ட வரைவு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சட்ட வரைவுக்கான ஒப்புதல் வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காக மேல் மாகாண சபை நேற்றுக் கூடியது. மேல் மாகாணசபையின் முடிவு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

சபையில் சட்டவரைவு முன்வைக்கப்பட்டு விவாதம் நடத்தப்பட்டது. சட்டவரைவுக்கு ஆதரவாக 28 வாக்குகளும், எதிராக 52 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன. 24 வாக்குகளால் சட்ட வரைவு தோற்கடிக்கப்பட்டது. இலங்கையில் உள்ள 9 மாகாண சபைகளில் எட்டு மாகாண சபைகளில் இந்த வரைவு நிராகரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையில் அடுத்த மாதமே இந்த வரைவு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. கிழக்கு மாகாண முதலமைச்சர், இந்த வரைவை எதிர்க்கப் போவதாக ஏற்கனவே தெரிவித்துள்ளார். (வ-5)

## மகாநாயக்கர்...

யோசனையை பிரதமரிடம் முன்வைத்தனர். அந்த ஐந்து அம்ச யோசனையில் முதன்மையானது ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டே அரசமைப்பு உருவாக்கப்பட்ட வேண்டும் என்பதாகும்.

தமிழர் தரப்பு கூட்டாட்சியைக் கோருகின்ற போதிலும், தெற்கு அதை எதிர்த்து ஒற்றையாட்சியின் கீழே தீர்வு அமைய வேண்டும் என்று கூறி வருகின்றது. அதுபோக, தமிழீழம் உருவாகும் வகையிலான ஒரு தீர்வை பிரதமர் தமிழருக்கு வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளார் என்ற பரப்புரையும் தெற்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பிரதமரிடம் தெளிவைப் பெறுவதற்காகவே மேற்படிச் சந்திப்பு பிரதமருக்கும் மகாநாயக்க தேரர்களுக்கும் இடையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பையடுத்து பிரதமருக்கு வழங்கப்பட்ட ஐந்து அம்ச யோசனையை அடிப்படையாக வைத்தே அரசமைப்பை உருவாக்குதல் என்ற முடிவுக்கு ஐக்கிய தேசிய கட்சி வந்துள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)

## 2017 இல்...

தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. ஜனாதிபதியாகாமலே நாட்டை நிர்வகிப்பேன் என்றும் சூளுரைத் துள்ளார். இலங்கையிலுள்ள வெளிநாட்டு ஊடகங்களின் செய்தியாளர்களுடன் கொழும்பில் நேற்றுச் சந்திப்பு நடத்தினார். கொழும்பு அரசியலில் மிகப் பிரபலமான 'அப்பத்துடனேயே' இந்தச் சந்திப்பு நடந்தது.

சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஆண்டில் தற்போதைய அரசைக் கவிழ்ப்பதுதான் எனது நோக்கம் - திட்டம். நாடாளுமன்றத்தில் அரசுக்கு மூன்றிலிரண்டு பலம் இருக்கின்றது. தற்கால அரசியல் நிலமையை கவனத்தில் எடுத்துப் பார்க்க வேண்டும். எதிர்காலத்தில் நிலமைகள் மாற்றமடையலாம்.

தேசிய அரசில் இணைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கும் - சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் மோதல்கள் - முரண்பாடுகள் நிலவுகின்றன. இப்போதுள்ளது போன்று அவர்களால் எதிர்காலத்திலும் தொடர முடியாது - என்றார்.

"19ஆவது திருத்தத்தின் அடிப்படையில் ஜனாதிபதி ஒருவர் இரு தடவைக்கு மேல் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாது. அரசமைப்பில் மாற்றம் இன்றி முன்னாள் ஜனாதிபதி ஒருவர் அரச தலைவராக முடியாதா" என்று செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த மகிந்த, நாட்டின் தலைவராகும் எண்ணம் எனக்குக் கிடையாது. நாட்டின் தலைவராக இல்லாமலேயே நாட்டை நிர்வகிக்க முடியும் - என்றார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் நீங்கள் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவருடன் ஒன்றிணைந்து செயற்பட முடியுமா" என்ற கேள்விக்கு, தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அதனைச் செய்ய முடியுமாக இருந்தால், 1970 ஆம் ஆண்டிலிருந்து நன்றாக அறிமுகமான நபருடன் என்னால் அவ்வாறு செயற்பட முடியும். அப்படியான நிலமை ஏற்பட்டால், நிபந்தனைகளுடன்தான் அவ்விதம் செயற்படுவேன் - என்றார். (வ-5)

## இறுதிப்...

கொழும்பில் நேற்று நடத்திய சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரில் இந்திய அரசு உதவியது என்று இந்தியாவின் அயலுறவுத்துறை அமைச்சின் முன்னாள் செயலர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்திருந்தார். அது உண்மையா?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, நான் ஏற்கனவே இதனைக் கூறியுள்ளேன். எமது போர் வெற்றிக்கு இந்தியா பங்களிப்புச் செய்தது என்றார்.

"உங்களுக்கு ஆதரவாக இருந்த இந்தியா பின்னர் ஏன் நிலைப்பாட்டை மாற்றியது" என்ற கேள்விக்கு, இந்தியாவின் தவறான கணிப்பீடு காரணமாக இருந்திருக்கலாம். அமெரிக்காவின் அழுத்தமும் அதற்கு காரணமாக இருந்திருக்கக் கூடும்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், இந்தியா, அமெரிக்கா, றோ உளவுச் சேவை என்பன எனக்கு எதிராகச் செயற்பட்டன. எனக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கும் நடவடிக்கைகள் 2011ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்றார்.

*சீன முதலீடு*

அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்குவது குறித்து நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இது குறித்து தொடர்புடைய சீன நிறுவனத்துக்கே தெரிவித்துள்ளேன். எனது ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்ட 750 ஏக்கர் மட்டுமே வழங்கப்பட்டது. கொழும்புத் துறைமுகத்துக்கு சீன நீர்மூழ்கிக் கப்பல் எனது ஆட்சிக் காலத்தில் வந்தபோது இந்தியா சத்தமிட்டது. ஆனால் தற்போது எனது இந்திய நண்பர்கள் எலி போன்று நடந்து கொள்கின்றார்கள்.

எனது ஆட்சிக் காலத்தில் எதிர்ப்பு வெளியி
இந்தியா இப்போது அமைதியாக இரு
தற்கு காரணம், திருகோணமலை, பலா
காங்கேசன்துறை என்பன கிடைப்பதா
என்பது எனக்குத் தெரியவில்லை என்ற
(வ

## நாட்டின்...

வழங்கிய நேர்காணலில் அவர் மே
தெரிவித்ததாவது:

சிறப்பு அமைச்சை உருவாக்க நல்லா
அமைக்கப்படவில்லை. சிறப்பு அமை
உருவாக்கும் எந்தவொரு சட்டவரைவுக்
நாம் ஆதரவு வழங்கப் போவதில்லை.
லாட்சி என்று சொல்லிக் கொண்டு வேறு
வாகத்தைக் கொண்டு செல்ல நாட்டில்
மளிக்க முடியாது. இந்த நாட்டுக்கு அ
ருத்திச் சட்டம் தேவை. அதிகளவான
லீட்டாளர்களை நாட்டுக்குக் கொண்டு
வதற்கு இது அவசியமானது.

ஜே.ஆரின் அதிகாரத்துக்கு எதிராக
போராடினோம். ஜனாதிபதி மைத்திரி
தனது அதிகாரத்தை தானே குறைத்
கொண்டார். அந்த அதிகாரத்தை
எவருக்கும் கொடுக்க முடியாது. மீண்
ஜனாதிபதிக்கும் வழங்க முடியாது.

அபிவிருத்திச் சிறப்பு சட்ட வரைவை
வாக்கிய சட்டத்தரணி இந்தச் சட்டத்தை
ளவுக்கு அறிந்து வைத்திருக்கின்றார் என்
தெரியவில்லை. நாட்டின் அரசைப் ப
தெரியாத முட்டாள் ஒருவரே இதனை
வாக்கியிருப்பார் - என்றார். (

## புதிய...

உருவாக்கம் நடைபெறுகின்ற விதம் குறி
சந்திப்பு நடத்தப்பட்டது. புதிய அரசமை
தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை
றார்.

புதிய அரசமைப்புக்கு ஆதரவு வழ
வீர்களா இல்லையா என்ற கேள்விக்கு
சமைப்புத் தொடர்பில் அரசினதும், ஜ
பதியினதும் நிலைப்பாடு என்ன எ
குறித்து இதுவரை வெளிப்படுத்தப்படவில்
அதன் பின்னரே எனது நிலைப்பாட்
தெரிவிப்பேன்.

அரசமைப்பு மாற்றம் நடைபெறுமா எ
குறித்தே எனக்குச் சந்தேகம் இருக்கி
என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடி வென்றது யுனிபைட் கழகம்

யாழ்ப்பாணம், டிசெ. 30
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யுனிபைட் அணி வெற்றிபெற்றது.
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசியமட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா வி.கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்திருந்தன. சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் யுனிபைட் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)







# கலைவாணி, எவரெஸ்ட் அணிகள் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 30
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கலை வாணி மற்றும் புத்தூர் எவரெஸ்ட் அணிகள் வெற்றி பெற்றன.
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசியமட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் முதலாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பாரதி அணி மோதியது. இதில் நாவாந்துறை கலைவாணி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



யாழ். சதுரங்க முற்றம் நடத்தத் திட்டமிட்ட நடப்பு வருடத்துக்கான தொடர் யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று ஆரம்பமானது. நியம வேக கட்டுப்பாட்டு போட்டிகள் நேற்று நடைபெற்றன. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ். டிசெ. 30
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய மட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலையொளி அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அண்ணா ஸ்ரார் அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதவுள்ளது. (ம-23)

# வருகிறார் ரோகித்



இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ரோகித் சர்மா களமிறங்க அதிக வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.
ஒக்ரோபர் மாதம் நியூசிலாந்து அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியது.
விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்தில் ரோகித் காயமடைந்தார்.
அவருக்கு லண்டனில் வைத்து அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
இதனால் அண்மையில் முடிவடைந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரோகித் பங்கேற்கவில்லை.
தற்போது அவர் பூரணமாகக் குணமடைந்துள்ளதால் இங்கிலாந்துக்கு எதிராக ஜனவரி 15 ஆம் திகதி ஆரம்பமாகும் ஒருநாள் தொடரில் ரோகித் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இங்கிலாந்துத் தொடரில் பங்குபற்றுவதற்கு உடல் தகுதியை நிரூபிக்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற வுள்ள ரஞ்சிக் கிண்ண ஆட்டமொன்றில் ரோகித் விளையாடுவார் என்று அறிவிக்கப்பட்டது. (ம)



# கறுப்புத் துடுப்புக்கு மீண்டும் அனுமதி

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடரில் கறுப்பு நிறத் துடுப்பு மட்டையைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.
மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான ரசல் சிட்னி அணிக்காக ஒப்பந்தமாகி விளையாடி வருகிறார். சிட்னி அணியின் முதலாவது ஆட்டத்தில் அவர் கறுப்பு நிறத் துடுப்பு மட்டையை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் அனுமதியின் அடிப்படையில் பயன்படுத்தினார். ஆனால் குறித்த துடுப்பு மட்டை பந்தின் இயல்பான தன்மையைப் பாதிக்கிறது என்று நடுவர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த வகைத் துடுப்பு மட்டை தடை செய்யப்பட்டது.
தற்போது, பந்தைப் பாதுகாக்க உதவும் தெளிவான மேற்புற அட்டை சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து கறுப்புத் துடுப்புக்கு மீண்டும் அனுமதி கிடைத்தது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. - பாக். டெஸ்ட் சமநிலையை நோக்கி

ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்படுகிறது. மெல்போர்ணில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 443-9 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக அசார் அலி ஆட்டமிழக்காமல் 205 ஓட்டங்களையும், சொகைல் கான் 65 ஓட்டங்களையும், சபிக் 50 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் கசில்வூட், பேட் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், ஸ்ராக், லையன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா மூன்றாம் நாள் முடிவில் 278-2 என்றிருந்தது. கவாயா 95 ஓட்டங்களுடனும், சிமித் 10 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 97 ஓட்டங்களுடன் கவாயாவை வீழ்த்தி சதத்துக்கான வாய்ப்பைத் தகர்த்தார் ரியாஸ். சிமித்துடன் ஹான்ட்ஸ்கொம் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

சிமித் அரைச்சதம் கடந்தார். பாகிஸ்தானின் ஓட்டங்களை எட்டக்கூடிய நம்பிக்கையை ஹான்ட்ஸ்கொம் ஏற்படுத்தினார். சிமித்தின் ஆட்டத்தில் [illegible]ாய்வு ஏற்படவில்லை. அச்சுறுத்தல் நிறைந்த ஆமிர், ரியாஸ் கூட்டணியை எதிர்த்து சதம் கடந்தார். அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார் ஹான்ட்ஸ்கொம். மழை குறுக்கிட நாள் முடிவில் ஆஸ்திரேலியா 465-6 என்றுள்ளது. சிமித் 100 ஓட்டங்களுடனும் ஸ்ராக் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)






# தொடரை வெல்வதை உறுதி செய்தது நியூசி.

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது நியூசிலாந்து. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. நியூசிலாந்தின் ஆரம்ப வீரராக குப்தில் மற்றும் லாதம். முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ஓட்டமெதனையும் பெறாத நிலையில் குப்திலை வீழ்த்தினார் மோர்ரசா. 14 ஓட்டங்களுடன் வில்லியம்சனை பவிலியனுக்குத் திருப்பினார் தஸ்கின் அகமட். லாதமும் ஆட்டமிழக்க 47 ஓட்டங்களுக்கு முன்வரிசையை இழந்தது நியூசிலாந்து. புறூம் ஓர் முனையில் நிலைத்து நின்றார். மறு முனையில் நிலைத்து நின்று நீண்ட இணைப்பாட்டத்தை வழங்க எவராலும் முடியவில்லை. இருப்பினும் நீஸ்கம் மற்றும் ரோஞ்சி இருவரும் அவ்வப்போது சிறு இணைப்பாட்டங்களை வழங்கினர். சதம் கடந்தார் புறூம். மறு முனையால் இலக்குகள் சரிய 251 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து. புறூம் 109 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் மோர்ரசா 3 இலக்குகளையும், அகமட், சகிப் அல்கசன் இருவரும் தலா 2 இலக்குகளையும், றோய், ஹொசைன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷுக்கு சவுத்தி பெரும் அச்சுறுத்தலை வழங்கினார். போல்ட், சவுத்தி என்ற வேகப் பந்து வீச்சுக் கூட்டணி ஓட்டங்கள் பெறப்படும் சராசரியையும் மிகையாகக் கட்டுப்படுத்தியது. 16 ஓட்டங்களுடன் இக்பால் ஆட்டமிழந்தார். சகிப் அல் ஹசன், மொஸ்டக் ஹொசைன், ரன்பிர் ஹைடர் என மத்திய வரிசை வீரர்களை வீழ்தினார் வில்லியம்சன். துடுப்பாட்டத்தில் காட்டிய தடுமாற்றத்துக்கு பந்துவீச்சின் மூலம் பரிகாரம் செய்தார் வில்லியம்சன். பின்வரிசையில் சவால் வழங்கவல்ல நரூல் ஹசன், மோர்ரசா இருவரையும் போல்ட் ஆட்டமிழக்கச் செய்ய 184 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் பங்களாதேஷ் பறிகொடுத்தது. 67 ஓட்டங்களால் வென்றது நியூசிலாந்து. தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று 2:0 என்று முன்னிலையில் உள்ளது நியூசிலாந்து. இதனால் அடுத்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் நியூசிலாந்தே கிண்ணம் வெல்லும். (ம)

# எல்.பி.டபிள்யு. 10,000

டெஸ்ட் கிரிக்கெட் அரங்கு தனது 10 ஆயிரமாவது எ.பி.டபிள்யு. தீர்ப்பைக் கண்டுள்ளது. 10 ஆயிரமாவது எல்.பி.டபிள்யு. ஆட்டமிழப்பை ஏற்படுத்திய பெருமையை இலங்கையின் வேகப் பந்துவீச்சாளர் பிரதீப் பெற்றார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் 48 ஓட்டங்களுடன் அம்லாவை எல்.பி.டபிள்யு. முறையில் வீழ்த்தினார் பிரதீப். இந்த இலக்குச் சரிவே டெஸ்ட் கிரிக்கெட் அரங்கின் 10 ஆயிரமாவது இலக்குச் சரிவாக அமைந்தது. (ம)



# தென்னாபிரிக்காவை வீழ்த்துவோம் சுரங்க லக்மலுக்கு இப்படியும் நம்பிக்கை

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெறும் நம்பிக்கையை வெளியிட்டார் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான சுரங்க லக்மல். நேற்றுமுன்தின மூன்றாம் நாள் நிலவரத்தின் படி தென்னாபிரிக்காவே ஆதிக்கம் செலுத்தும் நிலையில் உள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 286 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை 205 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மூன்றாம் நாள் முடிவில் தென்னாபிரிக்கா அணி 351-5 என்றுள்ளது. இதுவரையிலுமான நிலவரத்தின் படி தென்னாபிரிக்கா 432 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. இந்த ஆட்டம் நடைபெற்றுவரும் போர்ட் எலிசபேத் மைதானத்தில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக 400 ஓட்டங்களைப் பெறுவது கடினம் என்றே கடந்த கால பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்றன. நிலமை இவ்வாறிருக்க லக்மல் தென்னாபிரிக்காவை வீழ்த்தும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.



தென்னாபிரிக்க அணி 500 ஓட்டங்களை எமக்கு இலக்காக நிர்ணயித்தாலும் அதை விரட்டிப் பிடிக்கும் வல்லமை எமக்கு உண்டு. இரு இணைப்பாட்டங்கள் சிறப்பாக அமைந்துவிட்டால் இந்த இலக்கு பெரிய விடயமல்ல என லக்மல் மேலும் தெரிவித்தார். (ம)




# ரகிம் விலகினார்

நியூசிலாந்துக்கு எதிரான தொடரிலிருந்து ரகிம் முழுவதுமாக விலகினார் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்தது. நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் ரகிம் காலில் காயமடைந்தார். இதனால் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர் பங்கேற்க மாட்டார் என்று அணியின் மருத்துவக் குழு ஏற்கனவே கணித்திருந்தது. ஆனால் தற்போது அவர் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் இருந்து முழுவதுமாக விலகினார். ரகிமால் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் பங்கேற்க இயலாது. ஒருவேளை அவர் குணமடைந்து அணியுடன் இணைந்தால் அது அணிக்கு அதிர்ஷ்டமாக அமையும் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்தது. (ம)

# லிவர்பூல் முன்னேற்றம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தரப்படுத்தலில் லிவர்பூல் அணி இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் லிவர்பூலை எதிர்த்து ஸ்டோக் சிற்றி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வெற்றிபெற்றது. ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் அடம் லானா, 45 ஆவது நிமிடத்தில் பேர்மினோ, 63 ஆவது நிமிடத்தில் ஜியனனெல்லி, 70ஆவது நிமிடத்தில் டானியல் ஆகியோர் லிவர்பூலின் கோல்களைப் பதிவுசெய்தனர். ஸ்டோக் சிற்றியின் சார்பாக பதிவான கோலை ஜோன் வோல்ட்டேர்ஸ், ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் பெற்றிருந்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்றுத் தீர்ந்தன

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டத்துக்கான நுழைவுச் சீட்டுக்கள் விற்றுத் தீர்ந்தன என்று இந்திய கிரிக் கெட் சபையின் தரப்பில் அறிவிக்கப்பட்டது. புனேயில் ஜனவரி 15ஆம் திகதி இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம)

## செல்சி வென்றது

இங்கிலாந்துக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் செல்சி அணி வெற்றிபெற்றது.

செல்சியை எதிர்த்து போர்ண்மெத் அணி மோதியது. ஆட்டத்தின் 37 ஆவது நிமிடத்தில் பெட்ரோ செல்சி முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த சில நிமிடங் களில் ஈடின் ஹஸார்ட் பிறிதொரு கோலைப் பதிவு செய்தார். முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக் கம் செலுத்தியது செல்சி. இரண்டாம் பாதியில் பிறிதொரு கோல் பதிவாக முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் செல்சி வெற்றிபெற்றது.

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
முகாமைத்துவ உதவியாளர்
சனி (31.12) 09.30 → 1.00
சட்டமாணி நுழைவு
சனி (31.12) 11.00 → 2.00
கணக்காளர் சேவை, வங்கி, தொழில் அலுவலர் வகுப்புக்கள் 07.01.2017 முதல் மீண்டும் நடைபெறும்.
தொடர்பு:
076 688 3394,
021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
* முகாமை உதவியாளர் (MA)
* சட்டமாணி ( LLB )
* வங்கியியல்
* காணி வெளிக்கள போதனாசிரியர்
ஆகிய போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
ஆரம்பம்-08.01.2017
ஞாயிறு-2.00-5.00 pm
பிரதிஞாயிறு
2.00-5.00 pm
விரிவுரையாளர்கள்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்
T.P - 077 4696695

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2019
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
பிரிவு 1 ஆரம்பம்
01-01-2017
ஞாயிறு
9.00 மணி

வேலைவாய்ப்பு
கணினி ரைப்செற்றிங், Pagemaker, Coreldraw வில் வீட்டில் வைத்தோ பணி இடம் வந்தோ செய்து தரக்கூடியவர்கள் தேவை.
077 504 0714

வேலைவாய்ப்பு
நகரில் உள்ள அச்சகத்துக்கு பணியாளர் தேவை. ஓய்வுபெற்றவர்கள், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
077 504 0714

PHYSICS GROUP CLASS
Thanchi Lane, Arasadi Road, Jaffna.
A/L - 2019
தமிழ்மொழி மூலம்,
English Medium
வகுப்புக்கள்
ஆரம்பம் : 01.01.2017 (ஞாயிறு) 4.30 P.M
By : K.Selvan. B.Sc (Hons)

வாடகைக்கு தேவை
கொழும்பிலுள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு யாழ். நகரில் கட்டடத்தொகுதி அல்லது வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு :- 071 432 5002



# தெ. ஆபிரிக்காவின் பிடியிலிருந்து விடுபட பலமாகப் போராடுகிறது இலங்கை அணி

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் 488 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது தென்னாபிரிக்க அணி. இலங்கை அணி தற்போது 240-5 என்ற நிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 286 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் லக்மல் 5 இலக்குகளையும் பிரதீப், கேரத் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை, 205 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக தனஞ்சய டி சில்வா 43 ஓட்டங்களையும், மத்தியூஸ் 39 ஓட்டங்களையும், சந்திமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிளன்டர் 5 இலக்குகளையும், அப்பொட் 3 இலக்குகளையும், ராபாடா, மகாராஜ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

81 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா, மூன்றாம் நாள் முடிவில் 351-5 என்றிருந்தது. பிளாசிஸ் 41 ஓட்டங்களுடனும் குயின்டன் டி ஹொக் 42 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 69 ஓட்டங்களுடன் கேரத்திடம் எல்.பி.டபிள்யு. ஆனார் குயின்டன். 406-6 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது தென்னாபிரிக்கா. பந்துவீச்சில் தனஞ்சய டி சில்வா இரு இலக்குகளையும், லக்மல், பிரதீப், சமீர, கேரத் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு இலக்குச் சரிவில்லாமல் 87 ஓட்டங்களைப் பகிர்ந்து பலம் சேர்த்தனர் ஆரம்ப வீரர்களான கருணாரத்ன மற்றும் சில்வா. 43 ஓட்டங்களுடன் கருணாரத்னவும் 48 ஓட்டங்களுடன் சில்வாவும் ஆட்டமிழந்தனர். 6 ஓட்டங்களுடன் வழக்கம் போல் தடுமாற்றினார் குசல் பெரேரா. குசல் மென்டிஸ் மற்றும் மத்தியூஸ் இருவரும் அரைச்சதம் கடந்து ஆறுதல் வழங்கினர். 58 ஓட்டங்களுடன் மென்டிஸை வீழ்த்தினார் ரபாடா. சந்திமல் 8 ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திருப்பப்பட்டார். நாள் முடிவில் இலங்கை 240-5 என்றுள்ளது. மத்தியூஸ் 58 ஓட்டங்களுடனு[illegible] தனஞ்சய 9 ஓட்டங்களுடனும் களத்தில் உ[illegible]ளனர். (ம)

# பார்சிலோனாவில் தொடர விருப்பம்; தலைவர் இனியஸ்டா தெரிவித்தார்

ஸ்பெய்னின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான பார்சி லோனாவில் தொடர்ந்தும் நிலைத்திருக்க விருப்பம் தெரி வித்தார் அந்த அணியின் தற்போதைய தலைவரான இனியஸ்டா.

பார்சிலோனா - இனியஸ்டா இடையிலான ஒப்பந்தம் 2018ஆம் ஆண்டு ஆரம்பத்துடன் முடிவடைகிறது. இந்த நிலையில் இனியஸ்டா தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

2018ஆம் ஆண்டு எனது ஒப்பந்தம் முடிவடைகிறது, எனது விருப்பம் பார்சி லோனாவுடன் தொடர வேண்டுமென்பதே. முழு உலகமும் இதை அறியும். இதில் இரகசியம் ஒன்றுமில்லை. எனினும், நான் பார்சிலோனாவில் நீடிக்கலாமா என்பதை, எனது பெறுபேறு மட்டங்களே தீர்மா னிக்கும் என இனியஸ்டா தெரிவித்தார்.

பார்சிலோனா நிர்வாகம் தனது வீரர்களுடனான ஒப்பந்தத்தை புதுப்பித்து வருகிறது. இந்த நிலையில் இனியஸ் டாவின் கருத்தும் முக்கியத்தும் வாய்ந்தது எனப் பார்க்கப்படுகிறது. (ம)



## ரென்னிஸ் நட்சத்திரம் இவானோவிக் ஓய்வு

சேர்பியாவின் நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை யான அனா இவானோ விக், ரென்னிஸ் தொடர்களில் இருந்து ஓய்வு பெறு[illegible]றேன் என நேற்று அறிவித்தார். பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணங்களை அதிகளவில் கைப்பற்றா விட்டாலும் அதற்கு அடுத்த படியான அந்தஸ்து பெற்ற கிண்ணங்கள் பலவற்றை இவானோவிக் சொந்தமாக்கியவர். இவானோவிக்கின் ரென்னிஸ் வாழ்க்கையின் ஆகச் சிறந்த அடைவாக 2008ஆம் ஆண்டு பிரான்ஸ் கிண்ணத் தைக் கைப்பற்றியமையைக் குறிப்பிடலாம். அவரது ஓய்வு ரென்னிஸ் உலகில் சில அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

காயம் காரணமாக கடந்த சில மாதங்களாக அவதிப்பட்டு வருகிறேன். கடந்த காலங்களில் வெளிப்படுத்திய போராட் டகரமான ஆட்டத்தை இனி என்னால் வெளிப்படுத்த இயலும் என்பது சந்தேகமே. எனவே ஓய்வு பெறுவது சிறந்தது என்று எண்ணுகிறேன். இது கடினமான விடயமாக இருக்கும், ஆனால் இதில் கொண்டாடப் பட சில விடயங்கள் உள்ளன என இவானோவிக் மேலும் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org